திராவிடநாடு

பொங்கல் மலர் 1959.

பொட்டாகுடி பெரியநாயகர்
ஸ்ரீ வெ. கோவிந்தசாமி அவர்களின்
தொகுப்பு

...நாடு
என். ஜி. ...யன,
பட்டுக்கோட்டை.

தித்திக்கும் செய்தி!

(கருணனந்தம்)

நட்டுவைத்த வாழைமரம் வெட்ட வெட்ட
நலியாமல் குருத்துவிட்டுத் துளிர்க்கும்; இன்று
எட்டுவைத்தால், ஓராண்டில் எண்ணூறாகும்;
எதனாலும் இதைத்தடுக்க இயலா தன்றோ?
"விட்டு வைத்தால் தானாகப் பட்டுப் போகும்;
வெறுங்கையா முழம்போடும்?" என்று நம்மைத்
திட்டுவதால் அழித்துவிடத் திட்டம் மிட்டோர்
சிறுமதியால் கருதிவந்தார், கெட்டா போனேம்?

தெளிவான கொள்கையிலே தீராப் பற்றும்;
சிந்தித்துச் செயல்புரியுந் திறனும் பெற்று;
எளியாரின் வாழ்வுயர்த்தும் மனமும், என்றும்
எதைக்கண்டும் இளிக்காத பண்புங்கொண்டு;
துளியாகப் பெய்ம்மழைதான் வெள்ளம் என்னுந்
துணிவோடு; குனியாமல் பணிகள் ஆற்றி,
உளிதானே சிறிதெனினும் மலையைப் போக்க
உதவிதரும், என்பதனை உளத்தில் ஏற்றுக்

கடமைதனைச் செய்கின்றோம்! கைம்மா றேதும்
கருதவில்லை, வளர்கின்றோம், உறுதி யாக!!
மடமையினல் தவறாகக் கணக்குப் போட்டு
மாற்றார்கள் நமைவீழ்த்த முயலல் விந்தை!
உடமையெலாம் ஒழிந்தாலும், உயிர்போ னாலும்
ஒருக்காலும் இழிசெயல்கள் புரிய மாட்டோம்?
திடமான முடிவிதுதான்! பொங்கல் நாளில்
தித்திக்கும் செய்தியன்றோ, தென்னாட் டார்க்கே?

இன்பநாளிது

இதயம்பாடுது!

தம்பி!

திருநாளாம் திருநாள்! திருநாள் என்ன வேண்டிக்கிடக்கிறது நமக்கு? துக்கம் துளைக்கிறது, வேதனை கொட்டுகிறது, இந்நிலையில், மனையில் மகிழ்ச்சி மலரும் வகைபற்றி எழுதுதல்தான இயலுமா?—என்று எண்ணிடும் நிலையில் உள்ளேன் என்பதை அறிந்துள்ள தம்பி, வெதும்பித்,தான் கிடக்கும் அண்ணன் மனம், விழாநாளன்று வழங்கும் வகைவகையான களிப்பூட்டும் கருத்துக்களை இம்முறை பெறப்போவ தில்லை என்று நிச்சயம் தீர்மானித்துத்தான் இருந்திடுவாய் என்பதை அறிவேன்; அடிகள் இட்டி போட்டுப் போட்டு, கடாவிக் காடாவி, மனநிலையை விளக்கிடும் மடலேனும் தீட்டித் தருக என்று பணித்து, எனை வேலைவாங்குகிறார்.

ஆம்! தம்பி! ஆருத்துமர் தாக்கிய நிலையால், ஆண்டுக்கோர் முறை தமிழர் தம் இல்லம் தங்கி இன்புறச்செய்து, இல்லாமை, இயலாமை என்பன போன்ற இடுக்கண்களையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை அளித்திடும், விழாக்கோலம் கூட, எனக்கு வேம்பாகிக் கிடக்கிறது. ஆறுதல் பெறும் வழி வந்துற்ற அல்லலை எண்ணி எண்ணி மனம் அழிந்து படுதலன்று, மற்றையோரின் மகிழ்ச்சி கண்டு மனநிறைவு பெறுதலும், மற்றையோருக்கு மகிழ்வு அளிப்பதன் மூலம் மன நிம்மதி பெறுவதுமே, சாலச் சிறந்த முறை என்பதை உணர்ந்திட முடிகிறது. ஒருபுறம், வெதும்பிய நிலை; மற்றோர்புறம், தமிழர் தம்

மனைதோறும் மனை தோறும் அரும்பி அழகளித்து, மலர்ந்து மணம் பரப்பிடத்தக்க மாண்புமிகு திருநாள் குறித்தெழும் எண்ணங்கள்!

சதங்கையும் கிண்கிணியும், கிளிமொழியும், குழலிசையும், இல்லங்களில் எழவேண்டும்; எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும்; எழில் பூத்திடவேண்டும் ஏற்றம் கண்டிடல்வேண்டும், எண்ணத்திலே புதுவண்ணங்கள் சேர்ந்திடவேண்டும்; எக்குறையும் இலாதொழியவேண்டும், பட்டபாட்டின் பலன் நுகரவேண்டும், அதனாலாய பண்புபெற்று அகமகிழவேண்டும்; மகவு கண்டு தாயும், மானைக்கண்டு மணாளனும், அக்காட்சிகண்டு பெற்றோரும், களிப்படைதல் வேண்டும்; கனிமொழியும் கருணை பொழியும் விழியும், தோழமையும் எங்கும் வழிந்திடல் வேண்டும்; புன்னகை பொலிவளிக்க, பூவிதழ் 'இச்சொலிக்'க, புத்தாடை அழகளிக்க, பொங்கலோ! பொங்கல்! என்று மனையுளார் மகிழ்ந்தொலிக்க, ஊரெல்லாம் உள்ளமெலாம், உவகை பொங்கிட வேண்டும். என் உள்ளத்திலே சுமை ஏறி நெரித்திடுவதால், எங்கும் பொங்கிடவேண்டும் என்று யான் விழையும் நல்லெண்ணம் எங்ஙனம் பிறவாதிருக்கும்; அஃது அடாதது மட்டுமன்று, அறமுமாகாதன்றோ! எனவே, என்னை வாட்டிய வேதனையை, எங்கும் எழுந்திடும் இன்னிசைகொண்டு, வீழ்த்தத் துணிவுகொண்டேன், விழாவில் பங்கேற்க முன்வந்தேன்.

இஃதென்ன புதுமையோ! அன்று, அன்று! கரும்பு சுமந்து வந்து, இரும்பு மனம் படைத்த பண்ணையாரிடம் தந்துவிட்டு, வழிந்திடும் வியர்வையைத் துடைத்திடக் கந்தலெடுத்து, அதிலுள்ள பொத்தல் கண்டு மெத்தவும் வருத்தப்பட்ட நிலையில் நிற்கிறானே, உழவன், உழைத்தவன், உருக்குலைந்த உத்தமன், ஏரடித்துச் சீரளித்தோன், எவர் வாழ்வுக்கும் ஏற்றம் தந்தோன், அவனுக்குக் காய்ச்சலால், வாய்க்கசப்பு! எனின், அவனளித்திடும் கரும்பு? இனிப்பு! இனிப்புத்தானே! அவனுக்கும் விழாதான்! நிலைமையை ஆய்ந்தறிந்தால் அவன் மனதில் என்னென்ன எண்ணமெலாமோ நெளியும்; நெரித்த புருவத்தினனாவான், நீர் சொரியும் கண்ணினனாவான்! ஆனால் அந்த நல்லோன், இன்று விழா! திருநாள்! அறுவடை அளித்திடும் அகமகிழ்வு அனைவருக்கும் கிடைத்திடும் இன்ப நாள்! இன்று இன்னலை எண்ணிடல் முறையல்ல, என் நிலையாது? என்று உசாவிடல் சரியல்ல; நாடு விழாக்கோலம் பூண்டிடும் வேளை இது, நானோர் களங்கம் தேடிடல் ஆகாது; என்றன்றோ எண்ணி, அடிமைப்படுத்திக் கொடுமை புரிந்து, சுரண்டிச் சுக்குநூறாக்கி, ஏய்த்து ஏமாளியாக்கி, மிரட்டி வேலைவாங்கி மேனாமினுக்கியாகும் பண்ணை முதலாளியைக் கண்டும், துளியும் காயாமல், முகத்திலே முறுவலை வருவித்துக் காட்டுகிறான், பேச்சிலே சுவை கூட்டுகிறான். பேழையுடையானுக்கு, ஏழைதானெனினும் எடுத்தளிக்கிறான் இனிமை. அவன்போன்றோர், காட்டிடும் அறநெறியும் அமைதியும், பொறையுடைமையும் பொறுப்புணர்ச்சியுமன்றோ, நாடு அதிரும் பேரிடிகள் ஏற்படாமலிருப்பதற்குக் காரணம்? அந்த நல்லான், தொல்லைகளைத் தாங்கிக் கொள்ளுவது தெரிந்த பிறகு, நான், மனதிலே கப்பிக்கொண்ட துயரத்தைத் துரத்திவிட்டுக், கடமையில் களிப்புக் காண முனைவதா, கடினம்? இல்லை, இல்லை! என்னரும் தம்பி! பொங்குக இன்பம்! தங்குக மனைதோறும்! என்ற என் நல்லுரை தந்து மகிழ்கிறேன்; பெருக! மகிழ்க! பெருகிடும் மகிழ்ச்சியில் தருக என் பங்கு! கொள்வோம், கொடுப்போம், கொளக் கொளக் குறையாது, கொடுத்திடவும் குறையாது! நல்லுரை, தருவோர் பெறுவோர் இருபாலார்க்கும் இன்பம் சேர்த்திடும், தன்மை பெற்றது.

தீதான கருத்துகளும், தீயோரின் கூட்டுறவும், திருவழிக்கும் போக்குகளும் கொண்டனவாக, விழாக்கள், விரதங்கள், வீணாட்டம், வெறிச் செயல்கள், அடுக்கடுக்காய்ப் பெற்றிருந்தோம், அனைத்தையும் விட்டொழித்தோம். அசுரன் அவன் அழிந்துபட்டான், அப்பம் சுட்டுண்போம், ஆகாசவாணிக்கு அந்நாள் திருமணமாம், ஆமைவடை பாயசம் அடுக்களையில் ஆக்கிடுவோம், வனவாசம் நீங்கிய நாள் வந்துற்ற காரணத்தால், விலைவாசி பாராமல், வெள்ளியால் விளக்களிப்போம், இரவெலாம் கண்விழித்து இறையவனின் அருள் பெறுவோம், என்றெல்லாம் பல கூறி, ஏதேதோ விழாக் கண்டார். எல்லாம், எத்தர்கள் பித்தர்களை ஏய்த்திடும் ஏற்பாடென்று எடுத்தியம்ப, எழுந்தது அறிவியக்கம். அவ்வியக்கம் நம் மனதின் நீண்டநாள் மயக்கமதை மாய்த்தொழித்துவிட்டதாலே, நாமே நமை அறிந்தோம், நமது எதுவென உணர்ந்தோம், நாடிது அந்நாளில் நானிலம் வியந்திட வாழ்ந்து, நல்லன பல கண்டு நயந்தோர்க்கெலாம் அளித்து, அறிவுத் தெளிவுடனே, ஆண்மை அறம் கூட்டி அரசோச்சி வாழ்ந்திட்ட அருங்காதையாவும் கண்டோம். அறுவடை விழாவாக, அனைவர்க்கும் அகமகிழ்வு தருவதாக, அமைந்திட்ட அரும் நாள், தமிழர் திருநாள், பொங்கற் புதுநாள்; அந்நாளில், அடிபணியச் செய்து அடிமடியிற் கையிட ஆரியம் நுழைவதில்லை; நெல்லும் கரும்பும், இஞ்சியும் மஞ்சளும், இச்சையைக் கிளறிவிடும் பச்சைக் காய்கறியும், பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும், காயும் கனியாகும், தொட்டால் துளிர்த்துவிடும், எடுத்தளித்தால் இனிமைதரும், கரம்பட்டால் மணம் சேரும் என்றெலாம் எண்ணிடச் செய்யும், இனியாளின் இன்மொழியும், இன்னமுமா உங்கள் ஆட்சி? இதோ வந்தேன் இளவரசன்! என்று கூறாமற் கூறிடும் குழந்தைதரும் மழலையும், பல்போனால் சொல்தான் போகும், பரிவு காட்ட இயலாதோ என்றுரைக்கும் வகையான முதியோரின் பொக்கைவாய்ச் சிரிப்பும், இவையன்றோ ஏராளம்! எனவேதான் பொங்கற்புதுநாளை, தமிழர் திருநாளைப் போற்றுகிறோம் மனமார. அந்தத் திருநாளில், அறிவுசால் என் தம்பி! அகமகிழ்தல் போன்றே, நம் எண்ணம் வளர்தல் வேண்டும். நாடு பற்றி எண்ணிடவும், நானிலத்தின் நிலைகுறித்து அறிந்திடவும், நாம்கொண்ட குறிக்கோளில் வெற்றி கண்டிடச் செய்யத்தக்கன பற்றிய வழிவகைபற்றிக் கலந்துரையாடிடவும், கருத்தில் இதுபற்றிக் கவலையற்றிருப்போர்க்கு 'கதைகதையாய்' தமிழ் வாழ்வை எடுத்

திரும்பி நிற்பதற்கும் இந்நாள் அமைந்ததாகும். வானிலுறை தேவர் குழாம், வடித்தெடுப்பது எப்பானா? வந்திடும் கலாம் பலவும் வார்குழலால் என்பாரே, கலாம் விளைத்த கடவுளர் யார்? படுத்துறங்கும் பகவனுக்கும், பாரழிக்கும் தேவனுக்கும் இருக்கும் உறவு என்ன? அங்கு செல்லும் வழி யாது? சென்றோர் தொகை என்ன? என்றெல்லாம் கதை பேசும் 'பண்டிகை'யல்ல. பரம்படித்துப் பதப்படுத்தி, உழுது நீர்பாய்ச்சி, விதைத்து முளைவளர்த்து, களைபறித்து, கதிர்கண்டு, அறுத்து, குவித்தெடுக்கும் அருங்கலைக்கு விழாவெடுக்கும் அறிவுத் திருநாள், பொங்கற் புதுநாள்.

அந்நாளில், வாளும் வேலும், போதும், நாளும் கோளும் என்செய்யும்? கரியும் பரியும் இருப்பின், புகையும் புல்லருரையும் எற்றுக்கு? என்று அறிந்து ஏறென நடைபோட்டு, களத்திலே வீரக்கலாபம் விரித்தாடி, வெற்றிக் கழலொலியால் வளையொலியாள் காதலினைக் காணிக்கையாகப் பெற்ற, வீரர் கோட்டமாக, நந்நாடு விளங்கிய வரலாறு நினைவிலே வந்து நிற்கவேண்டும்; நெஞ்சிலே தேனூறும்! நம்மவர் அங்ஙனம் இருந்தகாலை, பாரிலே மற்றையோர், மந்தை முறையில் வாழ்ந்தனராம், நொந்து இடந்தனராம், மொழிவளமே இலையாதாம், வரைமுறை அறியாராம், அறிவளிக்கும் நூலின்றி, அறம் காக்கும் அரசின்றி, வாழ்வளிக்கும் வகையின்றி, நாடே காடாக, நலிந்தனராம். கடலிலே நம் கலமாம்! கடாரம் நம் காலடியாம்! பொன்னும் மணியும் எங்கெங்குமாம்! போர்முரசு கேட்டால் பேரரசுகள் நடுக்குறுமாம்! கவிதை புனைவாராம் புலவர்குழாம், காவலர் தருவாராம் கனகமணி! அகமும்புறமும் கண்டவர் யார்? அவனிபுகழ வாழ்ந்தோர் யார்? என்றால், அவர்தாம் தமிழர், என்று எவரும் கூறும் நிலை பெற்று, நம்மவர் வாழ்ந்தார் சீரோடு, நாம் அவர் வழிவழி, மறத்தலாமோ!!

இவரிடம் உளது என்? இல்லாமை, போதாமை' இயலாமை! இருட்டறிவு! குலபேதம், மதபேதம், குருட்டறிவு! அடிமைநிலை, அச்சநிலை! நச்சரவு போன்ற நானாவிதமான பிச்சுநினைப்புகள். பேதமை! அரசிழந்தார், வளமிழந்தார், கொத்தடிமை செய்தே தான் சாகாதிருக்கின்றார்! — என்றெல்லாம் இன்று நமை எவரும் கூறிடலாம். கோபம் கொப்பளிக்கும். ஆவது என்? உண்மை நிலைதான் அஃது? உலகறியும், நம் உள்ளம் அறியும்! ஊமையர்தாமறிவர்!

இந்நாளில் இந்நிலை; அந்நாளை அறிந்திடவோர் வாய்ப்புமின்றி இருந்தநிலை மாறிற்று, விழி பெற்றோம், வழிகாண விழைகின்றோம்; பிழை தோன்றும்; கவலையில்லை; மனதிலோர் உறுதி உண்டேல் வழி காண்போம், வெற்றி காண்போம்! நாம் காணும் செந்நெல்தனை அவன் கண்டான்; உழுமுன் அத்தனையும் காடுமேடு! மான்கண்டு மயங்கும்தன்மை தான் கொண்ட விழியின் நல்லாள், தேன் தந்தாள், அதைச் சேர்த்திடச் சென்றோன், மலை சென்றான் பிலம் சென்றான், மட்டற்ற இன்னல் பட்டான், கொட்டிய ஈக்கள் உண்டு, கொணர்ந்தான் தேன்.

அறுந்தது நூல்! அவிழ்ந்தது கட்டு! இருண்டது கண்! அலுத்தது உடலம்! நெய்தான். நேர்த்தியாக, செம்பொற்சித்திரம் அழகளிக்க அதை உடுத்தாள்! அருகிற் சென்று அன்னமே என்றழைக்க, அவள் பெற்ற செல்வமோ வழியும் விட்டான்!!

பொங்கற் புதுநாளென்று நம் கண்முன் தோன்றும் பொருளெலாம், நமக்குத் தரும் பாடம், அருமை மிகுந்ததொன்றாகும். மனையிற் பெறும் அந்தப் பாடம், நமது மனதில் உறையும் குறிக்கோளை நாம் அடைய, உதவும் வகையானதாக வேண்டும். அதற்கு, இன்பம் எனது இல்லத்தில் இருந்தால் போதும் என்ற தன்னலம் தகர்த்தொழித்து, நாடு வாழ, நாம் வாழ்தல் வேண்டும், கூடிவாழ்வதே கேடில் வாழ்க்கை, என்ற பொதுநெறி பூத்திடவேண்டும்; நாடு வாழ்ந்திட நாம் ஆற்ற வேண்டிய பணிகள் யாவை என்ற கேள்வி எழும்; அதற்குக் கிடைத்திடும் விடை, நம்மை வீரராக்கும். விழா, விலாப்புடைக்கத் தின்பதற்கு அல்ல; வீர உள்ளம் பெறுதற்கும் வழிகோலுவதாதல்வேண்டும்; அஃது இல்லையெனில், மேய்ந்திடும் ஆனிரையும், மானின் குருதி குடித்த வேங்கையும் பிணத்தைக் கொத்தித் தின்றிடும் பெரும் பறவையும் வயிறு நிரம்பியபோதெல்லாம், விழாக் கொண்டாடுவதாகத்தானே கூறவேண்டும்! மிருகங்கள்போலன்றி, மக்கள் 'திருநாள்' எனத் தனி நாட்களைக் கொண்டாடுவது, விருந்துக்காக அல்ல, அந்த நாட்களை, நற்கருத்துக்கள் பெறுவதற்கான வாய்ப்புகளாக்கிக் கொள்ளும் நோக்கத்துக்காகத்தான். தமிழர், பொங்கற் புதுநாளை இம்முறையிலேதான், சில ஆண்டுகளாகவேனும் கொண்டாடி வருகின்றனர். அவர்க்கு அந்த நோக்கம் கிடைத்திடச் செய்த பணியில், நாம் பங்குபெற்றவர் என்ற முறையில், நமக்குப் பெருமை நிச்சயம் உண்டு; உரைத்திடார் யாரும் இதுபோது; உலகு கூறும்; நாம் வாகை சூடிய பின்னர்! அதோ ஆடிப்பாடிடும் நம் அருந்தங்கை ஆற்றலரசனைப் பெற்று, ஆண்மகவு ஈன்றெடுத்து, "ஆளப்பிறந்தவனே! என் ஆருயிரே கண்வளராய்!" என்று தாலாட்டுப் பாடப்போகிறாள், சில ஆண்டுகள் சென்றபின் என்று கூறட்டும், கோல் ஊன்றி நடந்திடும் நம் குடும்பப பெரியார்; "கெக்கெக்கே! வெவ்வெவ்வே!" என்று கேலி செய்து, கோணல் நடைகாட்டி நாணிடுவாள் நம் செல்வி! மாற்றார் என்றுரைத்து, நமைத் தூற்றிடும் தூயோரெல்லாம், அவள் போன்றோரே! அடையா முன்னம், அடைவோம் என்று அறியார்! அறியச் சொல்வோரை அறைவார்! அஃது உலக வழக்கு.

ஆமாம், தம்பி! வீறுகொண்ட மக்கள் எவரும் விரல்விட்டு எண்ணிடத்தக்க, விடுதலை விரும்பிகளைத்தான், முதல் அணியில் பெற்றிருந்தார். சூழ இருந்ததெல்லாம் தொல்லை. சூதும் சூழ்ச்சியும்கூட உண்டு! சூறைக்காற்று மோதினாலும், அசையாது நின்றிடும் குன்றேபோல, உள்ளத்தில் கொள்கை கொண்டோர், களம் நின்றார்; கண்டார் வெற்றி; காண்கிறோம் கவின் அரசு பலவும் புதிது புதிதாக இன்று!

ஆங்கிலரின் சந்தை இது, அடிமைகளின் கூடாரம், காமக் களியாட்டத்தில் காலமெல்லாம் ஈடுபடும் கனதனவான கூட்டமதைப் போட்டிக்கிழுத்து வாட்டமின்றி வெற்றி பெறும் வேந்தன் பரூக்கின் விளையாட்டு மைதானம், என்றுதான் எவரும் முன்னர் இயம்பினர் இகழ்ச்சியாக, எழில் குலுங்கும் நாடாம் எகிப்துதனை! இன்று? கண்டு நடுங்குனரும், காணாது வியப்போரும, அண்டிப் பிழைத்திட ஓர் அழைப்புண்டா என்று கேட்போரும்; நான் நண்பன் நானே நண்பன்; நான தருவேன் கேட்பதெல்லாம், கேளாமல் நான் தருவேன்! என்று உந்திக்கொண்டும் முந்திக்கொண்டும் உறவு நாடும் வல்லரசுகளும், எகிப்து நோக்கி நின்றிடக் காண்கிறோம். அதுபோன்றே பல்வேறு தேயங்கள் பஞ்சையர், பராரிகள் என்று ஏசப்பட்டுவந்த நிலையினின்றும் தமை விடுத்துக்கொண்டு, "எமை மதிப்போர் நண்பர்; ஆதிக்கம் கொளவருவோர் மாள்வர்!" என்று எக்காளமிடக் காண்கிறோம்.

தம்பி! தீவுகளெல்லாம் போர்க்கோலம் பூண்டுள்ளன! பரமண்டலத்துக்கு வழிகாட்ட வல்லார் என்றனர், மகாரியாஸ் பாதிரியாரை. அவர், தம் தாயகமாம் சைப்ரஸ் தீவு, விடுதலைபெற வழி அமைக்கத் துணிந்துவிட்டேன் என்று சூள் உரைக்கிறார்!

கர்த்தர் கருப்பரைப் படைத்ததே கடினமாக உழைத்து, நம்மை வெள்ளையராக்கத்தான்!—என்று ஆணவமாகப் பேசினர் முன்பு. இன்று நீக்ரோக்கள், விடுதலை முரசு அறையக் கேட்டு, இடிகேட்ட நாகமாகின்றனர், இறுமாப்பைத் தமக்கு இயல்பு ஆக்கிக் கொண்ட வெள்ளையர்! எங்கும் இன்று எமது அரசு! எமக்கு விடுதலை! எவர்க்கு எவர் அடிமை? என்ற முழக்கம் மிகுந்துவிட்டிருக்கிறது. அத்தகையதோர் சூழ்நிலையில் தமிழகம், தன்னிலை உணர்ந்து, தன்னரசு கேட்கும் வீறுபெற்று நிற்கிறது. விழா காணும் சூழாம், தமிழகம் பெறவேண்டிய நிலையும் பெற்றால், கோலம் எங்ஙனம் பொலிவுடன் இருந்திடும் என்பதை எண்ணிப்பார்த்திடவேண்டும்; இன்பம் பெறமட்டுமல்ல, எழுச்சி பெற; வீரம் கொள; வெற்றிக்கு உழைக்க!!

புத்தறிவு புகுந்துவிட்டது தம்பி, இனி அதை வீழ்த்தவல்லார் இல்லை; தம் காலம் உள்ளமட்டும் கதையின் கருப்பொருளை, காரணத்தோடு கழறக் கேண்மின்! கடவுள் நெறிக்கு உரமூட்டத்தந்தார் காதை! என்று சிலர் ஆச்சாரியாராகிப் பார்ப்பர்; என்ன பலன்? தோற்பர்! பண்டு முதற்கொண்டதிது என்று கூறிப் பலனே இல்லை. இன்று உள நிலைமையே வேறு. எதற்கும் ஓர் விளக்கம் கேட்பர்! எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்றார் வள்ளுவர்; ஆமெனக் கொண்டார் அறிவாளர். வானவெளியிலே வருவார் நாரதர், கானம் எழுப்பியே! என்றனர் கதைப்போர்! "யாம் விடுத்த செயற்கைக் கோள், சந்திரமண்டலத்தையும் கடந்து சென்றுளது" என்கின்றனர் சோபிதமிகுந்த சோவியத் நாட்டு விஞ்ஞான வித்தகர்கள். தாரை தழுவிட, வழுவினான் சந்திரன்! "தகாதது புரிந்தாய், தேய்வாய்" என்று சாபமிட்டார் குருவும் கண்டு. என்று சாற்றினார் புராணிகர், சந்திரன்பற்றி. "சற்றே பொறுத்திரும், ஆண்டு மூன்று ஆகட்டும்; அங்கு குடியேறி அருமையாக வாழ்ந்திடலாம்; வழி அறிவோம்; முறைகாண்போம்." என்றுகூறுகிறார்கள் ரஷிய நாட்டவர். இந்நிலையில் "லீலைகளும் விளையாடல்களும், அவதார மகத்துவமும்" எத்தனை நாள் விலைபோகும்? வீண்முயற்சி! எல்லாப் புராணமும் எலிவாலைப் பிடித்தவன், ஏழ் கடலைத் தாண்டினான் எனும் கதை போன்றதுதான் என்று, எவரும் துணிந்துரைக்கும் நிலைபெற்றார். கவிதையில் அழகுண்டு, மெருகுண்டு, சுவையுண்டு—என்று கூறிடும் வாரியார்க்கு, சுவைமிக்க அருங்கவிதை, வேறு பல உண்டன்றோ, பழந்தமிழர் அளித்துள்ள பாடலெலாம் போதாவோ, பதுமத்தில் உறைபவனை, பாஞ்சசன்யம் கொண்டவனை, நெற்றிக்கண் நேர்த்தியனை, அவன் பெற்றெடுத்த இரு மகவை, தவமாய்த் தவமிருந்து மணமுடித்த அம்மையரை, ஆமையாய், அழகற்ற பன்றியாய், கொல்லும் அரியாய், குரங்கேறி நின்றவனாய், இவ்வாறெல்லாம் வந்த இறைவனைக் காட்டுதற்கோ, உவமையும் உருவகமும், அணியும் பிறவும் பயன்படுத்துதல் வேண்டும்? குன்றும் களிறும், கொங்கும் தெங்கும், வண்டும் நண்டும், வாளையும் வாவியும், புன்னையும் புறவும், மயிலும் குயிலும், மாலைமதியமும் காலைக்கதிரோனும், இன்ன பிற அழகெல்லாம் இன்கவிதையாக்கி, எட்டுத்தொகை என்றும் பத்துப்பாட்டென்றும் தந்துளரே தமிழ்ப் புலவோர், போதாவோ என்று கேட்க, இளம் தமிழர் எழுந்துவிட்டார்; ஏற்றம் தமிழுக்கு; எங்கும் தமிழ் முழக்கம்! இந்நிலையில், ஆடலிலும் பாடலிலும் கூத்திலும் கூட்டத்துப் பேச்சிலும், பழமைகள் படும் பாடு, கொஞ்சமல, பரிதாபம்!! அன்றோர் நாள், அண்ணா! ஆடிக்காட்டிட அருங்காட்சி ஒன்றளிப்பீர் என்று எனைக்கேட்டார், உனைப்போன்ற உடன் பிறந்தார், தந்ததைத் தருகின்றேன், சிந்தை மகிழ்ந்திடும் காண்.

மாடி வீடு; கூடம்! செல்வர் அங்கு; அவரை அண்டி, வாடிக்கையாக வேலைசெய்திடும் வீராச்சாமி! செல்வர் பேர், மாசிலாமணி. இருவர் பேசும் நிலைதான் காட்சி. பேச்சோ கொச்சை, எனினும் காணக் கருத்துகள் புதியன பலவும் உண்டு. தம்பி! படிக்கலாம்; நடிக்கலாம்; பகுத்தறிவு காண!

மாசிலாமணி:- டே! வீராச்சாமி! ஏன், வேலைக்காரி, கண்ணைக் கசக்கிக்கொண்டு இருந்தா, உள்ளே.

வீராச்சாமி:- கொஞ்சம் திட்டிப்போட்டேனுங்க......

மா:- ஏண்டா!

வீ:- பாருங்க எஜமான், நான்குளிக்கணும்னு தண்ணி எடுத்துவைத்தேன், அவபோயி, கையைக் கழுவினா அதிலே. அவ கையிலே அழுக்கு, அதைப்போயி அதிலே கழுவி குளிக்கிற தண்ணியையே அசுத்தப்படுத்தி விட்டா.

மா:- இதுக்காடா, கோவிச்சிக்கிட்டே. அட மடப்பயலே! ஏண்டா! போன வருஷம் நீ, தஞ்சாவூர் போயிட்டுவர்ரேன்னு எனகிட்ட புளுகிட்டு, கும்பகோணம் போனேயேல்லோ......

வீ:- போனேனுங்க......

மா:- எதுக்குடா? பன்னீரிலேயா குளிச்சே! ஏண்டா! சேத்திலே தானேடா புரண்டுட்டு வந்தே, எருமைபோலே!

வீ:- மாமாங்கம்ங்க......

மா:- ஆமாங்க, மாமாங்கந்தானுங்க, ஆனா தண்ணி எப்படி இருந்தது, சேறுதானே...?

வீ:- ஆமாங்க......

மா:- சுத்தமாவா இருந்துது?

வீ:- இல்லிங்க...

மா:- அதைவிடவாடா, அவ கைகழுவின தண்ணி அசுத்தமாப் போச்சி......

வீ:- அழுக்குக் கையைக் கழுவினுங்க...

மா:- அட அறிவுகெட்டவனே! அவ, அழுக்குக் கையைக் கழுவினா, அதனாலே தண்ணி அசுத்தமாப் போச்சுனனு சொல்லறயே, இந்தப்புத்தி அண்ணைக்கி எங்கேடா, போச்சு...?

வீ:- நான் மட்டும் இல்லிங்க... ரொம்பப் பேரு...

மா:- அவனை எல்லாம் நான் போயிக் கேட்கவா? நீ, ஏண்டா புரண்டே அந்தச் சேதிலே?

வீ:- தெரியாமெத்தான்...

மா:- ஆயிரமாயிரமா விழுந்திங்களே குளத்திலே, தண்ணியோ குறைச்சலு, அதிலே இவ்வளவு பேரும் போய் விழுந்தா, குழம்பிச் சேருத்தானே போகும்......

வீ:- ஆமாங்க......

மா:- குளிக்கப்போயிச் சேத்தைப் பூசிக்கொள்றவனுக்கு என்னடா பேரு...?

வீ:- தெரியாதவன்னுதான் சொல்லணும்...

மா:- நல்லா, பச்சையாத்தான் சொல்லேண்டா, மடப் பயலே! வேலைக்காரி கையைக் கழுவிட்டா, அந்த அழுக்கு, தண்ணியை அசுத்தப்படுத்திவிட்டதுனனு சொல்லமட்டும் அறிவு இருக்கு. மகாமகம் கதை தெரியுமாடா உனக்கு...

வீ:- தெரியும்ங்க. பாவத்தைப் போக்கிக்க 12 வருடத்துக்கு ஒருமுறை போறது...

மா:- பழைய கணக்கைப் பைசல் செய்துட்டு, புதுசா தயார் செய்யறதுக்கு? ஏண்டா, அப்படித்தானே. அதைக் கேட்கலே, மகாமகத்துக் கதையைக் கேட்டேன்.

வீ:- புண்யம் வருதுங்களாம், குளிச்சா.

மா:- புண்யம் வருவதும், வராததும் தெரியறதில்லே சரியா, ஆனா ஊர்லே காலரா வருது, அது தெரியுது விளக்கமா. எவனெவனோ என்னென்ன நோய்பிடித்தவனெல்லாமோ, விழுந்து எழுந்திருக்கிறான் அந்தக் குளத்திலே, அதிலே போய் குளிக்கிறதாம், அதுக்குப் பேரு புண்யமாம், என்ன புத்திடா, டே!

[ஒரு, ஊர்ப்பெரியவர் வந்து உட்காருகிறார்]

"சதாசிவம்! சம்போ! மகா தேவா!" என்றுகூறிக்கொண்டு. கட்டுக் கட்டாக விபூதி; கையில் சில புத்தகங்கள். மாசிலாமணி அவரைப் பார்த்துவிட்டு; பிறகு வீராசாமியைப் பார்த்து......

மா:- டே! வீராசாமி! யாருடா அது......

வந்தவர்:- நமஸ்காரம், நான், இந்த ஊர்தான், பிரசங்க பூஷணம் பிரம்மானந்த மூர்த்தி ஸ்வாமிகள்னு பேர்.

மா:- இங்கே, என்ன காரியமா வந்தீர்கள்...?

வந்:- இங்கே வராமல் வேறே எங்கே வரமுடியும்? தாங்கள்தானே, எங்களைப் போன்றவாளை, ஆதரித்து இரட்சிக்கவேண்டியவா.

மா:- டே! வீராச்சாமி. எதற்கு வந்தார் என்ன விசேஷம்னு கேட்டு, பதில் சொல்லி அனுப்பு போ...

வந்:- அவனுக்கு என்ன தெரியும்? நான் இந்த ஊரிலே புராணப் பிரசங்கம் செய்யப்போகிறேன் அதற்குத் தாங்கள் ஆதரவு தரவேண்டும்.

மா:- இப்ப, இப்படிக் கிளம்பிவிட்டீங்களா? உங்களைக் கூப்பிட்டனுப்பின காலம் போயி, இப்ப நீங்களாகவே கிளம்பிவர ஆரம்பிச்சாச்சா. சரி, சரி, மார்க்கட் ரொம்ப டல்லாயிடுத்து போலிருக்கு.

வந்:- நிலைமை ஒருவிதத்திலே அதுதான். ஆனால், நான புராணத்திலே சில புது உண்மைகளை, சில அற்புதமான விஷயங்களைக் கண்டுபிடித்து இருக்கிறேன்; ஊரிலே இப்போ இந்தச் சுயமரியாதைக்காரா கொஞ்சம் தொந்தரவு தருகிறாருங்கோ, அவாகூட, என்னுடைய புராணப் பிரசங்கத்திலே தப்புக் கண்டுபிடிக்க முடியாது. சகலருக்கும் பிடிக்கும்படியா, ஒருவருக்கும் மனக் கஷ்டம் வராத விதமா இருக்கும் நம்ம பிரசங்கம்.

மா:- வெண்டைக்காய்போல, வழவழப்பு இருக்கும்னு சொல்லுய்யா; அதானே; பணத்துக்குத் தானே?

வந்:- பணத்துக்காக அல்ல. சிவ! சிவ! பணம் எதற்கு? என்ன பிரயோஜனம்? யார் அதை மதிப்பா? காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே என்று சொல்லியில்லையோ...

மா:- ஆமாம்! காதற்ற ஊசி கடைவழி வரத்தான் செய்யாது, காதறுந்த ஊசியை யாரு வாங்குவாங்க. போய்யா எழுந்து.

[புராணிகர் எழுந்து போகிறார். பிறகு வேலையாளிடம்.]

மா:- இவனுங்க தொல்லை பெரிசாப்போச்சு. இவனுங்களுக்கு வேறே பிழைப்பு இல்லே, இப்படி புளுகிகிட்டு, ஊரைக் கெடுத்துகிட்டு இருக்கறானுங்க...

வீ:- புராணம், படிச்சாலும் கேட்டாலும், கைலாயம் போவலாமுங்களாமே.

மா:- கைலாயம் போவணுமாம் கைலாயம்! டே! வீராசாமி! கழுதைகூடப் போயிருக்குடா கைலாயம்

...ஏண்டா! நான், போக்கிரித்தனமாகப் பேசுவதாக நினைக்கறயா, நிஜத்தைச் சொன்னேண்டா. ஒரு புராணம் இருக்கு, அதுபோல.

வீ:- கழுதை, கைலாயம் போனதாகவா?

மா:- ஆமாண்டா, கழுதை, எருது, எல்லாம் போனதாகக் கதை, புண்ய கதை இருக்கு. ஒரு ஆதித்திராவிடப் பெண்ணு, புல்வெட்டிப் பிழைக்கறது

வீ:- உம்.

மா:- ஆதித்திராவிடப் பெண் வேறே என்னடா செய்யும், பிழைப்புக்கு. அது என்ன ஐயமார் வீட்டுப் பெண்ணா. நாட்டியம் ஆடி, மெடல் வாங்க; புல் செதுக்கி ஜீவிக்கிறது வழக்கம். ஒரு நாள் ஒரு பிள்ளையார் கோயில் பக்கமா, புல்லைக் கொட்டிவைச்சுது. யாரு?

வீ:- அந்தப் பொண்ணு.

மா:- அப்ப, கேளுடா, கழுதை எருது இரண்டும் புல்லை மேய ஆரம்பிக்கவே, அந்தப் பொண்ணு, இரண்டையும் அடிச்சு விரட்டிச்சி. எதை?

வீ:- கழுதையையும், எருதையும்.

மா:- கழுதையும் எருதும், அந்தக் கோயிலைச் சுற்றிச் சுற்றி ஓட ஆரம்பிச்சுது.

வீ:- அடிதாங்கமாட்டாமே......

மா:- அடியும் தாங்கமுடியல்லே, புல்லையும்விட மனம் இல்லை. ஓடினபோது, புல்லும் கொஞ்சம் கொஞ்சம் கீழே விழுந்தது.

வீ:- ஓடினவேகத்திலே.

மா:- ஆமாம்! இவ்வளவுதாண்டா நடந்தது. உடனே புள்ளையார் கோயிலைச்சுற்றி வலம்வந்து, அருகம் புல்லைக்கொண்டு கழுதையும் எருதும் அர்ச்சனை செய்ததுன்னு, சொல்லி, வந்துவிட்டார்கள் சிவகணங்கள்...

வீ:- வந்து?

மா:- வந்து, என்ன? கோயில்கட்டிக் கும்பாபிஷேகம் செய்து, தேர் திருவிழாச் செய்து, தேவ பூஜை எல்லாம் செய்து, பக்திமான்க, எங்கே போகிறாங்க? கைலாயத்துக்குத்தானே, அந்தக்கைலாயத்துக்கு இந்தக் கழுதையையும், அழைச்சி இட்டுப் போனாங்க...

வீ:- ஏஜமான், எவன் எழுதினான் இதுமாதிரி கதையை? ரொம்ப முட்டாத்தனமா இருக்கே...

மா:- வேணுமானா, யாராவது புராணம் படிக்கிறவனிடம் கேட்டுப்பாரு, இப்படி ஒரு கதை இருக்கா இல்லையான்னு. இதுமட்டுமாடா; ஒரு ஆசாமி, ஒரே காமவெறி பிடித்தவனாகி, தன் தாயாரையே.........

வீ:- கொன்று போட்டுட்டானா...

மா:- அது செய்தாக்கூட பரவாயில்லையேடா. தன் தாயாரையே கற்பழிச்சான்......

வீ:- அது யாருங்க அந்தப் பாவிப்பய? எங்கே இருக்கிறான்?

மா:- இப்போ கைலாயத்திலே இருக்காண்டா, கேளு கதையை. தாயைக் கற்பழிச்சானா. பிறகு தகப்பனார் இருந்தாத் தொந்தரவுதானேன்னு, அவனையும் கொன்றுவிட்டான்......

வீ:- பெத்த தாயைப் பெண்டாண்டு, சொந்த அப்பனைக் கொன்றுபோட்டு.........அவனைத் துண்டுதுண்டா வெட்டவேணுமா? முள் பிப்பாயிலே போட்டு உருட்டவேணுமா?

மா:- நீ செய்வே, நான் செய்வேன், அதுபோல. அக்ரமக்காரனுக்குத் தக்க தண்டனை தரவேணும்னு...நடந்ததைக் கேள்டா. சிவபெருமான் அவனை மன்னிச்சிவிட்டார், அந்த மகாபாதகனும் புண்யவானாகிக் கைலாயம் போய்ச் சேர்ந்தான்...

வீ:- நிஜந்தானுங்களா? நம்பவே முடியலைங்களே...

மா:- திருவிளையாடற் புராணத்திலே மாபாதகம் தீர்த்த படலம்னு இருக்கு, கேட்டுப்பாரு.

வீ:- எப்படிங்க சாமிக்கு ஒப்பிச்சி இப்படிப்பட்ட மகாபாவியைக் கைலாயத்துக்குச் சேர்த்துக் கொள்ள?

மா:- டே! அவன் ஜாதியிலே யாரு தெரியுமா? ஐயருடா ஐயர்! ஆமாம்! நீ என்ன கைலாயத்திலே, இப்படிப்பட்டவனெல்லாம் இல்லைன்னு நினைச்சிக்கிட்டயா? நாக்கை அறுத்தவன, மூக்கை அறுத்தவன், தலையை அறுத்தவன், இந்தமாதிரிக் கொலைகாரப் பசங்க வேண பேர் இருக்காங்கடா அங்கே; கேட்டா பக்தியிலே செய்தானுன்னுவாங்க. நான், இல்லாததைச் சொல்றேன்னு எண்ணிக்கொள்ளாதே. ஒரு ஆசாமி, தன் மனைவியோடு கோயிலுக்குப் போனான், திருவாரூரிலே. கோயிலுக்குள்ளே பூ கிடந்தது கீழே. பெண்களுக்கு பூன்னா இஷ்டமில்லையா?

வீ:- ஆமாங்க......

மா:- அந்தம்மா, பூவைப் பார்க்கவே எடுத்து, மோந்து பார்த்தாங்க......

வீ:- அந்தம்மா புருஷன்...?

மா:- அவன் இன்னொரு பக்கமா இருந்தான், பக்தி செய்துகிட்டு......

வீ:- சரிங்க, அப்புறம் என்ன நடந்தது?

மா:- கோயிலிலே இருந்தான் இன்னொரு பக்தன், அவன் ஓடிவந்தான், பொம்பளை, பூ எடுத்து மோந்ததைப் பார்த்து...

வீ:- வந்து......?

மா:- நீதான் சொல்லுடா, என்ன செய்வான், ஒரு யோக்கியமான மனுஷன்?

வீ:- ஆரம்மா இது, பூவை எடுக்காதே. அது சாமிக்குன்னு சொல்வான்.

மா:- கொஞ்சம் முரட்டுப்பயலா இருந்தா, திட்டுவான் கண்டபடி. இவன் என்ன செய்தான தெரியுமோ. உள்ளே ஓடி, ஒரு அரிவா கொண்டு வந்தான்.

வீ:- அரிவா கொண்டுவந்து......

மா:- அந்தப் பொம்பளை மூக்கை அறுத்துப் போட்டுட்டாண்டா!

வீ:- அட பாதகா! பூவை எடுத்து மோந்ததுக்கா... ஒருத்தன் பெண்ணு மூக்கை அறுத்தான். என்ன அக்ரமங்க...... ஏனுங்க, அவ புருஷன் என்ன செய்தான்? எப்படிப்பட்ட சொரணை யத்தவனுக்குக்கூட ரோஷம் வருமே.

மா:- கேள் வீராசாமி அந்தக் கூத்தையும். அவ புருஷன் ஓடிவந்து, என்னன்னு கேட்டான், இப்படி இப்படி நடந்ததுன்னு சொன்னன் அந்த மூக்கறுத்தவன், இவன் உடனே அந்த அரிவாளைப் பிடுங்கி......

வீ:- போட்டானா அவன் தலையிலே வெட்டு...

மா:- இல்லை, கையிலே, போட்டான் வெட்டு...

வீ:- போடவேண்டியதுதான், அந்தக்கையாலே தானே அவ மூக்கை அறுத்தான் அந்தப் பாவி, கையை வெட்டவேண்டியதுதான்.

மா.- டே! மடப்பயலே! யார்கையை வெட்டினன்னு நினைச்சிக்கிட்டுப் பேசறே. தன் பெண்டாட்டி கையை வெட்டினண்டா, பூ எடுத்த கையை வெட்டவேணும்னு சொல்லி...

வீ:- அட ரோஷங்கெட்ட, அக்ரமக்கார!

மா:- திட்டாதேடா! இரண்டு பேரும் நாயன்மாருக இப்ப. தெரியுதா. மூக்கறுத்தவனும் கைலாய வாசம் செய்கிறன், கையை வெட்டினவனும் அங்கேத்தான் இருக்கிறன். பக்திடா பக்தி.

வீ:- இதுதானுங்களா பக்தி! மூக்கை அறுக்கறதும், பெண்டாட்டி கையை வெட்றதும் பக்தியா...

மா:- மூக்கறுத்தவன் பேரு, செருத்துணை, கையை வெட்டினவன் பேரு, கழற்சிங்கர், காலட்சேபம் செய்யலே அவர்களை வேணுமானு கேளு, பெரிய புராணத்திலே இது இருக்கா இல்லை யான்னு. இந்த மாதிரி ஆசாமிகளெல்லாம் போயிருக்காங்க, கைலாயத்துக்கு; ஏண்டா நாம்ப போகணும்?

வீ:- எஜமான்! நான் என்னமோ நினைச்சிகிட்டு இருந் தேன், கைலாய்ம்னு. இப்பத்தான் தெரிஞ்சுது விஷயம். இந்த மாதிரி ஆசாமிக இருக்கிற இடமா அது? நமக்கு வேண்டாம் எஜமான், அந்த மாதிரி இடம்!

தம்பி! இது, நாட்டிலே பகுத்தறிவு பரவ எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முயற்சியிலே, மிகச் சாதாரணமானது. புலமை மிக்கவர்கள் பலர், தரமான முறையிலே, சிந்தனைக்குத் தெளிவளிக்கும் ஓவியங்களைத் தீட்டித்தந்தபடி உள்ளனர். பகுத்தறிவு பரவுவது மட்டுமல்ல, புராணப் பிடிப்பு குறையக் குறைய, தமிழ் இலக்கியத்தின் மீது ஆர்வம் வளருகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு திருக்குறளை அறிய மறுத்தவரெல்லாம் இன்று, புதுபபொருள் கூறுகின்றனர்; சிலர் சூதுமதியுடன்! தமிழின் தொன்மை, மென்மை, தூய்மை, பொலிவு யாவும் இப்போது மக்கள் மன்றத்திலே எடுத்துரைக்கப்பட்டு, மனைகளில் பேசிக்கொள்ளப்படுகின்றன, உனக்காகத் தம்பி, ஒருநாள், புறநானூற்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். படித்தேன் என்று கூற மனமில்லை; படிக்கவேண்டும் நிரம்ப என்ற ஆர்வம் உண்டு. புறநானூறு பாடிய புலவர் பெருமக்கள்—பெண்பாற் புலவரும் உண்டு—பற்றிய குறிப்பு கண்டேன்; வியந்தேன். எத்துணை பழங்காலத்திலே புறநானூறு எழுந்தது! அக்காலத்தே, உலகிலே பல நாடுகள், உருவம்கூடப் பெறவில்லை, நாடான பலவற்றிலே மொழிவளம் இல்லை, மொழி வளம் இருந்த இடங்களிலும் இலக்கியம் எழவில்லை; இங்கொன்றும் அங்கொன்றுமாக இலக்கியம் எழுந்த இடங்களிலும், இத்துணைப் புலவர்கள் இருந்ததில்லை; அதிலும் பெண்பாற் புலவர்கள் இங்கு இருந்ததுபோல, அளவிலாயினும் சரி, தரத்திலாயினும் சரி, மற்ற இடங்களிலே இருந்ததாக எனக்கு யாரும் கூறினரில்லை.

தம்பி! எத்துணை வாழ்க்கை வளம், அரசுநெறி, சீர் இருந்தால் இத்துணை புலவர்கள், இன்றளவும் இவைபோன்ற அருங்கவிதைஇல்லை என்று கற்றோர் வியந்திடும் தரமான கவிதைகளை இயற்றி இருக்க முடியும் என்பதை எண்ணிப்பார். தமிழர் எத்திறத்தவர் என்பதும் புரியும்; தமிழர் என்று பேசிப் பேதம் வளர்த்திடாதீர் என்று கூறிடும் மேதாவிகளின் கூற்று எத்துணை பொருளற்றது என்பதும் விளங்கும்.

அடைநெடுங்கல்வியார்.
அண்டர்மகன் குறுவழுதி.
அரிசில் கிழார்.
அள்ளூர் நன்முல்லையார்.
ஆடுதுறை மாசாத்தனர்.
ஆலங்குடி வங்கனர்.
ஆலத்தூர் கிழார்.
ஆலியார்.
ஆவூர்கிழார்.
ஆவூர் மூலங்கிழார்.
இடைக்காடனர்.
இடைக்குன்றூர்க்கிழார்.
இரும்பிடர்த்தலையார்.
உலோச்சனர்.
உறையூர் இளம் பொன்வாணிகனர்.
உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.
உறையூர் மருத்துவன் தாமோதரனர்.
உறையூர் முதுகண்ணன் சாத்தனர்.
உறையூர் முதுகூத்தனர்.
ஊன்பொதி பசுங்குடையார்.
எருக்காட்டூர்த் தாயங்கண்ணனர்.
எருமை வெளியனர்.
ஐயாதிச் சிறுவெண்டேரையர்.
ஐயூர் முடவனர்.
ஐயூர் மூலங்கிழார்.
ஒக்கூர் மாசாத்தனர்.
ஒக்கூர் மாசாத்தியார்.
ஒருசிறைப் பெரியனர்.
ஒரு உத்தனர்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்.
ஓரம்போகியார்.
ஓரேருழவர்.
ஔவையார்.
கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி.
கண்ணகனர்.
கணியன் பூங்குன்றன்.
கபிலர்.
கயமனர்.
கருங்குழலாதனர்.
கருவூர்க்கதப்பிள்ளை.
கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனர்.
கல்லாடனர்.
கழாத்தலையார்.
கழைதின் யானையார்.
கள்ளில் ஆத்திரையனர்.
காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்.
காரிகிழார்.
காவட்டனர்.
காவற்பெண்டு.
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனர்.
குட்டுவன கீரனர்.
குடபுலவியனர்.
குடவாயிற் கீரத்தனர்.
குண்டுகட் பாலியாதன்.
குறமகள் இளவெயினி.
குறுங்கோழியூர்க்கிழார்.
குனறூர்க்கிழார் மகனர்.
கூகைக் கோழியார்.
கூடலூர்க்கிழார்.
கோடைபாடிய பெரும்பூதனர்.
கோதமனர்.
கோப்பெருஞ் சோழன்.
கோவூர்கிழார்.
கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனர்.
சங்கவருணரென்னும் நாகரியர்.
சாத்தந்தையார்.
சிறுவெண்டேரையார்.
சேரமான் கணைக்காலிரும்பொறை.
சேரமான் கோட்டம்பலத்துத்துஞ்சிய மாக்கோதை.
சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்.
சோழன் நல்லுருத்திரன்.
சோழன் நலங்கிள்ளி.
தன்காற்பூட் கொல்லனர்.
தாமப்பல் கண்ணனர்.
தாயங்கண்ணனர்.
தாயங்கண்ணியார்.
திருத்தாமனர்.
தும்பி சோகினனர்.
துறையூர் ஓடைகிழார்.
தொடித்தலை விழுத்தண்டினர்.
தொண்டைமான் இளந்திரையன்.

நரிவெரூஉத்தலையார்.
நல்விறையனர்.
நன்னாகனர்.
நெட்டிமையார்.
நெடுங்கழுத்துப்பரணர்.
நெடும்பல்லியத்தனர்.
நொச்சி நியமங்கிழார்.
பக்குடுக்கை நன்கணியார்.
பரணர்.
பாண்டரங்கண்ணனர்.
பாண்டியன் அறிவுடைநம்பி.
பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.
பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.
பெருந்தேவனர்.
பாரிமகளிர்.
பாலைபாடிய பெருங்கடுங்கோ.
பிசிராந்தையார்.
பிரமனர்.
புல்லாற்றூர் எயிற்றியனர்,
புறத்திணை நன்னாகனர்.
பூங்கணுத்திரையார்.
பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு.
பெருங்குன்றூர் கிழார்.
பெருங்கோழிநாய்க்கன் மகள் நக்கண்ணையார்.
பெருஞ்சித்திரனர்.
பெருந்தலைச்சாத்தனர்.
பெரும்பதுமனர்.
பேய்மகள் இளவெயினி.
பேரெயின் முறுவலார்.
பொத்தியார்.
பொய்கையார்.
பொருந்திலிளங்கீரனர்.
பொனமுடியார்.
மதுரை அளக்கர் ஞாழலார் மகனர் மள்ளனர்.
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனர்.
மதுரை இளங்கண்ணிக் கௌசிகனர்.
மதுரை ஓலைக்கடைக்கண்ணம் புகுந்தாராயத்தனர்.
மதுரைக் கணக்காயனர்.
மதுரைக் கணக்காயனர் மகன் நக்கீரனர்.
மதுரைக் கள்ளின் கடையத்தன் வெண்ணாகனர்.
மதுரைக்கூல வாணிகன் சித்தலைச் சாத்தனர்.
மதுரைத் தமிழ்க்கூத்தனர்.
மதுரை நக்கீரர்.
மதுரைப் படைமங்கமன்னியார்.
மதுரைப் பூதனிளநாகனர்.
மதுரைப் பேராலவாயார்.
மதுரை மருதனிள நாகனர்.
மதுரை வேளாசான்.
மருதனிள நாகனர்.
மாங்குடி கிழார்.
மாதி மாதிரத்தனர்.
மார்க்கண்டேயனர்.
மாற்பித்தியார்.

மாறோக்கத்து நப்பசலையார்.
முரஞ்சியூர் முடிநாகராயர்.
மோசி கீரனார்.
மோசி சாத்தனார்.
வடம நெடுந்தத்தனார்.
வடமவண்ணக்கன தாமோதரனார்.
வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார்.
வடமவண்ணக்கண் பேரிசாத்தனார்.
வடமோதங்கிழார்.
வன்பரணர்.
வான்மீகியார்.
விரிச்சியூர் நன்னாகனார்.
விரியூர் நக்கனார்.
வீரை வெளியனார்.
வெண்ணிக் குயத்தியார்.
வெள்ளெருக்கிலையார்.
வெள்ளைக்குடி நாகனார்.
வெள்ளை மாளர்.
வெறிபாடிய காமக்கண்ணியார்.
வேம்பற்றூர்க் குமரனார்.

தம்பி! மிகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு, கிடைத்துள்ள புலவர் வரிசை இது. இன்னமும் கண்டறிய வேண்டிய பெயர்களும் உள்ளன.

ஒவ்வோர் புலவரும் ஒன்று அல்லது இரண்டு கவிதைகளே இயற்றினர்; இன்று அவைகட்கு உயிரூட்டம் உள்ளன! என்ன பொருள்? அத்துணை புலமையை அதிலே வடித்துள்ளனர்! எவர்? இந்தியை அரசுக்கட்டிலில் ஏற்றிக்கொள் இல்லையேல், சிறை பிடிப்போம், சுடுவோம் என்று வடவர் கூற, அஞ்சி அஞ்சிச் சாகும் இன்றைய மக்களின் முன்னோர்; தமிழர்!

அற்றை நாளில் அப் பெரும் புலவோர் அளித்தனவெல்லாம் இற்றை நாளில் நாம் எடுத்தியம்பலால், முற்றும் அவர் உரை ஏற்றோம் என்று பொருள்கொளல் வேண்டாம். அவர் திறம் வியந்திடவும், அந்நாளிலே இருந்த புலமை வளம் கண்டு மகிழ்ந்திடவும், கூறுகிறோம். அவர் அறிவாற்றல் பெரிது; ஆயினும் அதனினும் பெரிது காலம் கனிந்தளிக்கும் கருத்துப் படையல்கள். அன்று அவர் கண்ட உண்மை பல உண்டு எனினும் மேலும் பல உண்மை காணும் வாய்ப்பு, காலம் சமைத்தளிக்கக் காண்கிறோம்.

முடியுடை மூவேந்தர்கள் மட்டுமல்ல; குறுநில மன்னர்கள், வேளிர்கள், பலரும் கூடப்புலவர் பெருமக்களை ஊக்குவித்தனர். கவிதை பெருக்கெடுத்தது; தமிழ் மணம் கமழ்ந்தது. அந்நிலை காட்டவே அவர் பெயர் கூறி மகிழ்கிறோம்.

தம்பி! மற்றோர் முறை புலவர்கள் பெயர்ப் பட்டியலைப் படி. மூடிவை! நினைவிற்குக் கொண்டு வந்துபார்! இயலாது! உனக்கு மட்டுமல்ல! எனக்குந்தான்! எனக்கு மட்டுந்தானா, இன்றுள்ள புலவர்களிலே பலருக்கு. எல்லோருமா டாக்டர் மு. வ. வாக இருப்பர்?

போகட்டும்; பழனி மலைப்பேகன்; பறம்புமலைப் பாரி; கோடைமலை நெடுவேட்டுவன்; கொல்லி மலை ஓரி; பொதியமலை ஆய்ஆண்டிரன்; குதிரைமலை அதிகமான்; முதிரமலை குமணன்; தோட்டிமலை பெருநள்ளி. தமிழகம் தனி அரசு ஆகக்கூடாது, பாரதத்தின் ஒரு பகுதியாகத்தான் பிணைந்து (இணைந்து கூட அல்ல) கிடக்கவேண்டும் என்று கூறும் குடி அரசுத் தலைவர் பாபுராஜேந்திரருக்கு இந்த மலை அரசுகளாண்டவர் எவராவது தெரியுமா, என்று கேட்டுப்பார். தெரியாது! பன்றிமலைச் சுவாமிகளைத் தெரியும்!

பூவார் சோலை மயிலாடப்
புரிந்து குயில்கள் இசைபாட
காமர்மாலை அருகசைய நடந்தாய்
வாழி காவேரி!

என்று பாடினார் இளங்கோ. கவி தாகூரின் சிறப்பினை நமக்கறிவிக்கும் பண்டித நேரு அறிவாரா, சேரநன்னாட்டு இளவலை! கோபிப்பார், கேட்டால். ஆணையும் அரசும், பெருமளவில் பெருமிதத்துடன் அமைத்துக்கொண்டு அரும்பாடுபட்டு வருகிறேன், எனைப்போய், அறிவிலி! அந்த நாளில் ஏதோ ஆறு பற்றிப் பாடிய ஒரு புலவனைப்பற்றிக் கேட்கிறாய்! என்ன துணிவு! எத்துணைத் தேசத் துரோகம் என்று ஆர்ப்பரிப்பார்.

கொங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்; குரவமும் முல்லையும் நறுமணம் கமழும். கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும் என்றார், தமிழ்ப்புலவர்.

அன்பார்ந்த குழவியை அழகிய மஞ்சத்தில் அமைத்து, அதன் மேனியைக் கைகளால் தடவித் துயில்விக்கும் அன்னை போல் ஈரம் வாய்ந்த பொய்கை, கமலப்பள்ளியில் அமர்ந்த அன்னத்தைத் தன் அலைக்கைகளால் தட்டித் துயில்வித்தது— என்று ஓவியம் தீட்டுகிறார், கவிதை வடிவில் மற்றோர் மாத்தமிழர்.

வியக்கத்தக்க காட்சிகளைக் கவிதைகளாக்குவதுடன் அமைந்தனரோ? அன்று! அன்று! அறம் உரைத்தனர்! அரசர்க்கும் அஞ்சாது அறநெறியை எடுத்துரைத்தனர். வெற்றுரையாம பழமையிலா அவர்தம் மனம் படிந்திருந்தது? இல்லை! புது மொழியில் திளைத்தனர்.

செதுமொழி சீத்த செவிசெறுவாக
முதுமொழி நீராப் புலன்நாஉழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர!

புது மொழிவழி அவர்தம் நாட்டம் தொடர்ந்து சென்றதனால், விளைந்த எண்ணம் ஓர்வகை சுற்றுச் சார்பை ஏற்படுத்தியதால்தான, பக்திமார்க்கத்தைப் புகுத்த வந்த புனிதர்களே கூட, எவரும எங்கும் எஞ்ஞான்றும் வாதிடும் கடவுட் கொள்கைபற்றி

கழியுளாரெனவுங்
கடலுளாரெனவுங்
காட்டுளார் நாட்டுளாரெனவும்
வழியுளாரெனவு மலையுளாரெனவு

மண்ணுளார் விண்ணுளாரெனவும்
சுழியுளாரெனவுஞ் சுவடு தாமறியார்
தொண்டர் வாய் வந்தனசொல்லும்

என்று கூறவேண்டி வந்தது.

'கண்ணுதலோனை'க் காண்மின் என்று கூறப் போந்த சுந்தரரே, தமிழர்கள், கடவுள் பற்றிய கட்டுக் கதைகளை மட்டும் கூறினால் கேட்டு இன்புறுர், என்று அச்சப்பட்டவர்போல், அவர் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் தலத்தைக் காண் மினே என்று வேண்டுகிறுர்.

கண்ணுதலோன் மேவிய ஊர்வினன்
அரும்பருகே சுரும் பருவ
அறுபதம் (வண்டு) பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணி
பொழில் சூழயலின்
கரும்பருகே கருங்குவளை
கண்வளரும் கழனி
கமலங்கள் முகம் மலரும
கலயநல்லூர் காணே!

என்றுபாடி, அரும்பு கரும்பு, வண்டு, மயில், கருங்குவளை, கமலம், ஆகியவற்றினைக் காட்டி இப் படிப்பட்ட அழகு மல்கும் ஊர் காண்மின் என்கிறுர்.

இயற்கையின் இனிய கோலத்தில், தமிழர் கொண்டிருந்த பேரார்வத்துக்கு இதனினும் சான்று வேண்டுமோ!

எதிலும் ஏற்றம் பெற்றிருந்த நாடு, இன்று எடுப்பார்க்கைப்பிள்ளை நிலை பெற்றுளது; அறிந் தோம், மாற்றிட முனைகிறோம்; மனை எங்கணும், இதற்கான ஆர்வம் எழவேண்டும். விழா தரும் மகிழ்ச்சியுடன் இதனைக் கலந்து உண்ணவேண்டும், ஊட்டவேண்டும்!

இறவாப்புகழ் பெற்ற நூற்கள் இயற்றப்பட் டன; தம்பி! அதுமட்டுமன்று. நூல், எங்ஙனம் இருத் தல் வேண்டும் என்பதற்கே, விளக்கம் கண்டனர் அந்த நாளிலே.

நூலெனப் படுவது நுவலுங்காலை
நுதலிய பொருளை முதலில் கூறி
முதல் நடு இறுதி மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின்ற மைந்த உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன்பண்பே.

எல்லா எழிலும் நிரம்பியநாடு மட்டுமல்ல, எதி லும் எழிலும் ஏற்றமும் பெறுதல் எங்ஙனம் என்ற 'இலக்கணம்' வகுத்துக் கொண்ட 'நாடு. இன்று வளம் பிறர்க்கு, வாட்டம் தமிழர்க்கு என்ற நிலையில் கிடந்து உழலக் காண்கிறோம்; உள்ளம் உலைக்கூடம் போலாகிக்கிடக்கிறது. பேச்சும் பெருமூச்சும் பொறிக ளென்றுகி தமிழரிடை வந்துற்ற தீய நினைப்புகள், தன் நிலை மறந்தபோக்கு என்பனவைகளை எரித் திடத் தலைப்பட்டுள்ளன. உனைக் கண்டு மயக்குற்ற தால், எரி நெருப்பிட எடுத்த விறகுத் துண்டை கெண்டை விழியாள், வேறுபக்கம் போடக்கண்டு, கேலியால் கொத்துகிருய்; ஆனால், நம்மிலே பலர், 'ஏக இந்தியா' எனும் பிடிப்பில் மயங்கி, தமிழர்க்குத் தொண்டாற்றத் தவறிவிடுவது கண்டால் நெஞ்சம் எரியிடைபட்ட மெழுகாக வன்றோ ஆகிறது.

உன் ஒரு சிறு நகை கண்டதும், முல்லை நகை யாள், தன் தவறினைத் திருத்திக்கொண்டு, முத்த மல்லவா தருகிறுள், உன் இன்பப் பெருக்குக்கு! உன் பணியும், தம்பி, உணராதாரிடம் காய்வது அல்ல; அவர்தம் விழியைத் திருப்புவது, வழியைக் காட்டுவது, உடன் அழைத்து வருவது, என்றிருக்க வேண்டும்.

பொறை எனப்படுவது போற்றுரைப் பொறுத்தல் என் றுர் புலவர். அவ்வழியே நம் வழியாதல்வேண்டும்.

தம்பி! உனை நெடுந்தொலைவு அழைக்கிறேன், என்று கோபம் கொள்ளாதே! நானறிவேன் இன்று உன் நிலை யாது என்பதை! மனையில் மகிழ்ந்திரு! பெற்றோருக்குப் பெருமை தேடிடு! உற்றுர் உற வினரை உவகை கொள்ளச் செய்! ஊருக்கு உழைத் தலில் இன்பம் பெறு! விழிபுகுந்து நெஞ்சிலே உறையும் உன் இனியாளைக் கண்ணெனப் போற் றிடு! கன்னல் மொழிக் குழந்தைகளைக் கற்றோராக்கு! தமிழ் மணம் கமழ வழி காண்பாய், தம்பி!

தமிழன் என்றோர் இனம் உண்டு!
தனியே அவர்க்கோர் குணம் உண்டு.

தமிழர்க்கென்றோர் விழா உண்டு, தனியாய் அதற்கோர் சிறப்புண்டு. பொங்கற் புதுநாள், அந்த விழா போற்றி மகிழ்வோம், தமிழ்த் திருநாள். போ! போ! தம்பி! ஆயிரம் நான் சொல்கிறேன், உன் கண் கள் மட்டும்...! உன்மீது என்ன தவறு? உன்னை ஈர்க் கும் துடியிடையும் குற்றமாபுரிகிறுள்?

செக்கச் செவந்த கன்னம்
சேல்விழியாள் நடையில் அன்னம்
செந்தாமரையாகும் முகம்
செதுக்கிவைத்த
செம்பொற்சிலையாகுமே வடிவம்.

என்று காதற்பண் பாடிய தமிழ் மரபினனல்லவா!

கத்தும் கடலில் முத்தெடுத்தான்
கற்றைக் குழலாளுக்களித்தான்
கட்டழகி பெற்றதைத் திருப்பித் தத்தாள்
கண்ணே! என்றழைத்து மகவுக்குத்தான்!

என்றல்லவா, குறும்பும் புலமையும் குழைத்துப் பாடினர் முன்னோர். அவ்வழி வந்தவனன்றோ! வேறுகவா இருக்கும், உன் போக்கு!

இன்பநாளிது! இதயம் பாடுது! மகிழ்ந்திரு, ஆனால் திருநாட்டை மறவாதிரு! வாழ்க நின்குடி! வளர்க நின் மகிழ்ச்சி! வாழ்க தமிழ்!

அண்ணன்

அண்ணாதுரை

காட்டிலே உள்ள மற்றைய மிருகங்களைக் கூட்டிவைத்துப் புலி, "தோழர்களே..." என்று துவங்கியது. உடனே கூட்டத்தில் ஒரே பரபரப்பு. இத்தனை நாள் இப்படி உறவுகூறி அழைத்ததில்லையே என்றுதான்.

கிழப்புலியின் உபதேசம்!

"தோழர்களே அமைதியாக இருங்கள், ஆனந்தமாகக் கேளுங்கள். 'தோழர்களே' என்று துவங்கியவுடனேயே உங்களுடைய உள்ளங்களிலெல்லாம் ஆச்சரிய அலைகள் எழுந்து அலைமோதுவதை நான் காண்கிறேன். என்னுடைய இந்த ஒரு சொல்லுக்கே இத்தனை பெருமை இருக்கிறது என்றால், இனி நான் கூறப்போகும் ஒவ்வொரு சொல்லுக்கும் எத்தனை பெருமை கிடைக்கும் என்பதை எண்ணி முதலிலேயே பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன். அதேபோது இவ்வளவு காலமும் இத்தகு பெருமையை அடையமறந்து மனம் போனபடியெல்லாம் நடந்துவிட்டோமே என்று எண்ணும்பொழுது வேதனைப்படுகிறேன். என்ன செய்ய உண்மையை வெறும் உபதேசத்தினால் மட்டுமே உணர்ந்துவிட முடிவதில்லையே!"

காட்டு விலங்குகள் யாவும் தன்னை மறந்த நிலையில் வாயைப்பிளந்தபடி பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தன! புலி பேசிச் சென்றது, "நான் இனி உங்களில் ஒருவனாகி விட்டேன். யாரையும் அடித்துத்தின்று உயிர்வாழப் போவதில்லை; 'புலி பசித்தாலும் புல் தின்னாது' என்று கூறக் கேட்டிருப்பீர்கள். நான் முடிந்தால் புல்லையும் புசிக்கப்போகிறேன்" என்றது.

அவ்வளவுதான்! விலங்குகள் கூட்டத்திலிருந்து ஒரே ஆரவாரம், மகிழ்ச்சி, கைதட்டல், வரவேற்பு எல்லாம். "ஆகா புலியின் கருணையே கருணை. இனி வாழ்நாளெல்லாம் பொன்னாள்தான். அஞ்சி, அஞ்சிச் செத்துச் செத்து வாழவேண்டியதில்லை" என்று மிருகங்கள் பேசிக்கொண்டன.

மீண்டும் புலி துவங்கியது, "மதிப்புக்குரியவர்களே! அப்படியானால் இனி நீ எப்படி வாழப்போகிறாய்? வயிற்றுக்கு எப்படி இரைதேடப்போகிறாய்? என்று கேட்கத் தோன்றும். அதிலேதான் புதிய திருப்பம், புதிய மாறுதல். இனி, நான் இயற்கையாக இறந்துபோன பிராணிகளின் உடலைமட்டுமே உணவாகக்கொள்வேன். மறந்தும் உயிருள்ள பிராணிகளை அடித்து உண்ணமாட்டேன். என்னுடைய இந்தக் கருத்தை நீங்கள் யாவரும் ஆமோதிப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்". என்று கூறி நிறுத்தி, ஒருமுறை கூட்டத்தைச் சுற்றித் தன் கண்களைச் சுழலவிட்டது. எப்புறம் பார்த்தாலும் விலங்குகள் தங்கள் கரங்களை நீட்டி, "வரவேற்கிறோம், வரவேற்கிறோம், முழு மனதுடன் வரவேற்கிறோம்" என்று கூக்குரலிட்டன.

இதற்கிடையே கூட்டத்தின் ஒரு மூலையில் ஒரு பெரிய சலசலப்பு ஏற்பட்டுவிட்டது. அங்கே நான்கு கிழ நரிகள் மட்டும் கூடிக் கொண்டு ஏதோ பேசிக்கொண்டிருந்தன. புலிக்கு அவைகளைப் பார்த்தவுடன், அந்த நரிகள் மீது பாய்ந்து அப்படியே அவைகளைப் பிடித்து; நசுக்கி...............! என்ன செய்வது? இதுவரையும் கூறிவந்ததன் கொள்கைக்கே அல்லவா முரணாகப் போய்விடும்! அதனால் அவைகளை ஒன்றும் செய்ய முடியவில்லை. இருந்தாலும் அவைகளின் பேச்சு, புலியின் ஆண்மைக்குச் சவால் போல் பட்டது. இத்தனை மிருகங்களும் தன்னையே போற்றும் பொழுது அவைகள் மட்டும்!.........

கரந்தை-கணேசன்

புலி அவைகளைப் பார்த்து, "என்ன அங்கே தனியாக ஒரு கச்சேரி நடக்கிறது. ஏதாவது என் கொள்கைக்கு எதிர்ப்பா?" என்றது கம்பீரத்தோடு, உள்ளத்தினுள்ளே இருக்கும் அச்சத்தையும் ஆத்திரத்தையும் அடக்கிக் கொண்டே.

கிழநரி ஒன்று எழுந்து, 'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை பிரபு. அதிலும் தங்களுக்கா? வானமே பொன்மழை பொழிந்ததுபோல எங்கள் வாழ்வுக்கே அருள்மழை பொழிந்திருக்கிறீர்கள். தங்களுடைய கருத்துக்களை நாங்கள் எதிர்ப்போமா! எதிர்த்தால் அது எங்களுக்கு நாங்களே தோண்டிக்கொள்ளும் சவக்குழி அல்லவா' என்றது.

"பின் என்ன பேசினீர்கள்?" புலி, ஆத்திரத்தொடு கேட்டது. கூட்டத்திலிருந்த மற்றைய மிருகங்களும், 'ஆமாம் என்ன பேசினீர்கள். உடனே சொல்லவும்' என்று கத்தின.

கிழநரி நடுங்கினதுபோல் பாசாங்கு செய்தவாறே, 'ஒன்றுமில்லை பிரபு; எனது நண்பர் ஒருவர் என்னைப் போல் வயதானவர், ஏதோ ஒரு மூலிகையின் மூலமாக, தான் இழந்திருந்த இளமையைத் திரும்பப்பெற்று விட்டாராம். இந்த நிகழ்ச்சியைக் கூட்டத்தில் சொன்னார்கள்— பேசிக்கொண்டிருந்தோம்' என்றது.

'என்ன......? என்ன......? இளமை திரும்பிவிட்டதா? இதை முதலிலேயே எனக்குத் தெரிவித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். எங்கே இருக்கிறது அந்த நரி? வா போவோம்' என்றது.

கிழநரியோ, கூட்டத்தை இன்னும் முடிக்கவில்லையே பிரபு, முடித்துவிட்டு வாருங்கள் போகலாம்' என்றது.

புலியோ, 'கூட்டமாவது, கீட்டமாவது! வாருமைய்யா போவோம்' என்று கோபாவேசமாகக் கத்தியது. ஓடி மறைந்துவிட்ட வாலிபத்தைத் தேடிப்பெற அவ்வளவு ஆர்வம் அந்தக் கிழப்புலிக்கு!

உடனே கூட்டத்தில் எங்குபார்த்தாலும் ஒரே பரபரப்பு—ஒரே கூச்சல் கிளம்பிவிட்டது. புலி கொண்ட தோழமைக்குக் காரணம்தான் புரிந்துவிட்டதே! இனியும் அவைகளால் சும்மா இருக்க முடியுமா? பிறகுதான் கிழப்புலிக்குத் தன்தவறு தெரிந்தது. இனித் தான் இங்கிருப்பது சரியில்லை என்று எண்ணிக் கிழநரியிருந்த பக்கம் திரும்பியது. அங்கு கிழநரியைக் காணோம்! அது எப்போதோ நழுவிவிட்டது.

அதற்குள், ஒரு மிருகம் எழுந்து நின்று, "தோழர்களே! நாம் இனியும் இக்கிழப்புலியைவிட்டு வைக்கக் கூடாது. நாம் இப்பொழுதே அதைச் சூழ்ந்துகொள்வோம். ஏனெனில், இன்று நாமெல்லோரும் ஒன்று கூடியிருக்கிறோம். இத்தருணமல்லாமல் இனி எத்தருணமும் வாய்க்காது. இனி நாம் என்று ஒன்று கூடுவது? நம் சந்ததியினர்களைக் கொன்ற பாவத்திற்குப் பழி வாங்குவது என்று" என முழங்கியது.

கிழப்புலி பூனையாகி, 'நான்...... நான்......' என்றது. அந்த "நானை"க்கேட்க அங்கு ஒரு நாதியாவது இருக்க வேண்டுமே!

★

"ஏதடி பாவம்? -வேந்தர்களும், தேவேந்திரர்களும் செய்த் தகாத செயலேயா செய்துவிட்டேன்—என்னவோ, பாவம் — புண்ணியம் என்று கூறிப் பூச்சாண்டி காட்டிறியே—இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சாது, இந்தப் பனங் காட்டு நரி — ஆமாம்!"

"அத்தான்......"

"தேவர்கள் அருந்தியது சோம பானம்—நான் குடிப்பது சாராயம்! பெயர்தான் வித்தியாசமே தவிர, சரக்கு என்னமோ ஒண்ணுதான்!"

"குடிப்பவர்களெல்லாம் கொடிய நரகத்திற்கு போவார்கள் என்று கூறுகிருர்களே!"

"நாம்மென்ன சொர்க்கத்திலா வாழ்கிறேம்? நரகத்திலேதானே வாழ்கிறேம். சோமபானம் அருந்தும் தேவாதி தேவர்களெல்லாம் சொர்க்கத்தில் வாழும்போது, நான் மட்டும் எப்படி நரகத்திற்குப் போவேன்? பத்தாம்பசலிகளின் வெத்துப் பேச்சடி அது! வாழ்க்கையின் இன்பத்தை அறியாத உன்மத்தர்களின் வறட்டு வேதாந்தம் — பைத்தியக்காரர்களின் புலம்பலைக்கேட்டு எனக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டாய். உம்...... சொர்க்கம் எங்கே இருக்கிறது?... மதுக்கிண்ணத்தின் விளிம்பில் — மாதுசிரோன்மணிகளின் மடியில்...... காணுத சொர்க்கம் எனக்கெதற்கு? கண் எதிரே இருக்கும் சொர்க்கம் தான் எனக்குத்தேவை...... 'ஒண்ணு' போட்டுட்டா, சொர்க்கம் என் காலடியில்... கதை அளக்கிருள்... காதைக் கடிக்கிருள் பைத்தியக்காரி...... பாவம்—புண்ணியமென்று புலம்புகிருள்... பாவமாம் பாவம். வாழ்க்கையின் இன்பத்தைஅனுபவிக்கத் தெரியாத யாரோ ஒரு முட்டாள் 'பாவம்' என்ற பட்டத்தைச் சூட்டிவிட்டுப் போய்விட்டான். உடல் தாகத்திற்கு தண்ணீர் குடிக்கிறேம்; உள்ளத் தாகத்திற்கு......! 'பாவம்' செய்யாதவன் யார்? எல்லோரும்தான் 'பாவம்' செய்கிருர்கள்!"

"அத்தான் — குடிப்பது — பாவம் மட்டுமல்ல, குடியையே குட்டிச்சுவராக்கிவிடுமே... கோபுர கலசமென வாழ்வோரையும் குப்பை மேட்டுக்கு இழுத்து வந்து விடுமாமே இந்தப் பாழாய்ப்போன குடி!"

"இப்போமட்டுமென்ன; மாடமாளிகை — கூட கோபுரத்திலா வாழ்கிறேம்? இந்தக் குட்டிச்சுவரில் ஒன்று விழுந்துவிட்டால் நஷ்டம் ஒன்றும் வந்து விடாது — போடி...... உன் வேலையைப் பார்...... கணவன் எவ்வழியோ அவ்வழியேதான் மனைவியும் ......அதில் தவறுவதுக்கூடப் 'பாவம்'தான் உன் தத்துவப்படி......"

"புத்தகமா படிச்சிருக்கேன்? உங்க தத்துவத்தைப் புரிஞ்சுக்க......?"

"அப்போ எல்லாம் தெரிஞ்ச நான் சொல்றதைக் கேள்...... வாழப்பிறந்தவர்கள் மனிதர்கள்... மனிதன் பிறக்கிருன்-இறக்கிறான்... அந்த இடைக் காலத்திற்குள் அனுபவிக்கவேண்டிய இன்பத்தை எல்லாம் அனுபவித்துவிட வேண்டும்...... அந்த இன்பத்தையெல்லாம் 'பாவம்' என்றுல், உலகத்தில் பாவம் செய்யாதவர்கள் யார்? எல்லோரும்தான் பாவம் செய்கிருர்கள்...... இத்தகைய பாவத்தைச் செய்யாதவன் ஒன்று கையாலாகாதவனுக இருக்க வேண்டும், அல்லது வசதி இல்லாதவனுக இருக்க வேண்டும்...... கவலையைத் தீர்க்கும் மாமருந்து; உலக கவனத்தை மறக்கடிக்கும் தேன் விருந்து.. மது... உள்ளத்துக்கு உற்சாகமூட்டும் — உடலில் முறுக்கேற்றும். மலரில் தேன் ஏன் சுரக்கிறது; வண்டு குடிப்பதற்காக! தென்னம் பாளையிலே மது வடிகிறது; ஈச்சம் குருத்திலே குடம், குடமாக ஓடுகிறது...ஏன்? மக்கள் பருக! ஆண்டவனே அவனது அடியார்கள் அனுபவிக்க அளித்த வரப்பிரசாதங்களடி— வரப்பிரசாதம்! அதைக்குடிப்பது 'பாவம்'

என்றுல் ஆண்டவன் அதை ஏன் படைத்தார். ஆண்டவன் அளித்தசூரியனின்சுடரையும், நிலவின்ஒளியையும், தென்றலின் இனிமையையும் — காற்றையும் மழையையும் — அனுபவிப்பதுப்போல் இதையும் அனுபவித்து இன்பமாக வாழட்டும் என்றுதான் ஆண்டவன் இதையும் படைச்சிருக்கான். தென்னை தரும் இளநீரைப் பருகலாமாம் — அதன் பாளை தருவதைப் பருகுவது 'பாவ'மாம்... நீயே சொல்... பாவம்னு' ஆண்டவன் படைச்சிருப்பாரா? பேராசைக்காரன் யாரோ எல்லா மதுவையும் தானே குடிக்க வேண்டுமென்ற ஆசையில் மற்றவர்களைத் தடுக்க'பாவம்' என்றுசொல்லி ஏமாற்றியிருக்கலாம்;

அதுகாலப்போக்கில், பழமுறுத்தும் சொல்லாகிவிட்டிருக்கலாமல்லவா?'

"அப்போ குடிப்பது பாபமில்லே... உம்..."

"பொன்னி... பாபமோ, புண்ணியமோ... எனக்கு அதைப்பற்றி எல்லாம் கவலை இல்லை... உலகத்தின் இன்பங்களை எல்லாம் அனுபவிக்கவேண்டும். அது தான் என் கொள்கை. அது 'பாபம்' என்ற பயங்கரப் போர்வை போர்த்திக்கொண்டிருந்தாலும் சரி, அல்லது புண்ணியம் என்ற புனிதமான ஆடையை அணிந்திருந்தாலும் சரி எனக்கு அக்கரை இல்லை... கவலை இல்லை; பயமில்லை. வாழ்க்கை வாழ்வதற்கே... அதுதான் என் வாழ்வின் இலட்சியம்—வேதாந்தம்—சித்தாந்தம் எல்லாம்......"

பொன்னி பேசாமடைந்தையானாள். கணவனின் வாதத்திற்கு மறுப்புக்கூற அவளால் முடியவில்லை. அதுமாத்திரமல்ல, அவன் கூறுவதும் உண்மைதான என்ற எண்ணமும் சுரந்தது அவள் உள்ளத்தில்.

மலரின் மணத்தைச் சுமந்துவந்த தென்றல், அக்குடிசையை ஒளிமயமாக்கிக்கொண்டிருந்த 'மின்மினி' விளக்கை அணைத்துச் சென்றது. பொன்னியும் உறக்கம் என்ற போர்வைக்குள் புகுந்துகொண்டாள்.

* * *

பொன்னன்—பொன்னியின் இன்பமணவாளன். தனது வேதாந்தத்திலிருந்து இம்மியும் பிறழாமல் தனது பாதையிலே இராசநடை போட்டுக்கொண்டிருந்தான். மதுக்கலசமே கதியெனும்நிலை பிறந்தது நாளடைவில். பொன்னியும் இப்போதெல்லாம அவனைத் தடுப்பதில்லை. நாம் தெய்வமெனத் தொழும் தேவாதிதேவர்களே இதை அருந்துகின்றார்களாமே—நம் கணவன் குடிப்பதால் தவறென்ன? என்று அவளுக்கு அவளாகவே சமாதானம் கூறிக்கொள்வாள்.

*

காலம் படபடவென்று சிறகடித்துப் பறந்துகொண்டிருந்தது; மதுக்குடத்தில்தான் வாழ்வின் இன்பஊற்றுப்பெருக்கெடுக்கிறது என்று இருந்த பொன்னன், மாதுசிரோன்மணிகளின் மடியையும் தேட ஆரமபிததான். துடியிடையாள்களின் மெல்லியஉடல்களிலே சொர்க்கத்தைத்தேட ஆரம்பித்தான். கனிமொழிப் பாவைகளின் கடைவிழிப் பேச்சிலே சோர்க்கம் கண்டான. கன்னக் கதப்புகளில்—மின்னல் இடையில்—சுகம் கண்டான். பொன்னியை மறந்தான். வள்ளியை வைப்பாட்டியாக்கிக்கொண்டான். மது போதையும் அவனுக்கு உறுதுணையாக இருந்தது; மனதுக்கிசைந்த மனமோகனுங்கியின அணைப்பில், மணமேடையில் தாலி கட்டிய தையலை மறந்தான். வீட்டை மறந்தான். வீட்டின விளக்கையும் துறந்தான.

பொன்னி தணலில் விழுந்த மெழுகானாள். பெண் உள்ளம் எத்தகைய இன்னலையும் தாங்கிக்கொள்ளும்; ஆனல் தன்னுடையவரை வேறொருத்தி கூறுபோட்டுப் பங்கு பெறுவதை மட்டும் தாங்கிக்கொள்ளாது இதுபோல் தன்னுடையவரை வேறு ஒருத்தி அபகரித்துக்கொண்டு தனது இனபத்தைப் பறித்துக்கொண்டதைப் பொன்னியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவளின் விழிகள் குடம் குடமாக நீரைக் கொட்டின. இதயம் கனத்தது; கண் இமைகளும் சோர்ந்தன.

கணவனை எதிர்த்துப் பேச அவளுக்குத் தைரியமில்லை; திராணியுமில்லை. ஆனல் நாளடைவில் அவன் வள்ளியின் மையலில், கள்ளு மொந்தையில் விழுந்த ஈபோல் மயங்கிக்கிடந்து, பொன்னியைத் தூசென நினைத்துத் துறக்கலானான். தனது இன்பம களவாடப்படுவதை—சூறையாடப்படுவதை பொனனியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

* * *

ஒருநாள் இரவு! பொன்னன் வெளியே கிளம்பினான் வழக்கப்படி, வள்ளிக்கொடியின் குடிசைக்கு!

"அத்தான்..."

"உம்...என்ன...?"

"சாப்பிட்டதும், சாப்பிடாததுமாய், கை கழுவினதும் கழுவாததுமாய், எங்கே புறப்பட்டீர்கள்..."

"எங்கே போகிறேன் என்பது உனக்குத் தெரியாதா...?"

"தெரியாது..."

"தெரியாதவளுக்குச் சொன்னாலும் புரியாது..."

அழுக்கையகற்றி வெளுக்கின்றோம்
துணிக ளெல்லாம்;
இழுக்கில்லா வாழ்க்கை
எங்களுக்கேன் வரவில்லை?

"இன்று நீங்கள் எங்கும் போகக்கூடாது?"

"சீ மூதேவி...போகும்போது தடுக்காதே...'.

"நான் மூதேவியா? என் இதயதேவி, என் இல்லத்து விளக்கு என்று கொஞ்சிக் குலவியதை இதற்குள்ளாகவா மறந்து விட்டீர்கள்? அக்கள்ளியின் தலையணை மந்திரமா?"

"கள்ளி அல்லடி வள்ளி......புள்ளிமயில்...... வெள்ளி நிலவு..."

"என் வாழ்விலே கள்ளிக்காடாக புகுந்தவள்..."

"இப்போ என்னடி சொல்லுகிறாய்..."

"என்னுடையவருக்கு நான் இருக்கும்போது வேறு ஒருத்தி தேவை இல்லை என்கிறேன்..."

"அதைச் சொல்ல நீ யார்?"

"நான் யாரா? நான் உங்கள் மனைவி...நீங்கள் தொட்டுத் தாலிக்கட்டிய மனைவி...!"

"மனைவி......வீட்டிலே அடைப்பட்டுக் கிடக்க வேண்டிய நாய் — மணவாளனை எதிர்த்துப் பேசும் பேய்..."

"நான் இன்று உங்களுக்கு நாயாகவும், பேயாகவும்தான் ஆகிவிட்டேன். ஆனால் மங்கல முரசு கொட்ட, மணவிழா மேடையில் என்கை பிடித்த போது......"

"கைபிடித்தேன்; கழுத்தில் தாலியும்கட்டினேன்; அதை நான் மறுக்கவில்லை; மறைக்கவும்மில்லை..."

"அப்படி என்றால் என்னைக் கண்ணீர் வடிக்கச் செய்துவிட்டு :காரிகை ஒருத்தியின் வீட்டை நோக்கி ஓடுவானேன், விட்டில் பூச்சியைப்போல...?"

"கண்ணகிபோல ஒருத்தி வீட்டிலிருந்தாலும், மாதவி ஒருத்தி தேவைதான் இந்தக் கோவலனுக்கு......"

"காலமெல்லாம் கண்ணீர்வடித்து மண்ணான கண்ணகி அல்லநான்—என் கண்ணீர் வெள்ளத்தில் இந்த மாதவி மிதந்துவிடுவாள்..."

"பைத்தியக்காரி...நளாயினி கதை தெரியுமாடி? அழுகிப்போன தனது கணவனுடைய உடலைச்சுமந்து சென்றாள் தாசிவீட்டிற்கு...அதுதான் தர்மபத்தினியின் இலட்சணம்...நீ என்னவோ..."

"என்ன?"

"அதுமட்டுமா; நம்மைப் படைத்த ஆண்டவர்களே பக்கத்தில் ஒருத்தியை அணைத்துக்கொண்டு தானே இருக்கிறார்கள்?"

"ஆஹா!......"

"குழலூதிக் கும்மாளம்போட்ட கோபால கிருஷ்ணனுக்கு பாமா—ருக்மணி......முப்புரம் எரித்த விரிசடைப் பெருமானுக்குப் பக்கத்திலே பார்வதி; தலையிலே கங்கை, சேவல் கொடியும், வேலும் சுமக்கும் சுப்ரமணியருக்கு வள்ளி, தெய்வயானை! தெய்வயானை நீ; வள்ளி என் உள்ளம் கவர்த்தவள். நம்மைப் படைத்த பிரம்மாக்களே இரண்டு பெண்டாட்டிக் காரர்கள்...நானமட்டும்......!'

"அப்போ......மனைவியிருக்கும்போது.......பிற பெண்களிடம் சோரம்போவது பாவமில்லையா?"

"சந்திரன் குருபத்தினியாம் தாராவிடம் சோரம் போகவில்லையா?

பாவமாம் பாவம்? பாவமானால் தேவாதிதேவர்கள் இப்படியெல்லாம் செய்வார்களா?"

பொன்னியின் பதிலுக்குப் பொன்னன் காத்திருக்கவில்லை. தனக்காகக் கண்கள் பூத்துப்போகக் காத்திருக்கும் வள்ளியின் இல்லம் நோக்கி ஓடினான்.

காலம் மெதுவாகஓடிக்கொண்டிருந்தது. பொன்னன் வள்ளியின் மடியே கதியெனக்கிடந்தான்; பொன்னி துன்பத்தால் தாக்கப்பட்டாள் என்றாலும், கணவன் சொல்வது தவறல்ல; பாபமல்ல, என்ற முடிவிற்கு வந்து தனக்குத்தானே சமாதானம் கூறிக் கொண்டாள்.

* * *

நீலவிதானத்தில் நித்திலப்பூக்கள் நர்த்தனமாடிக் கொண்டிருந்தன. கோல நிலவு குமரிப்பெண்போல் குதியாட்டம் போட்டுக்கொண்டிருந்தது. மலரின் மணத்தை வையகமெல்லாம் வாரி இறைத்துக் கொண்டுதெம்மாங்கு பாடியதுதென்றல். இசைக்குப் பக்கமேளம்போல் தென்னை சலசலத்தது.

இயற்கை அன்னை இத்தகைய இன்பத் தாலாட்டுப் பாடி உலகத்தைத் தூங்கவைக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

திருட்டு விழிகொண்ட பூனை, வெண்ணெய்ப் பானையை உருட்டும வேளை. கட்டுக்கடங்காக் காளைகள் கள்ளத்தனமாக கரும்புத் தோட்டத்தை நோக்கி ஏறுநடைப்போடும் சமயம. கட்டாணி முகத்தை



மண்பாண்டம் வனைந்து
வழங்குகின்றோம்; வயிறார
உண்பதற்கு வழியில்லை!
ஓயாதோ இத்தொல்லை?

உழுகின்றார் பேர்சொல்லி
ஊராள்வோர் வாழ்கின்றார்;
அழுகின்றோம் நாங்கள்
ஆதரிப்பார் இல்லாது!

நோக்கி 'எட்டா வானத்தில் நீந்தும் நிலவு இதற்கு ஈடாகுமோ?' என்று படுக்கையறைப் பாடத்தைக் காதலர்கள் 'ஒப்பிவிக்கும்' தருணம்......

பொன்னன் தள்ளாடித் தள்ளாடிக் குடிசையை நோக்கி இராச நடை போட்டான். மதுபபோதை. கண்கள் சிவந்திருந்தன- வள்ளி சிணுங்கிவிட்டாள் போல் தெரிகிறது; இல்லையென்றால் பொன்னியை நாடி ஏன் போகப்போகிறான்...

குடிசையின் கதவைத் தட்டினான்...... கதவு திறந்துகொண்டது. தாள்போடாமல் இருப்பதைக் காண ஆச்சரியமுற்றான்......

"பொன்னி...பொன்னி..."

அவன் குரல்தான் எதிரொலித்தது...

நெருப்புக்குச்சியைக் கிழித்து, குடிசையை ஒளி மயமாக்கினான்......

"பொன்னி..."

பொன்னி காணப்படவில்லை.

காடை விளக்கைப் பற்றவைத்தான்.

மின்மினியைப்போல் அவ்விளக்கு மின்னியது...

தேடினான் பொன்னியை மூலைமுடுக்கெல்லாம்.

பொன்னி காணப்படவில்லை.

கிழிந்த பாய் விரித்தபடி இருந்தது...பொன்னனின் போதை மயக்கம் சிறிது குறைந்தது... அவளின் தகரப்பெட்டியைத்திறந்தான. அதிலிருந்த புடவையைக் காணவில்லை......கண்ணாடி வளையலைக் காணவில்லை...

பொன்னி எங்கே போயிருப்பாள்? அவன் சிந்தனை சக்கரமாகச் சுழன்றது...

அங்கே 'தெருக்கூத்து' நோட்டிஸ் ஒன்று விழுந்துகிடந்தது......

அதைப் பிரித்துப் பார்த்தான்...

அந்த ஊரிலே 'டேரா' அடித்திருந்த நாடகக் கம்பெனி நடத்தும் நாடகத்தின் விளம்பரத்தாள். சின்னரங்கம் நடிக்கும் 'தாராசாசாங்கம்' காணத் தவறாதீர்கள் என்று பொறிக்கப்பட்டிருந்தது.

பின்புறம் திருப்பினான்.

அதில்:—

"அத்தான்! நான் போகிறேன்...... வாழ்க்கையின் எல்லா இன்பத்தையும் அடைவதுதான் மக்களின் இலட்சியம் என்று நீங்களே போதித்தீர்கள்...

நாடகத்தில் நடிக்கும் சின்னரங்கத்தின் அணைப்பில் நான் இன்பம் காணப் போகிறேன்...

நான் செய்தது தவறாகவோ அல்லது பாபமாகவோ இருக்க முடியாது. ஏன் தெரியுமா? குருபத்தினியாம் தாரா சந்திரனுடன் சோரம் போகவில்லையா? ஐவருக்கும் பத்தினியாம் பாஞ்சாலை கர்ணனமேல் ஒரு கண்வைக்கவில்லையா?

ஆகவே நான் செய்தது தவறோ, பாபமோ அல்ல என்பதை நீங்களும் உணர்வீர்கள்."

இன்னும் என்னமோ இருந்தது; அதைப் படிக்கப் பொன்னனால் முடியவில்லை...

பொன்னி போய்விட்டாள்...அவன் வாய் முணுமுணுத்தது......

"பாவம்" செய்யாதவர்கள் யார் இந்தப் பரந்த உலகில்; எல்லோரும்தான் 'பாபம்' செய்கிறார்கள்—என்று யாரோ அவன் காதில் உரக்கக் கூவினது போல் இருந்தது!!

பாவம்! புண்ணியம்! — இவற்றின் விளக்கம் பெறப்புறப்பட்டான பொன்னன—புதுநடை போட்டு—புத்துலகு நோக்கி!

அரங்கண்ணல்

மும்முனைப் போராட்டம் நடந்தபோது, இரயில் சங்கிலியைப் பிடித்திழுத்துவிட்டு, அதற்காக ஒரு மாதம் தண்டனை பெற்றிருந்தேன். திருச்சி சிறையில், ஒரு விவசாயி இருந்தார். அவரைக் கண்டால், எல்லோரும் கொலை செய்துவிட்டு வந்தவர் என்று சொல்லி, அருகே நெருங்கவே அஞ்சுவர். நானும் பல நாள் அஞ்சியபடியே இருந்தேன். விடுதலையாக இன்னும் இரண்டு மூன்று தினங்களிருந்ததால், இவ்வளவு சாதுவாக இருக்கும் அவர் எப்படிக் கொலைக் காரனானார் என்பதை அறிய ஆசைகொண்டேன். கேட்டேன். அவர் சொன்னது, இதோ:-

*

செல்லி, என் மகள்! அதிலேயே அடங்கிவிட்டது, அவளிடம் என்ன செல்வம் இருக்கும் என்பதற்குள்ளபதில். வைரத்தால்செயினும், முத்து வளையலும், மோகனக்கல் மோதிரமும், இரத்தினக்கல் பதித்த சடைபில்லையும் செய்து போட்டுப் பார்க்கத்தான்; எனக்கும் ஆசை. எங்கே போவேன்? இதையெல்லாம் போட்டால் அவள் எப்படியிருப்பாள் என்று அடிக்கடி நினைப்பேன். அந்த நினைப்பு உலரும் வரையில், ஆனந்தமாகயிருக்கும். அடுத்தவினாடியே, கனவுகலையும், காதில் பனை ஓலைச் சுருளும், கையில் இரப்பர் வளையலும், கழுத்தில் கறுப்புமணியுமாகக் காட்சிதருவாள், செல்லி. கண்களில் நீர்நிரம்பும். "என்னப்பா! என்னைப் பார்த்ததும் அழுகிறாய்?" என்று அவள் என்னைக் கேட்கமாட்டாள். ஏனெனில், அவள் ஒரு ஊமை!! பிறவி ஊமையோ என்று கேட்பீர்கள். அல்ல அல்ல. பெரும்பாவி என்னால்தான், ஊமையானாள் என செல்லி. அம்மா! அப்பா!! — என்கிற அரைகுறை வார்த்தைகளை, இரண்டு வயதில் அவள் சொல்லி, நான் கேட்டதுண்டு. ஒருநாள் இரவில் 'நிலா' என்று என் மனைவி சொல்ல, உடனே செல்லியும் 'நிலா' என்றாள். அன்று முழுதும் கழனியில் நான் பட்ட பாடெல்லாம் மறந்துபோயிற்று! கட்டியணைத்து, அவள் அழும் வரையில் முத்தமிட்டேன்!

அடடா, இப்போதும் அந்த மழலைப்பேச்சு, என் காதுகளில் ஒலிக்கிறது. சோச்சீ, என்று சொல்லும் போது எவ்வளவு சுந்தரமாக இருக்கும் தெரியுமா? அம்மா என்று அழைக்கும்போது, அவள் கன்னங்களில் விழும் குழியிருக்குமே, அதற்கே ஆயிரம் பொன் தரலாம்! ஊம், அதை நினைத்து என்ன பயன்? ஒவ்வொரு ஆண்டும், எங்களூரில் பங்குனி உத்திரம் பிரமாதமாயிருக்கும். கடைசியாகத், தியாகேசப் பெருமானைத் தேரில் வைத்து நாலு வீதிகளிலும் இழுத்துவருவார்கள். நீங்கள்கூடக் கேட்டிருக்கலாம், திருவாரூர்த் தேரழகு என்று! அழகுமட்டுமல்ல, அந்தத் தேர்; மிகப்பெரியதும் கூட!! அதை இழுப்பதென்றால், சின்னஞ்சிறு பங்களாவை அசைத்துக்கொண்டு போவதுபோல என்று வைத்துக்கொள்ளுங்களேன். சுமார் நாலாயிரம் பேரிழுத்தால் அசையும்; ஐயாயிரம் பேரிழுத்தால் நகரும். அப்படிப்பட்ட தேரை இழுக்க, கோயிலைச் சுற்றியுள்ள ஐந்தாறு வீட்டு அர்ச்சகர்களாலாமுடியும்? சூடம் காட்ட, 'தட்சணை' என்று கையை நீட்ட, அர்ச்சனை செய்ய அவர்கள் இருந்தார்கள். தேர்வலம் வரும்போது, அவர்களையும் சேர்த்துத்தான் நாங்கள் இழுத்தாக வேண்டும். ஆண்டவனுக்கு வியர்க்காமலும், பசிக்காமலும் பார்த்துக்கொள்ள அவர்கள் அவசியம் பக்கத்திலிருக்கவேண்டும் என்பார், எங்களூர்த் தலையாரி. ஒவ்வோராண்டும், இந்த உத்திரத் திருவிழா துவங்கியதும், திருவாரூருக்குப் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கெல்லாம ஓலைவரும். உடனே ஒவ்வொரு மிராசுதாரர்களும், தங்களிடம் வேலைபார்க்கும் பண்ணையாட்களுக்கெல்லாம் 'படி' போட்டுக் காசு கொடுத்து அனுப்பிவைப்பார்கள். தலையாரிதான, எங்களுக்குத் தலைவர். நான் வேலை பார்த்த பண்ணைக்கும், ஓலை வந்தது. எங்கள் எசமான் பெரிய பக்தர். கூலியும், கூட ஓரணாவும் கொடுத்து, எங்களையெல்லாம் போகச்சொல்லி உத்தரவுபோட்டுவிட்டார்! போகிறதுதான் போகிறோம், பெண்டாட்டி பிள்ளையையும் அழைத்துக் கொண்டு போவோமே என்று எனக்கு ஆசை. என் வீட்டுக்காரி வேம்பாயி, நான் சொல்வதற்கு முன்பே, வறட்டி தட்டி சேர்த்துவைத்திருந்த நாலணாவையும் கலயத்திலிருந்து எடுத்துக்கொண்டு, தயாராயிருந்தாள. செல்லி, வேம்பாயி, சகிதம் தேரிழுக்கச்

இளம்பினேன். திருவிழா, எனக்குத்திண்டாட்டவிழாவாகும் என்று கொஞ்சமும் நான் நினைக்கவில்லை! வேடிக்கை பாருங்கள் என்று வேம்பாயியையும் செல்லியையும் ஒருபுறம் விட்டுவிட்டு, நான தேரிழுக்கலானேன். வெடி இளம்பும், சப்தம் கேட்கும் நாங்கள் இழுப்போம். களைத்துக் கொஞ்சம் நின்ருல், தலையாரி சாட்டையை சுழற்றுவார். கையில் கொண்டுவந்த நாலணுவுக்கும் கடலை, மிட்டாய், வாங்இக் கொடுத்துக்கொண்டு குழந்தைக்கு வேடிக்கைக் காட்டிக்கொண்டிருந்தாள் வேம்பாயி.

வரிசை வரிசையாக ஏழெட்டுக் குழாய்களில் மருந்துகளைப் போட்டுக் கிட்டித்து, வேட்டுக் கிளப்புவார்கள். எப்படியிருக்கும் தெரியுமா அந்தச் சத்தம்? ஊரே நடுங்குவதுபோலிருக்கும்! அந்த வெடிக் கட்டைகளின் பக்கம் வேடிக்கை பார்த்தவண்ணமே போயிருக்கிருள் வேம்பாயி. ஆண்டவனின அதிர்வெடி முழங்கவும், அவள் நெருங்கவும் சரியாக இருந்திருக்கிறது. 'போகாதே! போகாதே!' எனறு யாரோ சிலர் கூவியும், வடம்பிடித்துக் கொண்டிருந்த எங்களது 'ஆ, ஊ' சத்தத்தில், அவள் காதில் விழவில்லை. வெடித்தது! ஒரு கட்டை, வெடியின் வேகத்தால், கிளம்பி, வேம்பாயின் தலையைத் தாக்கியது!! குழந்தையோடு, மண்ணில் சாய்ந்தாள். பிணமானுள். அந்த வெடியின் ஓசையைக் கேட்டு 'ஆ' என்று அலறிய மகள்தான் பிறகு வாய்திறந்து பேசவேயில்லை, செல்லி. அவளுக்கு வாய் ஊமையாயிற்று; எனக்கு வாழ்வே 'ஊமை'யாயிற்று.

*

கூன், குருடு, செவிடு, ஊமையாகப் பிறப்பதே கொடுமை! அதிலும் ஆணுக இருந்தால்கூடப் பரவாயில்லை. பெண்ணுக இருந்துவிட்டால் பெற்றவளுக்கு அதைவிட வேதனை தேவையில்லை. வேம்பாயி இறந்த துக்கம் ஒருபுறமிருக்க, செல்லியின் வயது ஏறிக்கொண்டே போகும் துக்கம் என் நெஞ்சைப் பிளந்தது. வளர்கிருள் — அழகு வளர்கிறது — துள்ளுகிருள் — ஓடுகிருள் — அவளுக்கு ஒரு நாளைக்குக் கலியாணம் செய்துகொடுப்பேன்—கணவனேடு போவாள்—குழந்தை குட்டிகளோடு வீட்டுக்கு வருவாள்—அவள் குழந்தைகள், 'தாத்தா' என்று தோளைக் கட்டிக்கொள்ளும், என்றெல்லாம் நினைக்கக்கூடிய நிலையா என்னுடையது? நாளைக்கு என் செல்வியைக் கட்டிக்கொள்ள எவன் வருவான்! எவன் சம்மதிப்பான்? — இந்தக் கவலை செல்லியைப் பார்க்கும்போதெல்லாம், எனக்கு வரும். இதனுல் அவள்மீது நான் கொண்டிருந்த அன்பும் அனுதாபமும் பன்மடங்கு அதிகரித்துக்கொண்டிருந்தது. ஒரு நாள், என் செல்லியைப் பார்த்து ஒருவன், ஊமைச்சி என்று சொல்லிவிட்டான். எனக்குக்கோபம் வந்துவிட்டது. தலையாரியின் மகன என்று கூடப் பார்க்காமல் அடித்துவிட்டேன். அவன் உண்மையைத்தான் சொன்னுன். என்ருலும்

ஓராயிரம் தேள்கள் கொட்டியதுபோல குத்திற்று அந்த உண்மை. என் செல்லி ஊமைதான்! மனதிலே நினைப்பதை வெளியில் சொல்ல, அவள் என்ன பாடுபடுகிருள் என்பது எனக்குத்தான் தெரியும். கண்களின் அசைவிலேகூட அவளது 'பாஷை'யைப் புரிந்துகொள்ளும் பயிற்சி பெற்றேன். வெளியார் சுலபமாக, ஊமைச்சி என்பார்கள் என் செல்லியை. வாள்கொண்டு அறுப்பதுபோல் அறுக்கும் என் இதயத்தை. ஐயோ! அந்த அனுபவம் உங்களில் யாருக்கும் வந்துவிடவேண்டாம். கொடுமை! கொடுமை!! மகாக்கொடுமை!!! அருமையாக ஒரு ஆடு வளர்த்து வந்தேன். அந்த ஆட்டின் மீது செல்லிக்கு அளவில்லாத பிரியம். ஏழெட்டு வயதான அவள், நான் வயலுக்குப் போகும்போது, அதையும் ஓட்டிக்கொண்டு வருவாள். மண்வெட்டி தூக்கியும், ஏர் பிடித்தும், நான வேலை செய்துகொண்டிருக்கும்போது. வரப்புகளில் ஆட்டை மேய்த்துக்கொண்டிருப்பாள். ஒருநாள்! அருகேயிருந்த திடலில் ஆட்டை மேயவிட்டுவிட்டு, வாய்க்காலில் மீன்பிடித்துக்கொண்டிருக்கிருள், செல்லி. மேய்ந்துகொண்டிருந்த ஆடு, ஒரு புற்றின மேல் நின்றவாறு, புல் பூண்டுகளைத தினறுகொண்டிருந்திருக்கிறது. இரை தேடிவிட்டுத் திரும்பிய ஒரு நல்லபாம்பு, புற்றுக்குள் நுழையப்போயிருக்கிறது. காலால் மிதிததிருக்கிறது ஆடு. பாமபு சீறி, கொத்தப் பாய்ந்திருக்கிறது. ஆடுஓட: பாம்பு துரத்த, இதைப் பார்த்திருக்கிருள் என் மகள். அருகில்தான் நான் வேலை செய்துகொண்டிருந்தேன். கூவிக்கொண்டு ஓடிவந்தாள். வேலைத் தொல்லை! சரி, சரி, என்று விரட்டினேன் செல்லியை. அவள் அழுதாள். வருமாறு சாடை செய்தாள். தலையிலடிததுக்கொண்டு போனேன். ஆடு, சாகத் துடித்துக்கொண்டிருந்தது. பாம்பு ஒரு பக்கத்தில் போய்க்கொண்டிருந்தது. அவளுக்கு வாயிருந்தால் விபரத்தைச் சொல்லியிருப்பாள்! ஓடிப்போய்ப் பாம்பை விரட்டி ஆட்டைக் காப்பாற்றியிருக்கலாம்!

ஒருதடவை நள்ளிரவு. ஓடிவந்து என்னை எழுப்பினுள். கைவிரலைப் பிடித்துக்கொண்டு அழுதாள். என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னையும் மீறிய அசதி. எரிச்சல் வந்தது. அதட்டினேன். பயந்துகொண்டு படுத்துவிட்டாள். காலையில் எழுந்து பார்த்தால், வாயில் நுரைதள்ள, மயக்கமுற்றுக்கிடந்தாள் செல்லி. வைத்தியர் வந்தபோதுதான தெரிந்தது, நட்டுவாக்காலி, நள்ளிரவில் அவளைக் கடித்திருக்கிறது என்கிற செய்தி. நல்ல வேளை! விஷம் தலைக்கு ஏறவில்லை; பிழைத்துக்கொண்டாள். இப்படி ஊமையான அவளை வைததுக்கொண்டு நானபட்ட கஷ்டம் சொல்லுந்தரமல்ல. இந்த அழகில் பாவாடைப்பருவம் தாண்டி, தாவணிப் பருவத்துக்கு வந்துவிட்டாள். வாய்தான ஊமையே தவிர, வார்த்தெடுத்த தங்கச்சிலைபோலிருந்தாள்! உண்மையில் "பாப்பார்" வீட்டிலே பிறக்கவேண்டியவள் தவறிப்போய் என் வீட்டில் பிறந்துவிட்டாள் என்றுதான் பார்ப்போர் சொல்லுவார்கள். பொன்னிற மேனி! பூரிக்கும் பருவம்!! என கவலை மேலும் அதிகமாகிவிட்டது. ஒரு இரவுநன்ருகத் தூங்கிக்கொண்டிருந்த நான, அலறியடித்துக்கொண்டு எழுந்திருந்தேன். என்ன நடந்தாலும் வாய் திறந்து சொல்ல முடியாத என் மகள் தோப்பிலே சுள்ளிஒடித்துக்கொண்டிருக்கிருள். வயலுக்குப்போய் விட்டுப் பெரிய பண்ணையார் மகன் வருகிருன். அவனைப் பார்த்ததும், திகைத்து நிற்

கிறான். அருகில் வருகிறான். ஏதோ, கேட்கிறான். பதில் சொல்லாமல், அவள் பரக்கப் பரக்கக் கிளம்பி வருகிறாள். கையைப் பிடித்து இழுக்கிறான். உதறுகிறாள். விடவில்லை அவன். அவளைப் பரபரவென்று இழுத்துக்கொண்டு சவுக்குத் தோப்புக்குள் போகிறான. பிறகு...? பிறகென்ன! பாவிப்பயலே, என்று அலறிக்கொண்டு எழுந்து பார்த்தேன். கீற்றுக் குடிசையின் வழியாகப பாய்ந்து வந்த நிலா, முகத்திலே கோலம்போடச் செல்லி, நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அப்போதுதான், கண்டது கனவு எனறு தெரிந்தது எனக்கு. பெருமூச்சு வந்தது. இரவு முழுதும், தூங்கவில்லை. தலையணையெல்லாம் என கண்ணீரால் நனைந்தது. கனவில் கண்டதுபோல, என்றாவது ஒரு நாளைக்கு நடக்காது என்று யார் சொல்லமுடியும்? பட்டணத்தில்படித்துவிட்டு வந்திருக்கும் பெரிய பண்ணையார் மகன், அடிக்கடி என் வீட்டுப்பக்கம் வருவதும், அர்த்தமில்லாமல் திரிவதும், என் கவனத்துக்கு வந்தது. "நம் தோட்டத்தை நாம் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டால், எந்த மாடு வந்து புகமுடியும்?" என்று தீர்மானித்துக்கொண்டேன்.

*

பயம் அதிகமானதன் காரணமாக, தனியாக இருக்கும் செல்லிக்குத் துணையாக இருக்கட்டுமேயென்று ஒரு நாய்க்குட்டி கொண்டுவந்து வளர்த்தேன். மனிதனாகப் பிறக்கவேண்டியது நாயாகப் பிறந்துவிட்டது, என்று அக்கம்பக்கத்தில் சொல்வார்கள்! அவ்வளவு அறிவுள்ளது. எங்கு போனாலும் செல்லி அதோடுதான் போவாள். யாராவது வீட்டுப்பக்கம் வந்தால், தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடவேண்டியதுதான். விடாமல், துரத்தும். அது வந்தபிறகு, என் கொல்லைக்குள் ஒரு மாடு நுழைந்ததில்லை. செல்லிக்கு அதன்மீது அளவிலாத பிரியம். அதுக்கும் அவள்மீது அன்பு. கிராமத்தில் எல்லோரும் சொல்லுவார்கள், என்நாயின் அறிவு குறித்து. ஏர்பூட்டக் காலையிலே மாடுகளை ஓட்டிக்கொண்டு நான் போகவேண்டியதில்லை. ஏர் கலப்பையை என் தோளில் எடுத்துக்கொண்டு, மாடுகளை, செல்வம் — அதுதான், என்நாயின் பெயர்! — இடம்விட்டு விட்டால், மாடுகள் ஓடாமல் மடக்கி, நேராக வயலுக்குக் கொண்டுவந்து சேர்த்துவிடும். அவ்வளவு அறிவுள்ள நாயை நான், வைத்திருப்பது சுற்றுவட்டாரத்துக்கெல்லாம் தெரியும்! நாங்கள் சாப்பிட்டாலும் சாப்பிடாவிட்டாலும் செல்வத்துக்குப் போட்டுவிடுவோம். கொழு கொழுவென்று வளர்ந்த, அது நிற்பதே ஒரு தனியழகுதான். இவ்வளவு அருமையாக வளர்க்கும் நாயை, விலைக்குக் கேட்டான், சர்க்கஸ்காரன்! எங்களூருக்குப் பக்கத்தில் வந்து, 'டேரா' போட்டிருந்தான். கொடுப்பேனா நான்? மறுத்துவிட்டேன். நூறு ரூபாய் கூடத் தருகிறேன், என்றான். நூறுரூபாயென்ன! ஆயிரம் கொடுத்தாலும் கூட முடியாது, என்று சொல்லிவிட்டேன். செல்லிக்கும் எனக்கும் செல்வமான அதை விற்க மனம் வருமா? பெரிய பண்ணையார் மகன், மாணிக்கம் மூலம்கூடச் சர்க்கஸ்காரன் கேட்டுப் பார்த்தான். நான் மறுத்துவிட்டேன். இப்படி மெல்லாம் மறுத்த நானே, சில நாட்களுக்கெல்லாம், சர்க்கஸ்காரனைத் தேடிப்பிடித்து என் செல்வத்தை விற்கவேண்டியதாயிற்று. செல்லிக்கு ஒரு அத்தை மகன் உண்டு! செல்லியைக் கட்டிக்கொள்ளவேண்டிய முறையுள்ளவனும் அவன்தான். ஆறுமுகம் என்று பெயர். சென்ற சண்டையின்போது, பட்டாளத்தில் சேர்ந்திருந்தான். சண்டை முடிந்த பிறகு, வடக்கே எங்கேயோ ஒரு கம்பனியில் 'பியூன்' உத்தியோகம் கொடுத்திருந்தார்களாம். லீவுக்கு வந்த அவன் அடிக்கடி என் வீட்டுக்கு வருவான். செல்லி அவனுக்குக்காட்டும் மரியாதையையும் அன்பையும் கண்டு நாயும் அவனிடம் பிரியம் காட்டியது. செல்லி ஊமையாகப் போய்விட்டாளே என்கிற கவலை அவனுக்கிருந்தது என்பது எனக்குத் தெரியும். மிகவும் நல்லவன். செல்லிக்குமட்டும் இந்த 'ஊனம்' இல்லாமலிருந்தால் நானே வலுவில் அவன் வீட்டில் சொல்லிக் கலியாணத்தை முடித்திருப்பேன். இப்போது எந்த முகத்தோடு ஆறுமுகத்தின் அப்பா அம்மாவிடம் நான் கலியாணத்தைப்பற்றிப் பேச்செடுக்க முடியும்? ஒருநாள் இதைப்பற்றி அவனிடம் பேசிக்கொண்டிருந்தபோது சொன்னான். டாக்டரிடம் கொண்டு போய்க் காட்டும்படியாக! ஊமையைப் பேசவைக்க இங்கிலீஷ் டாக்டர்களால் முடியும் என்று சொன்னான். ஒரு நாள் செல்லியைக் கூட்டிக்கொண்டு நானும் அவனுமாக திருவாரூரிலிருந்த ஆசுபத்திரிக்குப்போனோம். "பிறவி ஊமையில்லாததால், நிச்சயம் பேசவைக்கமுடியும். ஆனால், இது என்னால் முடியும் என்று சொல்லுவதற்கில்லை. எதற்கும் எனக்குத் தெரிந்த பெரிய டாக்டரொருவர் தஞ்சாவூரிலிருக்கிறார். அவரிடம் கொண்டுபோய்ப்பார்" என்றார், டாக்டர். சிபாரிசுக் கடிதம் ஒன்றும் எழுதிக் கொடுத்தார். நூறு ரூபாயிருந்தால் போதும் என்றும் சொன்னார். எங்கே போவேன் நூறு ரூபாய்க்கு!



நான் குடியிருக்கும் மனைக்கட்டே, பண்ணையாருக்குச் சொந்தமானது. திருடினாலொழிய வேறு எந்த வழியிலும் எனக்குப் பணம் கிடைக்க வழியில்லை. ஆறுமுகத்தின் நிலையும் அப்படித்தான். அவன் கையில் ஊருக்குத் திரும்பிப்போவதற்கு மட்டுமே பதினைந்து ரூபாய்தான் இருந்தது. யோசித்தேன். யோசித்தேன். செல்லிக்குத் தெரியாமல் செல்வத்தை சர்க்கஸ்காரனுக்கு விற்றுவிடுவது என்கிற முடிவுக்கு வந்தேன்! சர்க்கஸ்காரனிடம் போய்ப்பேசி பணத்தையும் வாங்கிக்கொண்டு வந்தேன். நான் செல்லியை அழைத்துக்கொண்டு தஞ்சாவூருக்குக் கிளம்பிப் போனதும் நாயைக் கொண்டுபோய் சர்க்கஸ்காரனிடம் ஒப்படைத்துவிடும்படி ஆறுமுகத்தை ஏற்பாடு செய்தேன். நாயை விற்பது செல்லிக்குத் தெரிந்தால், என்திட்டமெல்லாம், தொலைந்தது. நிச்சயம் அவள் சம்மதிக்கமாட்டாள் என்று எனக்குத்தெரியும்.

தஞ்சாவூர் ஆசுபத்திரியில் பத்து நாளைக்குமேல் வைத்திருந்தார்கள், செல்லியை. கூட நானும் இருந்தேன், தொண்டைக்கருகில், ஆபரேஷன் செய்தார்கள். பெரிய ஆசுபத்திரியானதால் எப்படியும் செல்லிக்குப் பேசவந்துவிடும் என்று எண்ணியபடியே இரவு பகலாக அங்கேயே கிடந்தேன். பத்து

நாட்களுக்குப்பிறகு தையல் பிரித்தார்கள். என்னையறியாமல் பரபரப்பும் ஆவேசமும் அடைந்தேன். செல்லி பிறந்தபோது, எனக்கு அவ்வளவு பரபரப்பில்லை. ஊமைச்சி என்று ஊராரால் கேவலமாகப் பேசப்படும் என் செல்லிக்குப் பேசவந்துவிட்டால்! கல்யாணக்கோலத்தில் என் செல்லி நிற்பதும், ஆறுமுகத்துடன் அவளை அனுப்பிவைப்பதுமான காட்சிகள் மனதில் வந்தன. டாக்டர் அறையை விட்டு எப்போது வருவார்? செல்லி எப்போது வருவாள்?—என்று அறையின் கதவுகளையே பார்த்துக்கொண்டிருந்தேன். கடைசியில் அறைக்கதவுகள் திறந்தன! செல்லியை அழைத்துக்கொண்டு டாக்டர் வந்தார். அப்பா!—என்று செல்லி என்னை அழைப்பாள் என்று எதிர்பார்த்தேன். இன்னும் ஊமையாகவேயிருந்தாள்! டாக்டரைப் பார்த்தேன். உதட்டைப் பிதுக்கினர் அவர்!! செல்வத்தை, இழந்ததுதான் மிச்சம். என் மகளுக்குப் பேசவரவில்லை. பேசாமல் ஊருக்குத் திரும்பினேன்.

*

"என்னப்பா! எங்கே நம் நாய்? எங்கே என் செல்வம்?" என்று செல்லியால் கேட்கமுடியுமா? வீட்டைச் சுற்றி ஓடினள். என்னைப் பார்த்து விழித்தாள். என்னிடம் வந்து எங்கே செல்வி என்று சாடையால் கேட்டாள். என்ன சொல்வேன் நான்? "உன் எழவுக்குத்தான் அதை விற்றுத் தொலைத்தேன்!" என்றேன் கோபமாக. ஒரு மூலையில் போய் உட்கார்ந்துகொண்டு, ஊமையான என் மகள் அழுதாள். என் உள்ளமெல்லாம் கொதித்தது. சாப்பிடவில்லை. இருந்த இடத்தைவிட்டு எழவும் இல்லை. அழுது கொண்டே படுத்திருந்தாள். எவ்வளவோ சமாதானம் சொன்னேன். ஊமை அவள்! அவளுக்கு உலகத்திலேயிருந்த ஒரே ஒரு செல்வம், அந்த நாய்தான்!! அதை விற்றேன் நான். பட்டுச்சொக்காய் வாங்கவோ, பளபளப்பான நகைகள் வாங்கவோ நான் விற்கவில்லை. அவளுடைய வாய் திறக்காதாளென்கிற ஆசையில்தான் விற்றேன். எண்ணம் பலிக்கவில்லை. மாருக, என் மகளின் கண்களிலிருந்து, கண்ணீர் வடிகிறது! அந்தக் கண்ணீரோ வெந்துபோன என் இருதயத்துக்குள் ஈட்டியாகப் பாய்கிறது!! என்ன செய்வேன்? அவள் கண்களிலிருந்து வழியும் நீரை நிறுத்தவேண்டுமென்ருல், அவள் செல்வத்தை அவளிடம் கொண்டுவந்து சேர்த்தால்தான் முடியும். எப்படிச்சேர்ப்பேன்? ஏது என்னிடம் நூறு ரூபாய்? விழித்தேன! நாயை இழந்த துக்கத்தில், படுக்கையாய் விழுந்துவிட்ட என்மகளைக் கண்ணிருந்தும் பார்க்கமுடியாமல் விழித்தேன்!! ஒரு நாளைக்கு, இரண்டு நாளைக்கு இந்தத் துக்கம் இருக்கும்—பிறகு சரியாய்ப் போய்விடும் என்று என்னை நானே சமாதானம் செய்துகொண்டேன். பத்து நாட்களாகிவிட்டன! படுக்கையில் விழுந்த என் செல்லி எழுந்திருக்கவில்லை; கடுமையான காய்ச்சலில் விழுந்தாள். வைத்தியர் கூட மிரண்டார். என்னென்னவோ மருந்துகள் கொடுத்துப்பார்த்தும், நோய்தீரவில்லை. ஆறுமுகம் கூட அடிக்கடி வந்து பார்த்தான். ஒரு தடவையாவது, அந்த நாயைக் கொண்டுவந்து காட்டினல் ஒழிய என் மகள் பிழைக்கமாட்டாள் என்கிற சந்தேகம் எனக்கு வலுப்பட்டது! எப்படியாவது போய், நாயை, பார்ப்பதற்காவது? கேட்டு வாங்கிவருமாறு ஆறுமுகத்தை அனுப்பினேன். சர்க்கஸ்காரன மறுத்துவிட்டதாகச் சொன்ஞன். சரி! பண்ணையாரிடமாவது ஒரு நூறு ரூபாய் கேட்டுப்பார்ப்போம் என்று போனேன். அவரா தருவார்? நாளைக்கு எட்டணு சம்பாதிக்கும் நான் எங்கே! நூறு ரூபாய், எங்கே!! இடிஇடியெனச் சிரித்தான். என் மகளை இழக்க வேண்டியதுதானு? அவளைப் பிழைக்க வைக்க மார்க்கமே இடையாதா?—என்கிற யோசனை

யுடன், வீட்டுக்கு வந்தேன். வேதனையுடன் செல்வி படுத்திருந்த இடத்துக்குப் போனேன். அங்கே அவளில்லை! செல்வி செல்வி என்று கத்திக்கொண்டு ஓடினேன். எங்கும் அவளில்லை. எங்கே போயிருப்பாள் அவள்? ஆறுமுகத்திடம் ஓடினேன். செல்வியைக் காணாததால் அவனும் தேடிக்கொண்டு போயிருப்பதாகச் சொன்னார்கள். நாயைத்தேடிக்கொண்டு, சர்க்கஸ்காரர்களிருக்கும் பக்கத்தூருக்குப் போயிருப்பாளோ செல்வி? இந்த எண்ணம் வந்ததும் நேராக என் கால்கள் நடந்தன. சர்க்கஸ் முதலாளி தங்கியிருக்கும் வீட்டுக்குப் போனேன். அவர் அறை சாத்தப்பட்டிருந்தது. அறைக்கு வெளியே என் செல்வம் கட்டப்பட்டிருந்தது. சோறு தண்ணியில்லாவிடினும்கூட, என்னிடம் இருக்கும்போது கொழு கொழுவென்று இருந்த செல்வம், இப்போது எலும்பும் தோலுமாயிருந்தது. முன்பெல்லாம் அதனிடம் தென்பட்ட அந்தச் சுறுசுறுப்பு இல்லை. அதட்டலுக்கும் உருட்டலுக்கும் மிரண்டுபோன, அடிமையாகக் கிடந்தது. என்னைக் கண்டதும், என் செல்வம் ஊளையிட்டது! நாய் அழுது நீங்கள் பார்த்திருக்கமாட்டீர்கள். என் செல்வம் அழுதது. அருகில் போனேன். பேசாமல் என் காலடியில் சுரண்டு படுத்துக்கொண்டு, கண்களில் வழிந்த நீரை என் காலில் கொட்டியது. இந்தக் கண்ணுருவிக்காட்சியைப் பார்க்க முடியாமல் நானும் அழுதுவிட்டேன். செல்வத்தைத் தடவிக்கொடுத்தபடி, வந்தவேலையையும் மறந்து அழுதுகொண்டிருந்தேன். முதலாளியின் அறைக் கதவு திறந்தது. அவர் வந்தார். என்னையும் நாயையும் பார்த்தார். பேசவில்லை. கையிலிருந்த 'பிஸ்கட்' துண்டை நாயிடம் வீசிவிட்டு நடந்தார் வேகமாக.

அவர் போன திசையைப் பார்த்தபடியே நாயை அவிழ்த்துவிட்டேன். உடனே, அது அறைக்குள் ஓடியது. உள்ளே போகலாமோ கூடாதோ என்று யோசித்துக்கொண்டிருந்தேன். உள்ளே ஓடிய என் செல்வம், வெளியே வந்து, என் வேட்டியைப் பிடித்து இழுத்தது. அறைக்குள் கொண்டு போயிற்று. நுழைந்தேன்; அங்கேயுள்ள கட்டிலில் அலங்கோலமான நிலையில் என் மகள் கிடந்தாள்! அவளருகே பொய் நின்றுகொண்டு, செல்வம் ஊளையிட்டது! மெய்மறந்து கிடந்த அவளைக் கண்டதும், என்ன நடந்திருக்கும் என்பதை யூகித்துக்கொண்டேன். பாவி! நாயைத் தேடிவந்த என் மகளை, அவளது காய்ச்சலைக்கூடப் பொருட்படுத்தாது, மனித உருவிலிருந்த அந்த வெறிநாய், சுவைத்திருக்கிறான். இந்த உலகமே சுழல்வதுபோலிருந்தது எனக்கு! இனி ஏனிந்த உயிர்? ஏனிந்த உலகம் எனக்கு? இனி எதற்காக நான் வாழவேண்டும்? பட்டதெல்லாம் போதாதென்று, எது பெண்களுக்கு முக்கியமோ, அதையே பறிகொடுத்துவிட்டாள் என மகள். வெறியேறிய என் கண்களில், அந்த அறையில் கிடந்த கத்தி ஒன்று தெரிந்தது. அதைக் கையில் எடுத்துக்கொண்டேன், இரண்டே குத்துகள்! அந்த அறைக்குள் இன்னும் கொஞ்ச நேரத்தில் இரண்டு பிணங்கள் கிடக்கும்! ஒன்று நான்; இனனொன்று மகள். அதே முடிவோடு, நெருங்கினேன், செல்வியிடம். செல்வி!—என்று கத்தினேன். கண் விழித்தாள், செல்வி. என்னைக் கண்டதும், அவள் விழிகள் அகலமாயின. எழுந்தாள், 'அப்பா!' என்றாள். அப்பா! — என்று என் செல்வி அழைத்தாள், என்னை. ஊமையாக இருந்த என் மகள், என்னை அப்பா என்று கூப்பிட்டாள். வேறு சமயமாயிருந்தால் ஆனந்தக் கூத்தாடியிருப்பேன்! காதகனின் வெறிச்செயல் உண்டாக்கிய அதிர்ச்சியில், ஊமையான அவளது நரம்புகள் விடுபட்டு, இப்போது பேசவந்துவிட்டது அவளுக்கு! சாகப்போகும் சமயத்தில், அவள் அப்பா என்றாலென்ன? அமுதமழை பொழிந்தால்தானென்ன!! 'செல்வி' என்று கத்தியபடியே, அவளைப் பாய்ந்து குத்தப்போனேன். யாரோ என்னைப் பிடித்து இழுத்தார்கள். ஆறுமுகம் நின்றான். "ஆறுமுகம் விடு!" என்றேன்,

"மாமா! வேண்டாம். செல்வி குற்றமற்றவள். அவள் என்ன செய்வாள்?" என்று என்னை இழுத்தான். "உண்மையாக அவள் குற்றமற்றவள் என்பதை நீ ஒப்புகிறாயா! ஆறுமுகம்! மனதார ஒப்புகிறாயா!!" என்றேன். "நிச்சயமாக மாமா..." என்றான். இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது வாசலில், 'ஐயோ;' என்கிற அலறல் கேட்டது. பரபரப்புடன் வெளியில்வந்து பார்த்தோம். என் செல்வம், வாயில் ஒரு கத்தியுடன், சர்க்கஸ்காரன் மேல் பாய்ந்து கொண்டிருந்தது. உடம்பெல்லாம் இரத்தம் வழிய, இப்படியும் அப்படியும் தப்பிக்கொண்டு ஓட முயன்றான். அவன்மீது தாவித்தாவி தாக்கிக்கொண்டிருந்தது, அறிவுள்ள என் செல்வம். சுருண்டு விழுந்தான், அவன். நாய்தான் அவனைக் கொன்றது என்று யார் நம்புவார்கள்? போலிசார் வந்தபோது, என்னைப்பிடித்துக்கொண்டார்கள். நானும் வாய்திறந்து, என்செல்வம் கொன்றதாகச் சொல்லாமல் குற்றத்தை ஒப்புக்கொண்டேன். என்னைப் போலீசார் பிடித்துக்கொண்டனர். செல்வி, ஆறுமுகம், இருவரும்கதறினர். செல்வம், போலீசார் மீதும் பாயவந்தது. செல்வியிடம் செல்வத்தைப் பிடித்துக்கொள்ளச் சொன்னேன். அப்பா! அப்பா!— என்கிற செல்வியின் அமுதமொழிகள் கேட்டுக்கொண்டே இருந்தன. அவளுடைய செல்வத்துக்கு நான் செய்த துரோகத்துக்குப் பிராயச்சித்தம் செய்துவிட்டோம் என்கிற திருப்தியுடன், போலீஸ் லாரிக்குள் ஏறினேன். தண்டனை பெற்றேன். போன மாதம்கூடச் செல்வியும் ஆறுமுகமும் தங்கள் மூத்த மகனோடு என்னை வந்து பார்த்துவிட்டுப்போனார்கள்.

* * *

நடந்ததா! கதையா!!-என்பதை, என்னாலே நம்பமுடியவில்லை. அந்தக் கேள்வியையும் கேட்டு, விபரம் தெரிந்துகொள்ளலாமென்று நினைத்தபோது, எங்களையெல்லாம் வெளியேவிட்டுவிடும்படியாகச் சர்க்காரிடமிருந்து 'டெலிபோன்' வந்ததாகச் சொல்லி, கிளம்பச் சொன்னார், சிறை அதிகாரி. ஐந்து நிமிடமிருக்கிறேன்!—என்றால், விடுவாரா, அவர்.

வஞ்சகத்தைத் தூள் செய்த வழக்கறிஞன் கதை!



நல்ல தீர்ப்பு

டைரக்‌ஷன்: **T. பிரகாஷ் ராவ்** ✦ திரைக்கதை, வசனம்: முரசொலி **மாறன் M.A.**

ராஜஸ்ரீ ரிலீஸ்

தயாரிப்பு: **சுந்தர்லால் நஹாதா**

விநியோகஸ்தர்கள்:— மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி (கன்யாகுமரி உள்பட) அமுதா பிலிம்ஸ், காரைக்குடி. கேரளா—ஜெயா பிலிம்ஸ் எர்ணாகுளம். கோயமுத்தூர், நீலகிரி—சந்திரபிரபா பிக்சர்ஸ், கோயமுத்தூர். சிலோன்—சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட், கொழும்பு.

மற்ற விபரங்களுக்கு:— **ஸ்ரீ புரொடக்‌ஷன்ஸ், 14-பி, கிரிரோடு, சென்னை-17.**

கலர் விளக்கு அல்ல!

—[*]—

"அணியில்லை! மணியில்லை! தங்கச் சங்கிலியில்லை! பட்டுச் சொக்காயில்லை! ஆனால், என் குழந்தைச் செல்வத்திடம், பொன்னைவிட மேலான புன்னகை இருக்கிறது" என்று தான் பூரிப்பாள், எந்தத் தாயும்,

அதைப்போலத்தான், குபேரர்கள் இல்லை, குரல் எழுப்பும் பெரிய ஏடுகள் இல்லை, சீமான்கள் இல்லை; என்றாலும், இவைகளைவிட மேலான சிறந்த கொள்கையுண்டு, எம்மிடம் என்று சொல்லிப் பூரிக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

பழித்தாலும், பயங்காட்டினாலும், நல்ல கொள்கை வளரும்! அதிலும், விடுதலை பெறுவதையே மூழுமூச்சாகக் கொண்டோரின் கொள்கைக்குத் தினசரி வலுக்கிடைக்கும் என்பதை 'இந்து' இதழார், இந்தக் கிழமை 10-ந் தேதிய இதழில் படம் பிடித்துக் காட்டுகிறார், ஒரு செய்தி மூலம்!!

அருமையான படப்பிடிப்பு! அற்புதமான படப்பிடிப்பு!! — எனச் சொல்லலாம். நிருபர் ரங்கசாமி என்பார், அவ்வளவு விளக்கமாகத் தந்துள்ளார்.

வண்டு

* * *

நாகபுரியில் காங்கிரஸ் மாநாடு கூடியது! நகரே விழாக்கோலம் கொண்டிருந்ததாம்!! ஆட்சி அவர்கள் வசம் என்பதால், என்னென்ன வசதிகளைச் செய்து கொள்ள முடியுமோ, எந்தளவுக்குச் செலவழிக்க இயலுமோ, அவ்வளவும் செய்து இந்த மாநாட்டினை நடத்தியிருக்கிறார்கள்! வந்த கார்களையும், வருகை புரிந்த பெரிய பெரிய மந்திரிகளின் பட்டியல்களையும், செய்திருந்த அலங்காரங்களைப் பற்றியும், ஏடுகள் விதவிதமாக வர்ணிக்கின்றன. ஏழை எளியவர்கள் நடத்திடும் மாநாடு என்றால் எட்டணாவுக்கும் ஒரு ரூபாய்க்கும் 'பேயாய் அலைந்து நாயாய்த் திரிய வேண்டும! ஒரு பெரிய உபகண்டத்தையே ஆளும் 'ராஜாதிராஜாக்களுக்கு' என்ன குறைச்சல்!!

கண்காட்சிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்— தலைவர்கள் பேச்சைக்கேட்க வரவிரும்பாவிடினும், இதையாவது வந்து மக்கள் பார்க்கட்டும் என்கிற ஆசையில்! 'இந்து' நிருபரே எழுதுகிறார், மக்களைக் கவர்ந்து தம் பக்கம் இழுக்க, கண்காட்சியிருக்கிறது —கருத்தைக் கவரும் 'கலர் விளக்கு' ஏற்பாடுகளும் உள்ளன, என்று. கண்காட்சி! கலர் விளக்குகள்! மிகப் பெரிய பந்தல்! பெரிய பெரிய தலைவர்கள்! ஏராளமான செலவு! — இத்தனை அமர்க்களமாக காங்கிரஸ் மாநாடு.

இதே சமயத்தில், அதே நாகபுரியின் இன்னொரு பகுதியிலும் ஒரு மாநாடு நடந்திருக்கிறது! அந்தச் செய்தியைத்தான், வெகு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார், 'இந்து' நிருபர் ரங்கசாமி'!

நாகபுரி நகரின் ஒரு புறத்திலே காங்கிரஸ் மாநாடு! இன்னொரு இடத்திலே, ஆளும் கட்சியின் கொடுமைக்கு ஆளான சம்யுக்த மராட்டிய சமிதியின் மாநாடு!! நிலவின் முன் மின்மினியா? மலையின் எதிரே மண்புற்று!-என்றுதான், கேலி பேசியிருப்பர், காங்கிரஸ் மாநாடு, நடத்தியவர்கள். இவர்களால் என்ன முடியும், ஏது பணம், ஏது அதிகாரம், ஏது நேரு போன்ற பெரிய தலைவர்கள், என்றுதான் எண்ணியிருப்பர் காங்கிரஸ் தோழர்கள்.

இவைகள் மட்டுமல்ல, எந்த வசதியுமே இல்லாது மாநாடு நடத்தியிருக்கிறார்கள் மராட்டிய சமிதியினர்! காங்கிரஸ் மாநாடு கூடிய இடத்தில் இலட்சக் கணக்கான ரூபாய்கள் செலவிட்டுப் போடப்பட்ட பந்தல் உண்டு! சமிதியினருக்குச் சாதாரண பந்தல்கூடக் கிடையாதாம்; வானம்தான் கூரை; மண்தரைதான் சோபா; வெறும் திடலில் கூடியிருக்கிறார்கள்! கண்ணைப் பறிக்கும் மின்சார வெளிச்சம், காங்கிரஸ் பந்தலில்—இங்கோ, ஒரு சாதாரண விளக்குக்கூட இல்லையாம். அந்த விபரத்தை, 'இந்து தருகிறது, படியுங்கள்:

"அவசரமாகப் போடப்பட்ட மேடை. காங்கிரசை எதிர்க்கும் கட்சியினர்தான் பேசினார்கள். கூட்டம் துவங்கப்பட்டபோது மேடையில் வைக்கக்கூட ஒரு விளக்கு இல்லை! விளக்கு மட்டுமல்ல, ஒரு ஒலிபெருக்கிக்கூட இல்லை. இருட்டிலேயே கூட்டம் துவங்கிற்று. "ஒலிபெருக்கி இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடும், அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்," என்று அமைப்பாளர்களில் ஒருவர் 'வேண்டுகோள் விட்டார். இன்னும் கொஞ்சநேரத்துக்கெல்லாம், "காஸ்லைட்டுகளுக்கும் ஆள் அனுப்பியிருக்கிறோம். சீக்கிரம் வந்துவிடும், பொறுமையாயிருங்கள்," என்று இன்னொரு வேண்டுகோள் விடப்பட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் 'காஸ்லைட்' தூக்கிவரப் போன ஆள் வந்தார், கடைக்காரரும் சமிதியின் கூட்டத்துக்குக் கடையைப் பூட்டிவிட்டு வந்துவிட்டதாக. உடனே, ஒரு வேண்டுகோள் விடப்பட்டது, "கடைக்காரர், இந்தக் கூட்டத்துக்கு

வந்திருப்பதாக அறிகிறோம். தயவுசெய்து உடனே அவர், தன் கடைக்குப்போய், கால்லெட்டுகளுடன் இங்கே வந்து சேருமாறு கேட்டுக்கொள்கிறோம்,'' என்று. இவ்வளவு கோளாறுகளுடன் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்றாலும், ஆரம்பமாகும் வரையில் மக்கள் அமைதியுடன், இருந்தார்கள்! இந்த வேண்டுகோள்களையெல்லாம் வேடிக்கையாகவும் ஆனந்தமாகவும் கைதட்டி ரசித்துக்கொண்டு தானிருந்தனர். பேச்சாளர்கள் எல்லாம், ஆளும் காங்கிரஸ் கட்சியினைத் தாக்கித்தான் பேசினார்கள். இதனால் குழப்பமோ, மறுப்போ, ஏற்படவில்லை. மாறாக, ஒவ்வொருவரும் பேசப் பேச உற்சாகமூட்டிக் கைதட்டி ஆரவாரம் செய்துகொண்டேயிருந்தனர்.

இது எதைக்காட்டியதென்றால், சென்னையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தார், வடநாட்டுத் தலைவர்களைக் காரசாரமாகத் தாக்கிப் பேசும்போது, கூட்டத்தார் உற்சாகமாக கைதட்டி ஆரவாரம் செய்வார்களே, அதை நினைவூட்டியது.''

*

இப்படி, விளம்பரமின்றி, வேடிக்கைக் காட்சிகளின்றி, விளக்கின்றி, ஒலிபெருக்கியின்றி நடைபெற்ற மாநாட்டில் எவ்வளவு மக்களிருந்தார்களாம் தெரியுமா? அந்த இடம்தான், இன்னும் ஆச்சரியம் தருகிறது!!

இந்திய உபகண்டத்திலுள்ள ஏடுகளிலெல்லாம் விளம்பரங்கள் போட்டு, உலகப் புகழ்பெற்ற நேரு போன்ற தலைவர்கள் எல்லாம் வருகிறார்கள் என்று சொல்லி, கண்காட்சியைக் காணவாரீர் என்றழைத்து, கலர் விளக்குகளைப் போட்டுக் கண்ணைப் பறித்து, இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்துக் காட்டப்பட்ட காங்கிரஸ் மாநாட்டில் எந்தளவுக்கு மக்களிருந்தார்களோ, அதில் பாதியளவுக்கு மேல், இங்கு இருந்தார்களாம்! நேரு பேசும்போதுமட்டும் காங்கிரஸ் மாநாட்டில், கவனிப்பு இருந்ததாம். இங்கோ, ஒவ்வொருவர் பேச்சுக்கும் உற்சாகமும் கைதட்டலும், இருந்ததாம்!!

எதிர்க்கட்சி, ஏதுமற்றவர் கட்சி, இதனால் எப்படி முடிந்தது, இதனைச் சாதிக்க? மராட்டிய சமிதி சொல்லும், 'உரிமை கொடு எமக்கு!' எனும் குரலொலி, மக்கள் மனதைக் கவர்ந்துள்ளது.

அதுபோலத்தான், இங்கும் உரிமை கேட்கும் நமது கொள்கை முழக்கம், மக்கள் மன்றத்தைக் கவர்ந்து வருகிறது.

இந்த உண்மையினை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அப்போதுதான், கொள்கையை உயிருக்கு மேலாகப் பாவிக்கும் அன்னக்காவடிகளான விடுதலை வீரர்களுக்குக் கிடைக்கும் செல்வாக்கு எக்காரணத்தினால் என்பதைக் காங்கிரஸ் 'கனம்கள்' புரிந்துகொள்ள முடியும்.

கலர் விளக்கு அல்ல முக்கியம், மக்கள் மன்றத்துக்கு! வாழ்வும் வசதி தரும் மார்க்கமும்தான்!!

தனியரசு ஏற்படின்தான், நமது உரிமைகள் நமக்கு வழங்கப்பட்டால்தான், சுக வாழ்வு இடைக்கும் என்கிற எண்ணம் மக்களிடம் உண்டாகிவிடின், அதைவிடப் பெரிய செல்வம் வேண்டியதில்லை ஒரு கட்சிக்கு.

அந்தச் செல்வம், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, வளர்கிறது. அதனால்தான் 'இந்து' எங்கோ நடக்கும் மாநாடு குறித்து எழுதும்போது நம்மை உதாரணம் காட்டுகிறது.

★

அடுத்த இதழ்

பொங்கல் விடுமுறை காரணமாக, 18, 25—1—59-தேதிகளில் வெளிவர வேண்டிய இதழ் நிறுத்தப்பட்டு, 1—2—59 முதல் வெளிவரும் என்பதை வாசகர்கட்கும் விற்பனையாளர்கட்கும், தெரிவித்துக்கொள்கிறோம்.

பொறுப்பாளர், **"திராவிட நாடு"**

படிப்படியாக!

இரஷியப் புரட்சிக் காலத்தில் தவறான கண்ணோட்டமுள்ள கம்யூனிஸ்டுகளும் இருந்தார்கள். அவர்கள் உடனே கூட்டுப்பண்ணை முறை அமுலுக்குக் கொண்டு வரப்படவேண்டுமென்று சொன்னார்கள். இது தவறென்று வாதித்தார் லெனின். "ஏற்கனவே, விவசாயிகளின் கோரிக்கை நிலம், ஆதலால், அவர்களுக்கு நிலங்களைப் பிரித்துக்கொடுத்து, பின்பு அரசாங்கப் பண்ணைகளின் மூலம் அதிகமான பலன் பெறலாம் என்பதை நிரூபித்து, பிறகே கூட்டுப்பண்ணைகள் அமைக்க வேண்டும். உடனே கட்டாயமாகவோ, சட்டத்தின் மூலமோ கூட்டுப்பண்ணை முறையைப் புகுத்தினால், சாதாரண விவசாயிகளும் சேர்ந்து எதிர்ப்புரட்சி செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். அடுத்ததாக, கிராமங்களையும் நகரங்களையும் ஒன்றாக்க வேண்டும் சோவியத் யூனியனில். இது படிப்படியாகப் பிரச்சாரத்தின் மூலமும் நடைமுறையில் காட்டியும், கூட்டுமுறை மூலம் கிராமங்களுக்குச் சகல வசதிகளைத் தந்தும், விவசாயத்தில் இயந்திரத்தைப் புகுத்தி நகரத் தொழிலுடன் தொடர்பு ஏற்படுத்தவேண்டும், பிணைக்கவேண்டும்" என்றார்.





ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவர் திருப்பி வருவரோ, மாநிலத்தில்—என்று கூறுவர், நமது பெரியோர். ஆனால், ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இந்திய உபகண்டத்தில் நடந்த ஒரு வழக்கில், மாண்டவர் திரும்பி வந்திருக்கிறார்—வந்தது மட்டுமல்ல, சொத்துரிமை கொண்டாடி வழக்கு நடத்தியிருக்கிறார். அந்தச் சுவையான வழக்கு, நம் சிந்தனைக்கு ஏற்ற விருந்து.

கற்பனையை விட, உண்மை, சில நேரங்களில், ஆச்சரியம் தரக்கூடியதாக இருக்கும். அத்தகைய நிலையை இவ் வழக்கில் பார்க்கலாம்.

இந்த வழக்குப்பற்றி நீதிபதி காஸ்டல்லோ கூறிய வாசகங்கள் மிகவும் கவனிக்கத் தக்கன. இந்த உபகண்டத்தில் மட்டுமல்ல, உலக நாடுகள் எதிலும், வழக்கு மன்றத்திற்கு வந்த வழக்குகளில் இதைப் போல் சுவையானதும், குறிப்பிடத் தக்கதுமான வழக்கு எதுவும் இல்லை...சட்ட உலக சரித்திரத்தில் மகோன்னதமான சம்பவம் இது!

இந்த வழக்கில் ஏறத்தாழ 2000 சாட்சி ஆதாரங்கள காட்டப்பட்டன. இவைகளில் பாதிக்குமேல் புகைப்படங்கள். இந்த வழக்கில் இரு தரப்பிலிலும் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் எண்ணிக்கை 1548-சாட்சி கூறியவர்களில் 21-வயதிலிருந்து 100-வரை உள்ளவர்கள் உண்டு. இவர்கள் வெவ்வேறு வகுப்பைச் சார்ந்தவர்கள் — சாதிகளைச் சேர்ந்தவர்கள் — இனத்தில் பிறந்தவர்கள். இந்துக்கள் உண்டு—பார்சிகள் உண்டு. சீக்கியர்கள் இருந்தார்கள். கிருத்துவர்கள்கூடப் பலர். நாகசாமியார்கள் கூட அழைக்கப பட்டிருந்தனர். யூட்டியர் போன்ற மலை வகுபபினர் சிலரும இருந்தார்கள். ஆங்கிலேயர் உண்டு. டாக்டர், வழக்கறிஞர், சிற்பிகள, புகைப்படக் கலைஞர்கள், வணிகர், பண்ணையாளர்கள் என்று பலரகத்தவரும் இடம் பெற்றனர்.

இந்த வழக்கு விபரங்களை வெளியிடுவதையே முதற் குறிக்கோளாகக் கொண்டு நான்கு தின ஏடுகள ஆரம்பிக்கப்பட்டன. அவைகளில் முக்கியமானது '**தினபோவால்**' என்பதாகும்.

இவ்வழக்கின் தொடர்ச்சி 1909-ம் ஆண்டு தொடங்கி, 1940-வரை நடந்துகொண்டிருந்தது.

இந்த மாண்டவர் மீண்ட வழக்கு போவால் சந்நியாசி வழக்கு என்ற பெயரில் நீதியுலகில் நிலைத்த இடம் பெற்றுவிட்டது.

•

கிழக்கு வங்காளத்தில், டாக்கா பகுதியைச் சேர்ந்தது **போவால்** சமஸ்தானம். இதுவே நம் வழக்கின் கதையின் களம்.

1909-ம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 18-ம் நாளே கதையின் துவக்கம்—திரை தூக்கப்படுகிறது.

குமார் இராமேந்திர நாராயண்ராய் நமது, கதையின் தலைவர்.

பீபாபதிதேவி, அவர் மனைவி, கதையின் தலைவி.

குளிர் வாழ் நிலமாம் டார்ஜீலிங் போக முடிவெடுத்துப் புறப்பட்டார், இராமேந்திரர். அவருடன பீபாபதிதேவியும் கிளம்பினாள். அவரது மைத்துனர் **சத்தியேந்திரநாத்பானர்ஜி**, குடும்ப மருத்துவர் அஷ்டோஷ் **தாஸ்குப்தா** ஆகியோரும் மற்ற மன்னரின் வழக்கமான பிரதானியர், பணியாட்களும் இருந்தனர்.

தனது மைத்துனர் ஏற்பாடு செய்துவைத்திருந்த மாளிகையில் தங்கினார். இரண்டொரு தினங்களில் திடீர் நோய்க்கு ஆளானார். குடும்ப மருத்துவரோடு, டார்ஜிலிங் மருத்துவர் கால்வர்ட் என்பாரும் சிகிச்சை செய்தார்.

1909-மே திங்கள் 6-ம் நாள் நோய் வாய்ப்பட்டார். போவாலின் தலைநகர் ஜெயதேபூரில் உள்ள மூத்த சகோதரர் இரனேந்திரருக்குத் தந்தி கொடுக்கப் பட்டது. மூத்தவருக்குப் பதில் இளையவர் இரபீந்திரர் 9-ம் நாள் காலை புறப்பட்டார். ஆனால் புறப்படுவதற்கு முன்னால் இராமேந்திரர் இறந்து விட்டார் என்ற செய்தி கிடைத்தது — பிரயாணம் தடைப் படுத்தப்பட்டது. மறுநாள பீபாபதி தன்னுடைய சகோதரனோடு புறப்பட்டு ஜெயதேபூருக்கு வந்தாள். 18-ம நாள் நீத்தார் நினைவு கொண்டாடிவிட்டு, தன் சகோதரனோடு நிரந்தரமாக வாழ கல்கத்தா சென்று விட்டாள். அவளது பணத்தில் இரண்டு இலட்சம

செலவில் ஒரு பெரிய மாளிகையே, அவள் சகோதரன் வாங்கிக்கொண்டான்.

சில ஆண்டுகளில், இரு சகோதரர்களும் இறந்து போனார்கள். விதவைகளை மட்டுமே இருவரும் விட்டுச்சென்றனர். இப்பொழுது சொத்துக்கு உரிமைக்காரர்களாகப் பெண்களே இருந்தார்கள்—சகோதரர்களின் பாட்டி சத்தியபாமாதேவி, முதல்வரின் விதவை சராஜுபாலாதேவி, இராமேந்திரரின மனைவி பீபாபதிதேவி. இளையவரின் விதவை, ஆனந்தகுமாரிதேவி—ஆகியோரே! ஆனந்தகுமாரி மட்டும், 1919-ல், தனது சகோதரன் மகன் இராம்நாராயணை தத்து எடுத்துக் கொண்டாள். ஆண்டுக்குப் பத்து இலட்சம் வருமானம் வரும் இந்த போவால் இராஜ்ய சொத்தின பரிபாலனம் ஆட்சியாளரால் நியமிக்கப்பட்டவரால் நடத்தப்பட்டு வந்தது.

இதற்கிடையில், இராமேந்திரர் சாவைபற்றிச் சந்தேகம் இளம்பும் வதந்திகள் உலவிக்கொண்டிருந்தன. ஏறத்தாழ அவர் இறந்து ஒன்பதாண்டுகள் கழித்து, இந்த வதந்திகள் உருவடைந்து, காட்டுத் தீயெனப் பரவிடத் தொடங்கிற்று.

இராமேந்திரர் நஞ்சு தரப்பட்டு, மயக்கமுற்ற நிலையில் சுடுகாட்டில் எரிக்கக் கிடத்தப்பட்டார். காற்றும்மழையும்இருந்ததால், சிதை எரியவில்லை. நாக சந்நியாசிகள் அவரைக் காப்பாற்றிவிட்டனர் என்பதே, வதந்திகளின் தொகுப்புக் குறிப்பாகும்.



இராமேந்திரரின் பாட்டி சத்தியபாமாவுக்கு மட்டும், இந்தச் சந்தேகம், ஆதியிலிருந்து இருந்து வந்தது என்பது அவள் பந்துவான் மகராஜாவுக்கு எழுதிய கடிதத்திலிருந்து, பினனல் தெரிந்துகொள்ள முடிந்தது.

1921-ம் ஆண்டு ஆரம்பத்தில் டாக்காவுக்கு அருகில் உள்ள பக்லண்டில் ஒரு நாகசாமியார் வந்திருந்தார்—பரட்டைத் தலை — நீண்ட தாடி — உடலெங்கும் சாம்பல்—இடையிலே கோவணம் — கையிலே, பாவா தரம்தாஸ்கா சேவா நாகா எனப் பெயர் பொறிக்கபபட்டிருந்தது. காசிம்பூர் ஜமீன்தார் அழைத்திருந்தார் சாமியாரை. அவரை யானையிலேவைத்து ஜெயதேபூருக்கு அனுபபிவைத்தார். ஜெயதேபூரில் மாதப் பாரி எனும் ஆலயத்தில் சாமியார் தங்கியிருந்தார். இராமேந்திரரின சகோதரிகளில் ஒருத்தி ஜோதிர்மாயி தேவி அந்தச் சாமியாரைத் தன் இல்லத்திற்கு அழைத்திருந்தாள்—அப்போது சத்தியபாமாவும் உடனிருந்தாள். அந்தச்சாமியார்தான இராமேந்திரர் என்ற சந்தேகம் எழுந்தது — வலுவடைந்தது—தொடர்ந்து சந்திப்புகள் நடந்தன. சாமியார் பக்லண்டுக்குத் திரும்பிப்போன பிறகும், போவால் அரச குடும்பத்தினர் பலர் சந்தித்தனர்—சாமியார் மட்டும் இதுபற்றி அறிந்துகொள்ளவும் இல்லை—அறிவிக்கப்படவும் இல்லை.

1921, ஏப்ரல் 30ம் நாள், ஜோதிர்மாயி இல்லத்திற்கு மீண்டும் சாமியார் வரவழைக்கபபட்டார்—சாம்பலை நீக்கி உடல் நிறத்தைப்பார்த்தனர் ஜோதிர்மாயியும், சத்தியபாமாவும். வேறு மச்ச அடையாளங்களையும் பார்த்தனர். மே திங்கள் 4ந் தேதிதான் முதனமுதல் சாமியாருக்கு, இராமேந்திரர்தான் நீர் என்று அறிவிக்கப்பட்டது. முதலில் சாமியார் மறுத்தார். அதற்குள் ஜோதிர்மாயி, பலருக்கு இந்தச் செய்தியைப் பரப்பினாள். பெருங்கூட்டம் தினமும்கூட ஆரம்பித்துவிட்டது. அவர்கள் சாமியாரைப் பல கேள்விகள் கேட்டனர். எல்லோரும், இராமேந்திரர் இவர்தான என்று கூறிவிட்டனர்.

போவால் முழுவதும் செய்தி எட்டிற்று. மக்கள் திரள ஆரம்பித்தனர். மீண்டும் அவரைப் பழைய நிலையில் அதிபதியாக்க நிதிதிரட்டிட குழு நியமிக்கப்பட்டது.

ஜோதிர்மாயி தேவி, அவள் சகோதரி தரின்மாயி தேவி, மூத்தவள் இந்துமாயி தேவியின் கணவன் கோவிந்த முக்கர்ஜி மூவரும டாக்கா வட்ட அதிகாரிக்கு, சாமியாரின் அடையாளங்களைப் பரிசீலனை செய்யும்படி விண்ணப்பித்தனர். ஆனால் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இராமேந்திரரின்மனைவியாம் பீபாபதியும், அவள் சகோதரன் சத்தியேந்திரநாத் பானர்ஜியும், இம்முயற்சிக்கு எதிர் முகாம் அமைத்தனர். அதிகாரிகளைக் கண்டு வதந்திகளை நம்பவேண்டாம் என வேண்டிக்கொள்ளும் வேலையில் ஈடுபட்டனர்.

லின்ட்சே, டாக்காவின் கலெக்டர், போவால் சாமியார், ஆள்மாருட்டம் செய்பவர், அவரிடம் யாரும் போவால் ராஜ்ய சொத்துச் சமபந்தமான வரி முதலியவைகள் கொடுக்கக்கூடாதென அறிவித்துவிட்டார்.

சாமியார், கலெக்டரை நேரில் சந்தித்துப்பேசினார். அடையாள விபரங்களை வைத்து, அஜுலா எனும் சிற்றூரைச்சேர்ந்த மால்சிங் என்று அழைக்கப்படும் சுந்தர்தாஸ் தான் போவால் சாமியார் என்று அவரது குரு பாபா தரம்தாஸ் கூறிவிட்டதாக அறிவிக்கப்பட்டது — புதுக் குழப்பம் வேறு குடிவந்துவிட்டது இதன்மூலம்.

ஊர் மக்கள் சாமியார் பக்கம் திரண்டிருந்தனர்—அதிகாரிகளின் எதிர்ப்புப் பிரசுரங்கள் பயனில்லாமல் போய்க்கொண்டிருந்தன — ஓரிரு வழக்குகள்கூட போட்டும், அதிகாரிகளே தோற்றிடவேண்டியவர்களாயினர்.

இதற்கிடையில், பக்கீர் பஷீ பிரேனர் ராஜா எனும் வெளியீட்டை கொண்டுவந்த பூர்ண சந்திரகோஷ், சதீஷ் சந்திர ராய் எனும் இருவர்மீது, போவால் அரச குடும்ப மருத்துவர் அஷ்டோஷ்தாஸ் குப்தாதான் விஷங்கொடுத்தது, இராமேந்திரரைக் கொன்றதாகச் சொல்லியுள்ள பகுதி தவறானது என்று கூறி மான இழப்பு வழக்குப் போட்டு, வெற்றியும் பெற்றுவிட்டார்.

1921, ஜுன் 7லிருந்து, சாமியார் ஜோதிர்மாயி இல்லத்திலேயே தங்கிவிட்டார். தாடி போய்விட்டது. சாதாரண ஆடைகளை உடுக்க ஆரம்பித்தார். தினம் ஏராளமான மக்கள் அவரைக்கண்டு பேசிச் சென்றுகொண்டிருந்தனர்.

1921, ஆகஸ்ட் 26—பாபா தாம் தாஸ், போவால் சாமியாரின் குருவே நேரில் வந்தார். தான் சுடுகாட்டிலிருந்து காப்பாற்றிய விவரங்களைக் கூறினர் — பிறகு போலீஸ் தொல்லைக்குப் பயந்து போய் விட்டார். கலெக்டர் லின்ட்சே, இதை நம்பாதது மட்டுமல்ல, குருவை அவரும் விசாரிக்காமலே இருந்துவிட்டார்.

சத்தியபாமாதேவி, பீபாபதிதேவிக்கு சாமியாரை நேரில் வந்து பார்க்கும்படி வேண்டிக் கடிதம் எழுதினள். கடிதத்தைக்கூட வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டாள் அவள். அவள் புதிய கலெக்டர் டிரம்மாண்டுக்கு நீண்ட கடிதம் எழுதினள். போவால் சாமியாரே, தன பேரன், தனக்கு வயதாகிவிட்டாலும், பார்வை கெடவில்லை என்று கண் மருத்துவரின் அத்தாட்சிப் பத்திரமே இருக்கிறது. சந்தேகமிருந்தால் நேரில் தாங்களே விசாரிக்கலாம் எனறு குறிப்பிட்டிருந்தாள். ஆனல் அவளும் இறந்து போனள்.

ஜோதிரிமாயியின் மருமகன் சந்திரசேகரபானர்ஜி அதிகாரிகளைச் சந்தித்ததின் விளைவாக, போவால் சாமியாரையே, விண்ணப்பம் செய்ய ஏற்பாடு செய்தான். அதுவும் பலன் தரவில்லை.

சாமியார் 1929-ல் கல்கத்தாவுக்குச் சென்ருர். சரஜுபாலா, தனது கணவனின் இளைய சகோதரன் தான சாமியார் என்று தெரிந்துகொண்டாள்.

ஆனல் பீபாபதிதேவி மூன்றுமுறை அவரைச் சந்தித்தும், ஒத்துக்கொள்ளவில்லை! வேடிக்கையும், வேதனையும் கலந்த நிலை—இருவருக்கும்!

1929-ம் ஆண்டு இறுதியில் சாமியாருக்கு போவாலில் ஜோதிபூருக்குள் நுழையக்கூடாதெனத் தடையுத்தரவு வேறு போடப்பட்டது.

இறுதியாக 1630-ம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 24-ம் நாள், சாமியார், வழக்குப்பதிவு செய்துவிட்டார். தானே இராமேந்திரர் என்றும், தனக்குரிய சொத்துரிமை மீண்டும் தரப்படவேண்டும என்றும் வேண்டியிருந்தார், வழக்கு விண்ணப்பத்தில். எதிர்தரப்பு வழக்கை, பீபாபதிதேவி, ஆனந்தகுமாரிதேவி, ராம்நாராயண்ராயும் நடத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி பன்னலால்போஸ். சாமியாருக்காக வாதாடிய வழக்கறிஞர் பி. ஸி. சட்டர்ஜி. எதிர்தரப்பு வழக்கறிஞர் ஏ. என். சௌத்ரி. வழக்கு, 1933ம் ஆண்டு நவம்பர் 27 அன்றே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இரண்டரையாண்டுக்காலம் சுவையான விசாரணை நடந்தது. — இந்த வழக்கில் கிடைத்த ஆதாரங்களை வைத்து, இராமேந்திரர் போல் ஒரு உருவம் செய்யப்பட்டது என்ருல், விசாரணையில் படிந்திருந்த சுவையும், ஆர்வமும் தெரியும்.

போவால் சாமியார் பக்கமே, தீர்ப்புக்கிடைத்தது. இராமேந்திரர் விஷங் கொடுக்கப்பட்டு எரிக்கப்பட எடுத்துச் சென்ற இடத்தில், புயலும் மழையும் வந்து, எரிக்கமுடியாமல் தடுக்கப்பட்ட நேரத்தில், நாக சாமியார்கள் அவரை எடுத்துச் சென்றுவிடவே, வேறு பிணத்தைவைத்து எரிக்கப் பட்டது. ஆனல் காப்பாற்றப்பட்ட பிறகு பழைய நினைவு வராத மனிதராக பலகாலம் வாழ்ந்தார். நினைவு சிறிது வர ஆரம்பித்த நேரத்தில் சாமியார் டாக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்; என்று விண்ணப்பதாரர்கூறிய அனைத்தும், நிரூபிக்கப்பட்ட உண்மைகளெனஏற்றுத் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டது. அதற்காக ஆதாரங்களை அச்சிட்டுக்கொண்டுவரவே ரூ. 85000 செலவிடப்பட்டது. வழக்குக் செலவு என்று வெளியில் அறிவிக்கப்பட்டதே இருபது இலட்சத்திற்குமேல்.

இதனை நீதிபதி பிஸ்வாஸ், நீதிபதி காஸ்டல்லோ, நீதிபதி லாட்ஜ் மூவரும் விசாரித்தனர். இருவர் சாமியார் பக்கமே தீர்ப்பளித்தனர். ஆகவே இதிலேயும், எதிர்தர்ப்பினர் தோல்வி கண்டனர்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பையும் எதிர்த்து பிரிவிக் கவுன்சிலுக்கு விண்ணப்பித்திருந்தனர். அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

போவால் சாமியார் வழக்கின் விசித்திரம், மீண்டவரை, கொண்டவளைத் தவிர மற்றவர்கள் அடையாளங் கண்டுகொண்டது — வழக்குகளில் வெற்றிபெற்ருர் — இரண்டாவது மணம்கூடப் புரிந்துகொண்டார்—ஆனல் அவர் நீண்டநாள் வாழவில்லை. தன் வழக்கு, கடைசி நிலையிலும் வெற்றி பெற்றது என்ற தகவல் வந்த மறுதினமே இறந்து போனர்.

★

தமிழகத்தில் சங்க காலத்திலேயே கடிதப் போக்குவரத்துக்கு அஞ்சல்முறை இருந்ததென்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. 'கௌடில்யரின்' அர்த்த சாத்திரத்தில் கி.மு. 322-ஆம் வருடவாக்கில் 'மௌரியர்' ஆட்சிப்பிரதேசத்தில் ஒருவித அஞ்சல் போக்குவரத்து இருந்துவந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாரசீகம் முதல் தெனனிந்தியா வரையில் பரவலாக இருந்த மௌரியப் பேரரசைச் 'சந்திரகுப்தன்' பல மாகாணங்களாகப்பிரித்து மண்டல அதிபதிகளை நியமித்து, ஆட்சி புரிந்து வந்தான். அந்தப் பேரரசின் தலைநகரான 'பாடலீபுர'த்துக்கும், மாகாணத் தலைநகரங்களுக்கும் இடையே 'புருக்கள்' மூலம் அஞ்சல்கள் சென்றுவந்தன. புருக்களின் கழுத்திலோ, அல்லது காலிலோ கடிதங்களைச் சிறு பேழைகளில் அடைத்துப் பறக்கவிட்டு வந்தார்கள்.

அப்புருக்கள் குறிப்பிட்ட இடங்களுக்குப் பறந்து செல்லும்படி பயிற்சி அளிக்கப்பட்டிருந்தன. 'அசோகர்' காலத்திலும் இந்த முறை நீடித்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

பதினான்காம் நூற்றுண்டில் இந்தியாவில் சுற்றுபபிரயாணம் செய்த 'இபன் பட்டுட்டா' என்ற பிரபலயாத்ரீகர் டில்லி பாதுஷா 'மகமது பின் துக்ளக்' காலத்தில் அமுலில் இருந்த அஞ்சல் ஏற்பாடுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறுர், 'அந்தக் காலததில் குதிரை ஏற்றிச்செல்லும் தூதர்களும், கால்நடையாகச் செல்லும் அஞ்சலோடிகளும் இருந்தார்கள் என்று.

பதினும் நூற்றுண்டின் மத்தியில் ஆட்சி செய்த 'ஷெர்ஷா' காலத்தில் குதிரை வீரர்கள் 'அஞ்சல்'களை எடுத்துச் சென்றதுபற்றிப் பிரபல வரலாற்றுசிரியரான 'பரிஷ்டா' விளக்கமாக விவரித்திருக்கிறுர்.

'வங்காளம்' முதல் 'பஞ்சாப்' வரையிலும் சுமார் இரண்டாயிரம் மைல்களுக்குப் பெரிய சாலைகளை அமைத்து, அந்தச் சாலை வழியில் இரண்டு கல் தூரத்திற்கு ஒருவராகக் குதிரை வீரர்களை நிறுத்தி வைத்து, அஞ்சல்களைத் துரிதமாக அனுப்ப 'செர்ஷா' மன்னர் ஏற்பாடு செய்திருந்தார்.

'அக்பர்' மன்னரும் அரசாங்கக் கடிதங்களைக் கொண்டு செல்வதற்காக ஒவ்வொரு பத்து மைல் தூரத்திற்கும் இரண்டு குதிரை வீரர்களையும், சில பாதசாரிகளையும் சாலைகளில் நிறுத்திவைத்திருந்தார். அவர்கள் தினசரி சுமார் நூற்றுப்பதினைந்து மைல்கள் பிரயாணம செய்து அஞ்சல்களைக் கொடுத்துவந்தார்கள்.

*

1766-ல் 'லார்ட் கிளைவ்' அரசாங்க அஞ்சல்களை அனுபபுவது சம்பந்தமாகத் தனியான ஏற்பாடு செய்திருந்தார். அரசாங்க அஞ்சல்களை வாங்கி அனுப்புவதற்கும், வருகிற அஞ்சல்களைப் பெற்று விநியோகிக்கவும் அரசாங்க அலுவலகத்தில் ஒரு அஞ்சல் தலைவரையும், ஒரு உதவியாளரையும் நியமித்தார். அந்த அஞ்சல்களை எடுத்துச் செல்வதற்காக அந்தந்தப் பிரதேச 'ஜமீந்தார்கள்' வழிநெடுக அஞ்சலோடிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பொறுப்புக்கட்டப்பட்டிருந்தது. ஆனுல், அந்த ஜமீந்தார்கள் தங்கள் சொந்த அஞ்சல்களை இத்தூதுவர்களிடம் கொடுத்தனுப்ப உரிமை இடையாது. தனியார் தபால்களை இத்தூதுவர்கள் திருட்டுத்தனமாக எடுத்துச்சென்று விநியோகிப்பார்கள். இந்த மறைமுகமான ஏற்பாடுதான் தற்போதைய 'அஞ்சல் சேவை' முறை ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தது.

1774-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் தேதி 'வாரன் ஹேஸ்டிங்ஸ்' உத்தரவின்படி, முறையான அஞ்சல் ஏற்பாடு அமுலுக்கு வந்தது. அஞ்சல் தலைவர்களுக்கெல்லாம் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

முதல் தடவையாகத் தனியார் அஞ்சல்களுக்குக் கட்டணம் விதிக்கப்பட்டது. 1837-ல் அஞ்சல் கொண்டுசெல்லும் ஏற்பாடு அரசாங்கத்தாரின் ஏகபோக உரிமைக்கு வந்தது. 1789-ல் மசூலிப்பட்டினத்திலிருந்து பம்பாய்க்கும், சென்னைக்கும், கல்கத்தாவுக்கும் வாராந்தர அஞ்சல் போக்குவரத்துத் தொடங்கியது.

18-வது நூற்றுண்டு இறுதியில் வங்காளத்தில் அஞ்சல்களைப் பாதசாரிகளான 'அஞ்சலோடிகள்' எடுத்துச் சென்றுர்கள்.

அஞ்சல் கட்டணம் செலுத்துவதற்கு அஞ்சல் தலைகளை உபயோகிக்கும் ஏற்பாடு இந்தியாவில் முதன்முதலில் 1854-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதியன்று அமுலுக்கு வந்தது.

இரயில்வே கம்பெனிகள் அஞ்சல்களை எல்லாம் இலவசமாக ஏற்றிச் செல்லவேண்டுமென்று, அப்பொழுது கவர்னர் செனரலாக இருந்த 'டல்ஹௌசி' பிரபு 1853-செப்டம்பர் 9-ம் தேதி ஒரு உத்தரவு பிறப்பித்தார்.

இப்பொழுது நடமுறையிலுள்ள ஆர். எம். எஸ். நிறுவனத்திற்கு அதுவே அடிப்படையாக அமைந்தது. அதே ஆண்டில் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமிடையே கடல் மார்க்கமாக அஞ்சல்களை எடுத்துச் சேல்வதற்காக பி. அண்ட் ஓ. ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியுடன் அரசாங்கத்தினர் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

இரயில்வேக்கள் தோன்றிய பிறகு அஞ்சல் போக்குவரத்துகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தியாவின் முதல் இரயில் பாதை பம்பாய்க்கும் தாணுவுக்குமிடையே சுமார் முப்பது மைல் தூரத்திற்கு அமைக்கப்பட்டு 1853-ம் ஆண்டு

முகமது அலி

ஏப்ரல் மாதம் 16ம் தேதியன்று திறக்கப் பட்டது.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அஞ்சல்கள் இரயில் மார்க்கமாக 2473 மைல் தூரத்திற்கும், வண்டிகள், குதிரைகள் மூலமாக 5156-மைல் தூரத்திற்கும் கப்பல் மூலமாக 5137 மைல் தூரத்திற்கும் ஆட்கள் மூலமாக 33853 மைல் தூரத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டு வந்தன. இதன் பயனாக 1863-ம் ஆண்டில் அஞ்சல்கள் ஐந்தே நாட்களில் சென்னையிலிருந்து பம்பாய்க்குப் போய் சேருவது சாத்தியமாகி விட்டது. 1871-ம் ஆண்டுவாக்கில் நாடு முழுவதிலும் மக்கள்தொகை 5,000த்திற்குமேல் அஞ்சல் அலுவலகங்கள் ஏற்பட்டன.

பொருளின் விலை மதிப்பைச் செலுத்திப் பார்சலைப் பெற்றுக்கொள்ளும் வி. பி. பி. முறை 1877-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

அஞ்சல் இலாகாவின் அபிவிருத்தியிலே குறிப்பிடத்தக்க மற்றொரு முன்னேற்றம் 1880ம் ஆண்டில் ஏற்பட்டது. அதுவரையில் மணிஆர்டர்கள் நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து அரசின் 283 கஜானக்களிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டும் கொடுக்கப்பட்டும் வந்தன. அந்த ஆண்டில் 5500 அஞ்சல் அலுவலகங்கள் 'மணியார்டர்'களை ஏற்றுக் கொள்ளவும், பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள் நேரில் அஞ்சலலுவலகத்திற்கு வரவேண்டிய அவசியமின்றியே மணியார்டர் பணத்தைப் பட்டுவாடா செய்யவும் அதிகாரமளிக்கப் பட்டது.

1883-ம் ஆண்டு டிசம்பர் முதல் தேதியன்று எல்லா அஞ்சல்அலுவலகங்களும் தந்திகளை ஏற்றுக் கொள்ளும் நிலையங்களாகவும், இயங்கும் திட்டமாகவும், அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமிடையே விமான அஞ்சல் போக்குவரத்து 1929-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் தேதியன்று ஆரம்பமாயிற்று. அதற்கு ஆறு மாதங்களுக்குப் பிறகு டில்லிக்கும்-கராச்சிக்குமிடையே இந்திய விமான அஞ்சல் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டது. 1936-ம் ஆண்டில் 'இந்தியன் போஸ்டல்ஆர்டர்' உபயோகத்திற்குக் கொண்டுவரப் பட்டது.

*

சுதந்திரம் அடைந்தபொழுது மொத்தம் 22,116 அஞ்சல் அலுவலகங்கள் இருந்தன.

பிறகு அஞ்சல் போக்குவரத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான முன்னேற்றம் 1949-ம் ஆண்டில் எல்லா அஞ்சல்களையும் விமான மூலம் அனுப்பும் ஏற்பாடு அமுலுக்கு வந்ததாகும்.

இந்தத் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னுல் சென்னையில் போடப்பட்ட அஞ்சல் டில்லி போய்ச் சேருவதற்கு மூன்று நாட்கள் பிடித்தன. இப்போதோ, மாலையில் சென்னையில் போடப்படும் அஞ்சல் மறுநாள் காலையில் டில்லிபோய்ச் சேர்ந்து விடுகிறது.

நூறு ஆண்டுகளில் இந்திய அஞ்சல் அலுவலகத்தின், எண்ணிக்கை 700-லிருந்து 45,900 ஆக வளர்ந்துவிட்டது. நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் இந்திய அஞ்சல் அலுவலகங்கள் ஆண்டுதோறும் சுமார் 28,000 அஞ்சல்களைக் கையாண்டுவந்தன. இப்பொழுதோ, 36 மொழிகளில் விலாசங்கள் எழுதப்பட்ட சுமார் எழுபது இலட்சம் அஞ்சல்கள் தினமும் அஞ்சலில் போடப்பட்டுப் பட்டுவாடா செய்யப்பட்டு வருகின்றன.

உலகத்திலுள்ள மிகப்பெரிய நிறுவனங்களுள் இந்திய அஞ்சல் இலாகாவும் ஒன்றெனக் கருதப் படுகிறது.

தரை வழியாக 1,86,961 மைல் தூரத்திற்கும் விமான மூலமாக 20,486 மைல் தூரத்திற்கும், அஞ்சல்கள் எடுத்துச் செல்லப்பட்டுவருகின்றன.

இந்த இலாகாவில் இப்பொழுது சுமார் 2,41,000 ஊழியர்கள் உள்ளனர். நாட்டில் கல்வி அறிவு மேலும் பரவும்போது, உலகத்திலேயே மிகப்பெரிய பொதுமக்கட் பணி நிறுவனமாக அஞ்சல் இலாகா ஆகிவிடும் என்பதில் ஐயம் என்ன?

விமானப்படை வளர்ச்சி

பிரம்மாஸ்திரம், அக்னியாஸ்திரம், அம்புறுத்தூணியிலிருந்து இளம்பிப் பகைவன் உயிரைக் குடித்து கடலில் குளித்து மறுபடியும் வந்து சேரும் அஸ்திரம்—என்று இப்படியெல்லாம் நமது புராணப் பிரசங்கிகள் வர்ணிப்பர்! இந்த 'அஸ்திரங்களை'க் கண்டோரும் இலர்; காணப்போகின்றவர்களும் இருக்கமுடியாது.

ஆனல் வளரும் விஞ்ஞான உலகில், வானவூர்திக்கு, படைவரிசையில் முக்கியமான இடமுண்டு. தரைப்படை, கப்பற்படை என்பதுபோல் வானப் படையும், முக்கியமாகும். இந்திய துணைக்கண்டத்தை ஆண்ட வெள்ளையர், இங்கே, வானப் படைக்குக் கால்கோள் செய்வித்தனர். ஒரு வானப் படை அவசியம், என்று 1927-ல் முடிவு செய்தார்கள். எனினும் 1933-ஏப்ரல் முதல் தேதிதான், அந்த முடிவு, செயலாக்கப்பட்டது. இன்று பாகிஸ்தானின் தலைநகரமாக விளங்கும் கராச்சியில் சிறிய அளவில், விமானப்படை அரும்பிற்று. இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற 6-அதிகாரிகளும் 19-விமான வீரர்களும்தான் அப்போது இருந்தனர்.

1939-ல் உலகப்போர் ஆரம்பித்தபோது, இந்திய விமானப் படையில் 16-அதிகாரிகளும் 269-சிப்பந்திகளும் தானிருந்தார்கள்; பழைமையான விமான ரகங்களே இருந்தன. போர்த் துவக்கத்தில், இட்லரின் வெற்றிப் பட்டியல்கள் விரைந்தன; நேசநாடுகள், 'வெற்றிகரமாக'ப்பின்வாங்கிக்கொண்டிருந்தன.

இந்தத் தோல்வியின் விளைவால், இங்குள்ள விமானப்படையினையும் அதிகமாக்க வேண்டுமென எண்ணினர் வெள்ளையர். அதன் விளைவாக, விமானப்படை மாணவர்கள் பயிற்சிக்கூடம் ஏற்படுத்தப் பட்டது. கராச்சி, ஜுகூ, டம்டம், சென்னை, விசாகை ஆகிய கரையோரப் பட்டினங்களில் பாதுகாப்பு 'ரிசர்வ்' விமான தளங்கள் வரிசையாக ஏற்படுத்தப் பட்டன. 1942-ல் அவையெல்லாம் ஒன்ருக்கப்பட்டு, ஒரே நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்பட்டன.

ஜப்பான் யுத்தத்தில் ஈடுபட்ட ஒரு வாரத்துக்குள், இந்திய விமானப்படை பர்மா அரங்கத்துக்குத் தருவிக்கப்பட்டது. அங்கே அது நேசவிமானப்படைகளுடன் கூட்டாகப் பணியாற்றியது அப்போது தான இங்கேயிருந்து சென்றவர்களின் வீரமும் திறமையும வெளியாயிற்று. 1943-45-ல் அரக்கான, இம்பால் போர்களின்போது, இந்திய உபகண்டத்து விமானப் படைக்கு 14-வது சைனியத்தின் "கண்ணும் காதும்" என்ற செல்லப் பெயர்கொடுக்கப் பட்டது.

1945-ல் இந்திய விமானப்படைக்கு "ராயல்" என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டு அப்படையின் பெருமை பாராட்டப்பட்டது. சுதந்திரம் மலர்ந்த பிறகு, 1950ல் அந்த அடைமொழி கைவிடப்பட்டது. போர் நிறுத்தம் ஏற்பட்டபின் ஜப்பானுக்கு அனுப்பப்பட்ட காமன்வெல்த் காவல் படைகளுடன் இந்திய விமானப்படையும் சென்றது. இது திறமைக்குக் காட்டப்பட்ட மரியாதைதமாம்.

அதிகாரிகளும் பெரிய விமானிகளும் வெள்ளையர்களாக இருந்த நிலைமாறி, சுதந்திரத்துக்குப்பின், சுதேசியமயமாக்கினர். அதன் விளைவாக 1954-ல் ஏர்மார்ஷல் முகர்ஜி இந்திய விமானப்படையின் பிரதம அதிபரானர். சுதந்திரம் வந்த பினனர், பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வந்த அகதிகளைப் பத்திரமாகக்கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பும், காஷ்மீர் சண்டையும் சேர்ந்தன. இப்போது இங்குள்ள விமானப்படைப் பயிற்சிக்கூடத்தில் பர்மா, ஆப்கானிஸ்தானம், இந்தோனேஷியா. எகிப்து முதலிய நாடுகளுக்காகவும் படை. பயிற்சி தரப்படுகிறது.

ஜெட் விமானங்கள் — வெடி விமானங்கள்— சண்டை விமானங்கள், அத்தனையும் இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன. டில்லி விமானப்படையினை வளர்ப்பதில், ஊக்கமும் உற்சாகமும காட்டி வருகிறது. 'அணு யுகத்தில்' விமானப்படை எந்த மூலை? — எனருலும், விமானங்களைக்கொண்டு, சமாதான காலங்களில் நல்ல பயன்களைப் பெறமுடியும். எங்காவது வெள்ளம், புயல் ஏற்பட்டு மக்கள் தவிக்கிருர்கள் என்ருல், அங்குள்ள மக்களுக்கு உணவுப் பொருள்கள் தருவதுபோன்ற முக்கியமான பணிகளைச் செய்கிறது, இப்படை. நாட்டின் போக்குவரத்துக்கும், அஞ்சல் தொடர்பை வளர்க்கவும், செய்திகளைக் கொண்டு செல்லவும் விமானங்களைப் பயனபடுத்திப பலன் பெறமுடியும்! அழிவுச் சக்திக்கன்றி, ஆக்க வேலைகளுக்கு எந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்பையும் பயன்படுததி, மனிதன் உறவும் நெருக்கமும் கொள்ளமுடியும்! — அந்த வகையில், வானவூர்தியின் பயன், சாதாரணமானதல்ல. அதன் அருமையை, நவீன வாலிபர்கள் புரிந்துகொள்ளல், விடுதலைபெறத் துடிக்கும் ஒரு நாட்டுக்கு மிகமிக அவசியம்.

★

மகிழ்ந்தாடு!

தாயகம் மீளத், தன்மதிப் போங்கத்,
தாரணி நம்புகழ் பாட,
மாயிருள் வாழ்வில் ஒளிபெறத், திராவிடம்
வாழ்கென வாழ்த்திடு தோழா!

நம்மருங் கலைகள் நற்பண் பாடுகள்
நலிவுறச் சதிமேற் கொள்ளும்
வெம்பகை வீழச், சூழ்ச்சிகள் மாய
வீறுகொண் டெழுந்திரு தோழா!

பாரதமென்பார்; ஐக்கிய மென்பார்;
பசப்பியே விடுதலை மறுப்பார்!
யாரது கூறினும் பகுத்தறி வாயுதம்
எடுத்திடு! வீழ்த்திடு சூழ்ச்சி!

உரிமைநம் திராவிட விடுதலை மறுக்கும்
உலுத்தராம் துரோகிகள் தம்மை,
விரைவினில் கொணர்வாய் மக்களின் மன்றம்;
விடுதலை விரைந்திடும் பாராய்!

பயனிலாப்பொருள்களை எதிர்த்தே புதுப்பொருள்
படைத்திடும் இப்பெரு நாளில்,
நயனிலார் உள்ளக் கருத்தினை மாற்றிட—
நாட்டினை உயர்த்திட, முயல்வாய்!

வாழ்க திராவிடம்! வாழ்க தமிழ்மொழி!
வாழ்கவென் றேதினம் பாடு!
சூழ்கடல் உலகில் சுதந்திரத் திராவிடம்
தோற்றியே நீமகிழ்ந் தாடு!

புதுவை. ச. சிவப்பிரகாசம்

தளிர்

மலர் மன்னன்

கதவுகளற்ற சாளரத்தின் வழியாக உள்ளே நுழைந்த வாடைக்காற்று, அவன் உடலையும், உள்ளத்தையும் ஒருங்கே சிலிர்க்கவைத்தன. இழிந்து போன கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டான்.

விளக்கின் ஒளி மங்கிற்று. எண்ணெய் குறைந்து விட்டதுபோலும்; திரியைப் பெரிதாக்கிக்கொண்டு அவன் மீண்டும் எழுதலானான்.

இருமல் ஒலி மூலையிலிருந்து துல்லியமாகக் கேட்டது.

'விடியவிடிய எழுதினால் விடிவுகாலம் பிறந்து விடும்; கதைக்கு, முன் பணமாக ஐம்பது ரூபாயா வது இடைக்கும்; அதைக்கொண்டு அவளுக்கு வைத்தியச் செலவு செய்துகொள்ளலாம்'......

நோய்வாய்ப்பட்ட தன்மனைவி படுகிற அல்லலைக் காணப் பொறுக்காமல், பணத்தைத்தேடிக்கொண்டு வீட்டைவிட்டுக் கிளம்பியபோதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

'யாரிடம் பணங் கேட்பது' என்ற வினாக்குறி இதயவெளியில் முளைத்தெழுந்தபோது 'நிறைநிலா' பதிப்பக உரிமையாளர்தான அவனுக்கு நினைவு வந்தது.

பள்ளிப் பருவத்தை இருவருமே ஒன்றாகக் கழித்தவர்கள். அவன் ஏழை எழுத்தாளனாகவும், அவர் பணக்காரப் பதிபபாளராகவும் வாழ்க்கை யைத் துவங்கிய பின்னரும் இருவரிடையேயும் தொடர்பு இருக்கத்தான் செய்தது. அவன் எழுதிய இரண்டொரு நூற்களைப் பெரியமனது வைத்து வெளியிட்டிருக்கிறார்! அவர் அப்படிப் 'பெரிய மனது'வைக்கக் காரணமில்லாமலில்லை.

அவனது உணர்வுக்கே எட்டாத வகையில் அவன கதைகளுக்கு வாசகர்களிடையே செல்வாக் கிருந்ததும், வறுமை காரணமாகத் தன படைப்பு களைக் குறைந்த தொகைக்கு அவன கொடுத்ததும போதாதா, ஓர் புத்தக வெளியீட்டாளர் புத்தகம் வெளியிட?

"கடனாக என்னய்யா, உமக்கென்றே கொடுக் கிறேனே ஐம்பது ரூபாய்? கதையொன்றுகொண்டு வாரும்; புத்தகமாகப் போடுகிறேன்; அப்புறம மீதியைப் பார்த்துக்கொள்ளுவோம்......என்ன, புரி கிறதா நான் சொல்லுவது?"—அவன பணங்கேட்ட தறகு இதைத்தான பதிலாகத் தந்தார் அவர்.

"கைவசம் கதையேதும் இல்லையே இப்போது... வேண்டுமானால் எழுதித்தான தரவேண்டும......ஒரு வாரத்திற்குள தநதுவிடுகிறேன; இப்போதைக்கு நீங்கள் பணங் கொடுத்துத்தானாகவேண்டும......" என்றான், அவன்.

அவர் நமுட்டுச் சிரிப்பை இதழ்களில் படர விட்டார்.

"எத்தனையோ பேருக்குக் கொடுக்கவேண்டி யிருக்கிறது. இப்போது கடனாக எதுவும் தரமுடி யாது; கதைக்கு முன்பணமா என்றால், அதுவேறு சமாச்சாரம்!"

அவன் எவ்வளவோ வற்புறுத்தியும் அதே பதிலைத்தான் திரும்பத் திரும்பக் கூறினார்.

மனைவியின் வைத்தியச் செலவுக்கு உடனடியாக வேண்டியிருக்கிறதென்பதை வெட்கங்கெட்டு உடைத்துச் சொன்ன பிறகும், "அதற்கு நான என்ன செய்ய? கதை கொண்டுவந்தால் பணந் தருகிறேன், அவ்வளவுதான் என்னால் முடியும்!" என்று சிறிதளவு இரக்கமுமின்றிக் கூறிவிட்டார்.

அந்த வெறியில் வந்து எழுத ஆரம்பித்தவன் இயந்திரம்போல் பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டே இருந்தான்.

இரவுகளில் எழுதி எழுதியே பழக்கப்பட்டுவிட்ட அவனுக்குப் பகலில் எழுதுவதற்கான மனநிலையே இருப்பதில்லை. அன்றைய தினந்தான் அவன முதல் முதலாகப் பகலில் எழுத ஆரம்பிததிருக் கிறான. அதுவும் ஏதோவொரு வெறியின் காரண மாகத்தான. எனவே மறுநாள் காலையில் மீதியை எழுதமுடியும் என்று அவனுக்குத் தோனறவில்லை. அப்படியே எழுதுவதானாலும இடைவெளிக்குப் பினனர் எழுதினால் விருவிறுப்புக் குன்றிவிடுமோ வென்ற ஐயம பிறந்தது.

'எழுதுவதானால் இந்த இரவே எழுதி முடித்து விடவேண்டும்; இல்லையேல் நாளை இரவுதான. இனி நாட்களை ஒத்திப்போடுவது ஆபத்தில்தான முடியும; அவளுக்கு நோய் முற்றிவிட்டது; இன்றுவரை வாளா இருந்தது போதும; நாளைக்குக் கட்டாயம் அவளை மருத்துவரிடம அழைத்துப்போக வேண்டி யதுதான. எத்தனை நாட்களுக்கு இலவச மருத்துவ விடுதி தரும தண்ணீரை மருந்தாகக் குடித்துக் கொண்டிருப்பாள், அவள்?'

'எழுதுவதானால் சூடாக எதையேனும் பருக வேண்டும; சற்றே குளிர்காயவேண்டும; வீட்டில்

மூன்று நாட்களாகப் பூனையின் படுக்கையறையாக அடுப்பு இருந்துவருகிறது. கையிலும், ஒரு காசு இல்லை; சிறுது தொலைவு நடந்தால் தெருக்கோடியிலிருக்கிற தேனீர்க் கடைக்குச் சென்றுவிடலாம்; ஒரு கோப்பை தேனீர் பருகி, அப்படியே கும்மட்டியிலும் சிறிது நேரம் குளிர்காய்ந்துவிட்டு வரலாம; ஆனல் காசுக்கு எங்கே போவது? அவனிடமும் கடன் சொல்வதா? சே, சே! வெட்கக்கேடு!'

ஏதோ ஒரு நப்பாசையில் அவன் கரம் சட்டைப் பையைத் துழாவிற்று. நெளி நெளியான விளிம்பு அவன் விரல்களுக்குத் தட்டுப்படவும், வியப்பெய்தினன் அவன். அவசர அவசரமாகச் சட்டைப்பையில் இடந்த பொருளை வெளியே எடுத்துப்பார்த்தான்.

ஒரு பத்துக் காசு நாணயம்!

அவனை அறியாமல் அவன் பையிலே இடந்த அந்தக் காசு சாமானியமானதல்ல, மறுநாள் காலையில் ஐம்பது ரூபாய் வரும்படியைத் தேடித்தரும் வல்லமை படைத்தது!

இன்பாவேசத்தில் தன்னை மறந்தவனய்,அதனை இதழ்களில் பதித்து முத்தமிட்டான் அவன்!

"இனி விடிய விடிய எழுதமுடியும்; கதையை முடித்துப்பதிப்பகத்தார்கையில் கொடுத்துப் பணம் பெறுவது இனிமேல் சாத்தியம்தான்; அவளது நோய்க்குத் தகுந்த சிகிச்சை புரிவது நாளைக்கே முடியும்!" என்ற மகிழ்வுடன் கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டு புறப்பட்டான்.

"இந்தா... இப்படிப் போய்விட்டு வருகிறேன்; உடனடியாக வந்துவிடுவேன்......" என்று அரைத் தூக்கத்திலாழ்ந்திருந்தவளிடம் கூறிவிட்டு வெளியே வந்தான். விறுவிறுவென்று தெருக் கோடியை நோக்கி நடக்கலானன்.

கடையில் ஏறி பெஞ்சில் அமர்ந்து "சூடாக ஒருகோப்பை தேனீர்" என ஆணையிட்டவன் கடையினைச் சுற்றி ஒரு கண்ணேட்டம் விட்டான்.

கடையருகில் வெளிச்சம் படாத இடத்தில் யாரோ நின்றுகொண்டிருந்தார்கள். அரை இருளில் நின்ற அந்த உருவத்தை அவன் உற்றுநோக்கினன்.

குளிரில் வெடவெடவென்று நடுங்கிக்கொண்டிருந்த ஒரு சின்னஞ்சிறு பெண்; அரையில் சிறு கந்தலைத்தவிர வேறொன்றுமில்லை. மினமினியைப்போல பளிச்சிடுகின்ற சின்ன விழிக் கோளங்கள் கடையிலமர்ந்து சுடச்சுடத் தேனீர் பருகுவோரையே ஆவலுடன் கவனித்துக்கொண்டிருந்தன.

அவனது கண்கள் அச்சிறு விழிகளை உற்று நோக்கின. குளிரால் நடுநடுங்கும் பிஞ்சு மேனியையும் உன்னிப்பாகப் பார்த்தன.

கண்ணுடிக்குவளைகளில் நிரம்பியிருக்கிற சூடான தேனீரை ஆசைததும்பப் பார்க்கிற அந்தச் சின்னக் கண்கள்...... அவற்றில் படர்ந்திருக்கும் ஏக்கம்......

அவன் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிந்தார்கள்.

தேனீர்க்கோப்பையுடன் வந்த கடைக்காரனிடம் "எனக்கில்லையப்பா...... அதோ, அங்கே கொடு" என்ருன்.

"எங்கே?"

அவன் கரம் கடைவாசலில் நின்ற அந்தப் பெண்ணைச் சுட்டிக்காட்டியது.

"அங்கேயா?" என்று வியப்புடன் வினவினன் கடைக்காரன்.

"ஆமாம்"

"இந்தா வாங்கிக்க" என்று அந்தப் பெண்ணை நோக்கிக் கோப்பையை நீட்டினன். அது விழுந்தடித்துக்கொண்டு வந்து கோப்பையை வாங்கிக்கொண்டது. 'எங்கே திரும்பப் பிடுங்கிக்கொண்டு விடுவார்களோ' என்ற அச்சம்; "மடக் மடக்"கென்று குடிக்கத் துவங்கியது.

"மெல்ல, மெல்ல......நாக்கு வெந்துபோகும்" என்று அவன் அபயமளித்த பிறகு, அதுமெதுவாகப் பருக ஆரம்பித்தது.

"உங்களுக்கும் ஒண்ணு ஐயா?" என்ருன் கடைக்காரன்.

"எனக்கு வேண்டாமப்பா" என்ற பதில் கடைக்காரனுக்குப் புதிராக இருந்தது.

வெந்நீர் கேட்போமாவென்று முதலில் நினைத்தான். 'அப்புறம் தேனீருக்குக்காசு இல்லை என்பது கடைக்காரனுக்குத் தெரிந்துவிடும்; சே, அதைவிட அவமானம் வேறில்லை!'

பேசாமல் எழுந்திருந்தான். காசைக் கொடுக்கிற சாக்கில் கும்மட்டியருகில் சற்று நின்ருன் கடைக்காரனைக் கவனியாதவன் போல்! தெருவில் இறங்கி நடக்கலானன்.

பனி கொட்டியது; வாடைக் காற்று "பளார்" என்று முகத்திலறைந்தது; தேகம்வெடவெடவென்று நடுங்கியது. நாசியில் வாயைவைத்து உடம்பிலிருக்கிற உதிரத்தையெல்லாம் யாரோ உறிஞ்சுவது போலிருந்தது. இருந்தும் அவற்றையெல்லாம் இலட்சியம்செய்யாதவனக நடந்து கொண்டிருந்தான் அந்த ஏழை எழுத்தாளன்.

கதையைத் தொடர்ந்து எழுதுவது இனி இயலாத ஒன்றுதான். பத்துக் காசைக் கண்டவுடன் அவன் கட்டியகோட்டைகள்யாவும் இப்போது பொல பொலவென்று உதிர்ந்துவிட்டன. அதனலென்ன? இனந்தெரியாத ஒரு மன நிறைவுடன் அவன் நடந்துகொண்டிருந்தான்—நடந்துகொண்டே இருந்தான!

○

'சொற்பொழிவு'போகிறது!

"உபந்நியாசம், பிரசங்கம் என்ற சொற்களுக்குப் பதிலாகத் தற்போது தமிழ் மக்களிடையே 'சொற்பொழிவு' எனும் அழகான தமிழ்ச் சொல் இன்று இடம்பெற்று வருகிறது. 'சொற்பொழிவு' என்ற அழகான சொல்லை உருவாக்கியவர் திருநெல்வேலியைச் சேர்ந்த பால்வண்ணமுதலியார் என்பவராகும். எப்படி மேடையில் பேசுவது என்பது பற்றி, 'சொற்பொழிவாற்றுப்படை' என்ற பெயரில் ஒரு சிறந்த நூல் இயற்றினர். 'உபந்நியாசம்' என்பதற்குப் பதிலாக, 'சொற்பொழிவு' என்ற புதிய தமிழ்ச்சொல்லைப் பயன்படுத்தியதற்காக அவரை அக்காலத்தில் பலர், "அதோ சொற்பொழிவு போகிறது," என்று கேலி செய்தனராம்.



பிள்ளைத்தாய்ச்சி

வாணிதாசன்

எங்கோ தொலைவில் எரியும் ஊர்போல்
மேற்குத் தொடுவான் மலைகள் விளங்கின!
தென்னை பலாமா செழுங்கழைக் காட்டுப்
பசுமை நிறத்தில் பாய்ந்தது பொன்னொளி!
மலையின் உச்சி பரிதி மறையச்
சாரல் அருவி சலசலத்(து) இரையும்!
கருங்கால் வெண்ணுடல் பெருமூக்கு நாரை
கத்திக் கத்திக் காட்டைக் குறுகும்!
வானை முட்டும் கோயில் மணியும்
அந்தி வந்ததை அறிவித்(து) ஓயும்!
வானில் முன்னர் வந்த மீன்போல்
வீட்டுத் திண்ணை விளக்கை ஏற்றிப்
பாட்டி வந்து தெருவைப் பார்த்தாள்.
தெருவின் கோடியில் தெரிந்தனர் இருவர்.
நின்று நின்றே இடுப்பில்கை ஊன்றி
வந்தாள் ஒருபெண் மலர்முகம் சோர்ந்தே.
அவளின் அருகில் ஒருவன் வந்தான்.
கட்டுடற் காளை; கரிய நிறத்தான்,
முகப்பொலிவுடையோன்; முறுக்கு மீசையன்
பணிவாய்ப் பேசிப் பகையும் வெல்லும்
துணிவும் இனிமைச் சொல்லும் உடையவன்.
பாட்டி நிற்கும் வீட்டின் அருகில்
வந்தான்; நின்றான்; வணங்கிச் சிரித்தான்.
அவனுடன் வந்த அணங்கைக் காட்டி
இவள்என் மனைவி இருஐந் திங்கள்
நிரம்பினள்; எம்மூர் நெடுந்தொலை(வு) ஆகும்;
மருத்துவ மனையில் சேர்த்து வைக்க
அழைத்து வந்தேன்; அந்தியும் வந்ததே.
இரவு மட்டும் இவளிங்(கு) இருக்க
இடம்தர வேண்டும்; இடம்தர வேண்டும்.
காலையில் இவளை மருத்துவச் சாலை
சேர்ப்பேன் என்று கெஞ்சிநின்(று) இருந்தான்
பிள்ளைத் தாய்ச்சி பெருமூச்(சு) எறிந்து
தூணில் தலையைத் தொங்க விட்டுக்
கையால் இடையைக் கசக்கிக்கொண்டே
அப்படி இப்படித் தலையை அசைத்தே
நின்று சோர்ந்து நெடுமூச்(சு) எறிந்தாள்.
சாலைப் போல வயிறு சரிந்து
மேலெலாம் வெளுத்து மினுமினுப்(பு) ஏறிக்
கொவ்வைச் செவ்வாய் குளிர்மை இழப்ப
மைவிழி மஞ்சள் விழியாய் மாறக்
கன்னம் உப்பிக் கண்ணை மறைக்க
நிற்க முடியாமல் நின்றுகொண்(டு) இருந்தாள்.
"பிள்ளை பெற்ற பெரியம் மாவே!"
இரவு மட்டும் இருக்க இடத்தைக்
காட்டுக; காலையில் கணவ னோடு
சென்று மருத்துவம் செய்திடு விடுதி
அடைவேன் என்று கெஞ்சினள் அவளும்.
பெண்ணினம் என்றும் பெண்ணுக்கு இரங்கும்
அதிலும் பிள்ளைத் தாய்ச்சி அவளைக்
கண்ட பாட்டிக்குக் கருணை பிறந்தது.
வீட்டினுள் வெளிப்புற அறையைக் காட்டினாள்
கூட்டிப் பெருக்கிக் குந்தச் சொன்னாள்.

காலையில் வந்து காண்பதாய்ச் சொல்லி
அழைத்து வந்த அவளின் கணவன்
பாட்டிக்கு நன்றி பலசொல்லிப் போனன்.
வயது முதிர்ந்த பாட்டிக் கொருமகன்
நாள்அங் காடிநடத்திப் பலபொருள்
சேர்த்தும் திருமணம் செய்துகொள் ளாமல்
சேவல் போலத் திரிந்து வந்தான்.
வேளை யோடு வீட்டில் உணவை
உண்டு படுக்கும் உயர்குணம் இல்லான்.
சிதறிய சிறுசிறு செம்பொன் துண்டுபோல்
விண்மீன் வான வெளியில் கிடந்தன.
வகைவகை உணவு வைத்திருந் தாலும்
உப்புக் குறைந்தால் உணவென் ஆகும்?
கோடி விண்மீன் குவிந்திருந் தாலும்
நிலவிலா வான நிலைஎன் ஆகும்?
இரவு தடித்தே இருந்த(து) எங்கும்.
காலை நீட்டிக் கனிவாய்ப் பாட்டி
பேசிப் பிள்ளைத் தாய்ச்சியோ(டு) இருந்தாள்.
பழங்கதை என்றல் பாட்டிமார்க்(கு) இன்பம்.
சோர்வே இன்றி இரவெலாம் சொல்வர்.
கிழவியின் வாயைக் கிண்டக் கிண்டப்
பாட்டி வீட்டின் பண்பெலாம் சொன்னள்.
பிள்ளைத் தாய்ச்சியும் பேசிக்கொண்டே
படுத்துக் காலைப் பக்கமாய் நீட்டி
ஊங்கொட்டிப் பாட்டியின் உரைகேட்(டு)—
[இருந்தாள்.
தூங்கினல் பாட்டியும் தூங்குவாள் என்றே
பொய்த்துயில் புரிந்து புரண்டு படுத்தாள்.
பாட்டி படுத்தவள் காலைத் தொட்டே
ஆட்டி எழுப்பினள்; அடர்ந்த மயிர்கள்
கையில் பட்டதைக் கண்டாள் பாட்டி!
பெண்கட்(கு) ஏது பெருமயிர் காலில்
ஆணின் காலில் அடர்ந்த மயிர்கள்
இருப்பதே உண்மை! இதுஎன் புதுமை?
என்று நினைத்தே எழுந்தாள் பாட்டி
"நடந்த களைப்பு நன்ருய்த் தூங்குக;
தூங்கினல் சோர்வும் தொலையும்; நானும்
வெளித்தாழ் வார விரிப்பில் படுப்பேன்"
என்றே அறையை இழுத்துப் பூட்டி
வந்து மகனின் வழிபார்த்(து) இருந்தாள்.

அக்கம் பக்கத்(து) ஒலிகள் அடங்கின.
வானிலும் கார்முகில் வந்து சூழ்ந்தது.
இரவில் திரிந்தே இரையைத் தேடும்
பறவையின் கூச்சல் படப்பையில் கேட்டது.
சந்து விளக்குகள் தணியத் தொடங்கின.
மரத்துப் பழுப்பு வாடையில் உதிரும்
சிற்றெலி காதில் தெளிவாய்க் கேட்டது.
ஊரின் கோடியில் ஒருநாய் குரைத்தது.
வாயில் கதவை யாரோ வருடுதல்,
பாயில் இருந்த பாட்டி உணர்ந்தாள்.
மகன்என்(று) எண்ணி எழுந்துவந்தாள்
ஏதோ எண்ணி இடையில் நின்று
வந்தவன் யாரெனச் சந்தால் பார்த்தாள்.
அந்தியில் அவளை அழைத்துவந் தவனே
என்ப(து) அறிந்தே ஏன்எனக் கேட்டாள்.
"பாட்டி மருத்துவப் பணிமனை சென்றேன்;
இரவே மனைவியை இட்டு வந்து
விரைவில் விடுஎன மருத்துவர் சொன்னர்."
என்றான் வந்தவன். அவனுடன் இருவர்
மறைவில் வருவதைப் பாட்டியும் கண்டாள்.
"மகனே மனைவி வயிற்றுநோய் பட்டாள்;
மணிபத்(து) இருக்கும்; மருத்துவ மனைக்கு
மாட்டு வண்டியில் கூட்டிப் போனேன்;
இரண்டொரு மணியில் ஈனுவாள் என்றே
மருத்துவர் உரைத்தார்; மனைவியை விட்டு
வந்தேன்; காலையில் மருத்துவ மனைக்குச்
சென்றுபார்" என்றே பாட்டி செப்பினள்.
வந்தவன் திகைத்தான்; வந்த வழியே
சென்றான்; அவனுடன் சென்றனர்
[இருவரும்
பாட்டி மகன்வரு வழிபார்த்(து) இருந்தாள்.
மகனும் வந்தான்; வாயில் திறந்து
வீட்டுள் நிலைமையை விளக்கினள் காதில்
சிட்டெனப் பறந்து சிப்பாய் பலரை
இட்டு வந்தான் இல்லத் துள்ளே
பூட்டைத் திறந்து சிப்பாய் புகுதலும்
கத்தியைக் காட்டிக் கதவின் ஓரம்
பிள்ளைத் தாய்ச்சி பேசா(து) இருந்தாள்
விலங்கை மாட்டி வெளியில்
ஆடை களைய ஆண்கண் டாரே!

பிடியில் — துடியிடை

சி. என். ஏ. பரிமளம்

"வேலா! என்னை விட்டுவிடு, என்னை விட்டு விடு" என்ற குரல்கேட்டு நான், வீதியை நோக்கி னேன். அந்தப் பெண்! வயது இருபது இருக்கும். இளமங்கை, அழகின் இலக்கணம். ஆனால் ...அவள் ஓர் பைத்தி யம்.

அவளை நான், அழைத்தேன். "உன் பெயர் என்னம்மா?"

"என் பேரு...தெரி யாது..." அழுதாள்.

இது ஒரு புதுப் பைத்தியம் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

ஒரு கேள்விக்குக்கூட அவள் பதில் சொல்ல வில்லை.

"அடிக்கடி வேலா, வேலா என்கிறாயே, யார் அந்த வேலன்?"

"வேலனை உனக்குத் தெரியாது!...... அவன்... அவன்... சொல்லமாட்டேன்".

மீண்டும் அழுகை.

அதற்குள் எதிர்வீட்டுச் செட்டியாரின் வேலைக் காரன் வந்து அவளை அழைத்துச்சென்றான். இந்தப் பைத்தியத்தை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். அவள் வாழ்வில் ஏதோ மர்மம் புதைந்திருப்பது போல் எனக்குத் தோன்றிற்று.

ஆனால் இந்த இளம் வயதில் அவளுக்கு இவ்வ ளவு துன்பமா? நான் அனுதாபப்பட்டேன்.

பிறகு ஆறுதலா கூறமுடியும்?

....

அந்தியூரில் வந்து இறங்கினேன்.

"என்ன சந்திரன், எங்கே இந்தப்பக்கம்" என்று கேட்டுக்கொண்டே என் நண்பன் வந்தான். இரு வரும் பேசிக்கொண்டே கோயிலின் பக்கம் சென் றோம்.

"பூவோ பூ" என்ற குரல் என்னைத் தடுத்து நிறுத்திற்று.

அதே பைத்தியம்! பூவிற்றுக்கொண்டிருந்தாள். அவளேதான், உதட்டிற்குமேல் அமைந்த அந்த சின்ன மச்சம். எனக்கு வியப்பு மேலிட்டது. நான் அவளைப் பார்த்துக்கொண்டே நின்றுவிட்டேன்.

"என்ன சந்திரன், ஏன் இப் படி நின்றுவிட்டீர்கள்!"

என் நண்பனின் குரல் என் சிந்தனையைத் தடுத்தது.

"ஒன்றுமில்லை" என்று சொல்லி அவனை மெல்ல அனுப்பிவிட்டு நான் திரும்பவும் கோயில் பக்கம் சென்றேன். அதற்குள் அவள் பூக்கூடையைத் தலை யில் வைத்துக்கொண்டு நடக்கஆரம்பித்துவிட்டாள். நான் அவள் பின்னே சென்றுகொண்டிருந் தேன்.

ஏன்என்றுஎனக்கே புரியவில்லை!!

"எவ்வளவு அழ காக இருக்கிறாள்!" பொருளற்ற நினைப்பு கள்!...

திடீரென்று அவள் திரும்பிப்பார்த்தாள்.

"ஐயா, நீங்க......"

"நீ பைத்தியமில்லை......!"

இருவரும் மௌனமாக நடந்துகொண்டிருந் தோம். அவளுடன் நானும் அவள் வீட்டிற்குச் சென் றேன். நான் அங்கிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந் தேன். அவள் என் எதிரில்நின்றுகொண்டிருந்தாள்.

தலையைத் தாழ்த்தி, நின்றுகொண்டிருந்தாள்.

"உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை" என் பார்களே, அதுவரையில் அவள் அழகை இரசித்தேன்.

நான்தான் பேச்சை ஆரம்பித்தேன்.

"நீ பைத்தியமில்லை......!"

நான் 'பைத்தியக்காரத்தனமாய்' அந்தக் கேள்வி யைக் கேட்டேன்.

சித்திரம் பேசிற்று!

"நான் இந்தக் கேள்விக்கு என் முழுக்கதையைச் சொல்லவேண்டும். என் பெயர் அன்னம். நான் பிறந்தது இதே ஊரில்தான். என் தந்தை ஒரு குடியானவர். என்னைச் செல்வமாக வளர்த்து வந்தார். என் தந்தையைவிட்டு நான் பிரிய வேண் டிய காலம் வந்தது. கன்னிப் பருவம் அடைந்தேன்! வேலன் என் அத்தை மகன். அவனுக்கு என் மேல் கொள்ளை ஆசை. எனக்கும் அவனுக்கும் மண முடிக்க நாள் நிச்சயித்தனர் எங்கள் பெற்றோர்.

ஒரு நாள், அவன் என்னைக் குளக்கரைக்கு அழைத்துப்போனான், அந்தி நேரத்தில். "புள்ளி மானின் இரத்தத்தை குடிக்க வேட்கைகொண்ட புலிஅவன்" என்பது எனக்குஅப்போது தெரியாது.

பேதை, அவன் பின் சென் றேன். ஆடு, பலிபீடத்தை நோக்கி நடைபோட்டுக்கொண் டிருந்தது—கொலையாளியுடன்.

உலகம் தெரியாத ஆடு!

என்னை அவன் பலவந்தப் படுத்தினான்.

கெஞ்சினேன்.

கருத்துள்ள பெண், உடலில் வீரமும் உள்ளத்தில் கூச்சமும் உள்ள வாலிபனையே விரும்பு வாள்; கருத்தற்ற பெண், உடலின் பளபளப்பும், உதட்டில் புன்சிரிப் புப் பேச்சும் உள்ள ஆடவனிடம் தன்னையே பறிகொடுத்துவிடுவாள்.

கோபித்தேன்.

அழுதேன்.

ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வில்லை.

தாழி உடைந்துவிட்டது!

புலி இரத்தம் குடித்துவிட்டது!

புள்ளிமான் பைத்தியமாகிவிட்டது!

பிறகு நான் உங்கள் ஊரில் பைத்தியமாக அலைந்தேன். அந்த ஊரில் என்மேல் அனுதாபம் காண்பித்தவர் நீங்கள் ஒருவர் தான்.''

அன்னம் தலையைத் தாழ்த்தி ஞள்?

*

''ஒரு நாள்?

அந்த நாள் எனக்கு ஒரு புதிய உலகைக் காட்டிய நாள். ஆனல் அது துன்பஉலகம் என்று இப்போதுதான் தெரிகிறது.

அன்று என்னைச் செட்டிமார் அழைத்தார். புதிய உடைகள் கொடுத்தார். விருந்து படைத்தார். அவர் என்னை 'விருந்தா'க்கிக்கொள்ள இவை அச்சாரம் என்பது எனக்குத் தெரியாது.

அவர் விருந்து முடிந்தது!

முதல்விருந்தில் புள்ளிமான் பைத்தியமாகியது!

இரண்டாவது விருந்தில் புளளிமானுக்குப் புத்தி திரும்பி விட்டது!!''

சந்திரனின் கண்களில் நீர் கொப்பளித்தது.

*

''அன்னம்! அன்று செட்டியார் உன்னை அழைத்ததை நானும் பார்த்தேன். அது பரிதாப உணர்ச்சி என்று எண்ணினேன். ஆனல் அது தாப உணர்ச்சி என்பது இப்போது தான் தெரிகிறது''

அன்னம் தொடர்ந்தாள்.

''என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி நான் அவரிடம் மன்ருடினேன். பலன் கிடைக்க வில்லை.

இப்போது நான் பூக்காரி. என் பழைய கதையை மறந்துவிட்டேன். எனக்கு வாழ்வு கிடையாது. என்னை யாரும் மணந்துகொள்ள மாட்டார்கள்.

ஆனல் ஒன்று! நான் என் மனமறிந்து என் கற்பை இழக்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் பரிசுத்தமானவள்.

நான் இதுவரையில் இவைகளை யாரிடமும் சொன்னதில்லை. ஆனல் உங்களிடம் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

தவறிருந்தால் மன்னித்து விடுங்கள். இவைகளை மறந்து விடுங்கள்—மறைத்துவிடுங்கள்''

இருவரும் கண்ணீர் விட்டோம்.

''நான் வந்தவரை விசாரிக்காமல், என்னைபற்றி பேசிக்கொண்டிருந்துவிட்டேன். நீங்கள் இந்த ஊருக்கு வந்த காரணம்''

''அன்னம் நான் பெண் பார்ப்பதற்கு இந்த ஊருக்கு வந்தேன், உன்னைப் பார்த்தேன்!

உன் கதையைக் கேட்டதும் என் மனம இளகிவிட்டது. நீ சம்மதித்தால் நான் உன்னை மணந்து கொள்ளுகிறேன்.

அன்னம் தலையைத் தாழத்திக்கொண்டாள்.

சம்மதத்தின் அடையாளம்!!

'அத்தான்! ஊரில் உள்ளவர்கள் ஏதாவது சொல்வார்கள்''

''அன்னம், நாம் இந்த ஊரிலேயே மணம் முடித்துக்கொண்டு இந்த ஊரிலேயே வாழ்க்கையை நடத்தலாம்''

''அன்னம்! கால்கடுக்க நிற்கிருயே, இப்படி உட்கார்'' என்றேன்.

அந்தத் துடியிடை என் பிடியில் இருந்தது!

நான் பைத்தியமானேன்!

குரங்கு மனம்

பசியால் உடல் மெலிந்த ஒரு புலவர் வயிற்றைப் பார்த்துப் பாடினார்: 'ஏ பாழும் வயிறே—இதென்ன உன் இயல்பு—ஒரு நாள் உணவை விடு என்றால் விடமாட்டேன் என்கிறாய், கிடைக்கின்றபோது இரண்டு நாட்களுக்குச் சேர்த்துக்கொள் என்றால் கொள்ளமாட்டேன் என்கிறாய். சேச்சே, உன்னோடு வாழ்வது அரிது அரிது' என்று சொல்லி நொந்துகொண்டாராம். அந்தப் புலவரைப்பற்றி எண்ணும்போது எனக்குக்கோபம்கூட வருகின்றது. ஏன்? ஒரு தொல்லையும் செய்யாத வயிற்றையா நொந்துகொள்வது? அது என்ன செய்யும், பாவம். மற்ற உறுப்புக்கள் சோர்ந்துபோனால், அவற்றைத் தூண்டுவதற்கு அது பசிபசி என்று அலறுகிறது. அந்த வேளைக்கு இரண்டு கவளம் வெந்ததோ, வேகாததோ, காரமோ புளிப்போ — அளித்தால் அது தன் வேலையைச் செய்யத் தொடங்கிவிடுகின்றது.

வேறு ஒருவகையிலும் அது 'நச்சரிப்பது' இல்லை. ஆனால் புலவருக்கு அந்த இரண்டு கவளமும் கிடைக்கவில்லை. வயிறு கொடுத்த தொல்லை வெண்பாவாக வெளிவந்தது!

போகட்டும். வயிறு எவ்வளவோ மேல். இந்த மனம் இருக்கிறதே—ஆமாம் இருக்கிறது — அது செய்கிறதொல்லை, கொடுக்கிற இன்னல்இருக்கிறதே, அதை எப்படி எழுதுவது? மனத்தால் நினைக்கவே முடியவில்லையே!

வயிற்றுக்குச் சோறிட்டால் போதும். ஆனால் மனத்திற்கு என்ன இட்டு நிரப்புவது? எதைக் கொண்டு அமைகின்றது அது? "இது வேண்டும்" என்கிறது எதையாவது காட்டி. அதைக் கொடுத்தவுடன், மறுகணம் பிறிதொன்றைக் காட்டி 'அது?' என்று தாவுகின்றது. அதுவும் கிடைத்தானதும் வேறு கேட்கின்றது.

கிளைக்குக் கிளை தாவும் குரங்கு எவ்வளவோ மேல் எனலாம். குரங்குதான் இருக்கின்ற விலங்குகளில் எல்லாம் தாவும் தன்மை படைத்தது. ஓடித்திரியும் மானும் ஒரு கணம் ஓய்ந்திருக்கும்; ஆடிக் களிக்கும் மயிலும் அமைதியைத் தேடும், பாடிக் குலவும் குயிலும் குரலை அடக்கிக் கிடக்கும், ஆனால் குரங்கு ஒரு கணம்—ஒரே ஒரு கணம்—ஓய்வாக எங்காவது இருந்ததை-யாராவது கண்டதுண்டோ?

மா. கி. தசரதன்

'குந்தி'யிருந்தாலும் குரங்குத்தனம் செய்யாமல் இருக்குமா அது! இருந்தால் அது குரங்காகுமா!

'நாய்க்கு நிற்க நேரமுமில்லை, செய்ய வேலையுமில்லை' என்று பழமொழி சொல்வார்கள். நாயைப் பொறுத்தவரை அது மெய்யோ பொய்யோ! ஆனால் குரங்கைப் பொறுத்தவரை அது நூற்றுக்கு நூறு மெய்தான். 'வெட்டி முறிக்கிற வேலை' என்ன இருக்கிறது குரங்குக்கு? ஆனாலும் அது 'சும்மா' இருப்பதில்லையே!

செய்கிற வேலையில் ஏதாவது நன்மை இருக்கிறதா? துளியும் இல்லை. நன்மையில்லாவிட்டால் போகிறது, தீமையாவது இல்லாமல் இருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. 'குரங்குச் சேட்டை' என்று சும்மாவா சொல்கிறார்கள்? படகையே அல்லவா ஒரு குரங்கின் கூத்து கவிழ்த்ததாம்! படகில் இருந்த பாம்புக் கூடையின் மூடியைத் திறந்து பாம்பு வெளியே வரச்செய்ததாம். அதைக்கண்டு அஞ்சியவர்கள் படகின் ஒரே மூலையில்சென்று நிற்க, படகு சமநிலை இழந்து கவிழ்ந்தது என்று கதை சொல்வார்களே!

இந்தக் கதையில் வருகின்ற குரங்கு பிறருக்குத் தீங்கு செய்தது. ஆனால் இன்னொரு குரங்கு இருக்கிறது. அது 'தன் தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளும் யானை'யைப் போல், தனக்குத் தானே துன்பத்தைத் தேடிக்கொண்டது. யாரோ ஒருவன் மரத்தை அறுத்து இடையிலே ஆப்பு வைத்துவிட்டு இடைவேளை உணவுக்குப்போக, இதை எதன் இடையிலோ மறைந்திருந்த குரங்கு பார்த்துவிட்டது. "மனிதன்மட்டும் என்ன மரம் அறுப்பது—நானும் செய்கின்றேனே" என்று நினைத்து அந்த ஆப்பை அசைத்துப் பிடுங்கியதாம். இடையில் இருந்த வால் மரங்களுக்கிடையில் அகப்பட்டு நசுங்கியதாம். ரொம்பவும் வலித்துத்தான் இருக்கும்! என்ன செய்வது? செய்தக்கதல்ல செய்யக்கெடும், என்று திருவள்ளுவர் சொன்ன குறளைப் படித்திருந்தால்

அந்தக் குரங்குக்கு இவ்வளவு தொல்லை வந்திருக்குமா? தப்பு—மனிதரிலேயே இன்னும் பலர் அதைப் படிக்கவில்லையே. குரங்கு எப்படிப் படித்திருக்க முடியும்?

ஏன் அந்தக் குரங்கு அப்படிச் செய்தது? குரங்குச் சேட்டை மட்டும்தான் காரணமா? இல்லை இன்னொன்றும் இருக்கிறது. அது என்ன? போலச் செய்தல் என்பது. பார்த்ததை உடனே செய்யவேண்டும் என்ற ஆவல். மனிதனுக்குப் பெரும் துணையாக இருக்கும் அந்த ஆற்றல், மற்ற விலங்குகளைவிடக் குரங்கினிடம்தான் மிகுதியாக இருக்கிறதாம். அதனால் அது, மரம் அறுப்பவனைப் 'போலச்' செய்யப் பார்த்தது.

இது மிகவும் கெட்ட குணம் என்று ஒதுக்கி விடுவதற்கில்லை. ஏன்? ஒதுக்கிவிட்டால், தன் தலையில் இருந்த குல்லாயைக் கழட்டிக் கீழே எறிந்து, குரங்குகளை அப்படிச் செய்யவைத்து, அவை களவாடிக் கொண்டுபோன அந்தக் குல்லாய்களை மீட்டுக் கொண்டானே, அவன் என்ன ஆவான்?

என்ன ஆவான், ஆப்பம் கொண்டுவந்து கொடுத்துப் பங்கிடச் சொன்னதாமே இரண்டு பூனைகள். அவை என்ன ஆயின? பேசாமல் தங்களுக்குள்ளே அந்தப் பூசலைத் தீர்த்துக்கொள்ளாமல், அந்தப் பூனைகள் இரண்டு அப்பத்தை—எங்கோ திருடித்தான கொண்டுவந்து குரங்கு கையில் கொடுத்துச் சமமாகப் பங்கிடச் சொல்லிக் கேட்டுக் கொண்டன. குரங்குக்கு நல்ல பசி. இது பெரியது என்று இதிலே கொஞ்சம் கடித்தது, அது பெரியதாகிவிட்டதே என்று அதிலே கொஞ்சம் கடித்தது. இப்படி மாற்றி மாற்றிக் கொஞ்சநேரம் செய்தது. திருடிக் கொண்டு வந்த அப்பம், குரங்கு தின்று தீர்ந்ததைக்கண்டதும் 'திருடனுக்குத் தேள் கொட்டியதைப்போல' அந்தப் பூனைகள் நழுவிப் போயினவாம்.

ஆப்பம் மட்டுமா — பூமாலையைத்தான் குரங்கு கையில் கொடுத்துப் பாருங்களேன். இது ரோசா, இது மல்லிகை, இது முல்லை, இது சாமந்தி என்று அழகும் மணமுமா பார்க்கும்? 'பிய்த்து உதறி' குரங்கு கைப் பூமாலை—நார் என்றுக்கிவிடாதா?

குரங்கின் கைக்கு அவ்வளவு வலிவு இருக்கிறது என்றுதான் சொல்கிறார்கள். 'குரங்குப்பிடி' பிடித்தால் விடாதாம். இறுக்கிப் பிடித்துவிடுமாம். என்ன செய்வது, இன்னும் அந்தப் பிடியில் சிக்கவில்லை, அதனால் அது மெய்தானா என்றும் தெரியவில்லை!

துணிந்து முயற்சிக்கலாம் என்று எண்ணவும் முடியவில்லை. எந்தக் குரங்கினிடம் நம்பிப் பிடிப்பதற்குக் காதைக்கொடுப்பது? குரங்கு'பேன்பார்த்தாலும் பார்க்கும் — காதைக் கடித்தாலும் கடிக்கும்' என்கிறார்களே! அச்சமாக இருக்கிறதே!

நமக்குஅச்சம்தான். ஆனால் குரங்குக்கு அச்சம் வருவதில்லை. வந்தாலும் அடக்கிக் கொண்டு கவலையற்ற வாழ்க்கை நடத்துகின்றது. 'வால்போய் கத்தி வந்தது' என்று எதையாவதுஇழந்து விட்டாலும், இன்னொன்றைப் பெற்றதற்காக அது மகிழுகின்றது.

ஆனால் நம் மனத்திற்கு அந்த ஆற்றல் இருக்கிறதா? பாருங்கள் இந்த 'மனக் குரங்கு' செய்த வேலையை; மனத்தைப்பற்றி எழுதலாம் என்றுதான் தொடங்கினேன். ஆனால் அந்த மனக்குரங்கு மனத்திலிருந்து ஒரே தாவாகத் தாவி குரங்கைப் பற்றியல்லவா இவ்வளவு எழுத வைத்தது.

ஆனாலும், விடப்போவதில்லை. 'குரங்குப் பிடி'யாக பேனாவைப்பிடித்து மனத்தைப்பற்றி எழுதித் தீரவேண்டும்!

குரங்கிற்கு இருக்கும் அத்தனை குணங்களும் இன்னும் எத்தனையோ குணங்களும் மனத்திற்கும் இருக்கின்றன. மனிதனை 'ஆட்டிப் படைக்கின்ற' ஆற்றல் மனத்திற்கு இருக்கின்றது. மனதில் வல்லமை வந்துவிட்டால் எளியோர் வலியோர் ஆகின்றனர். வலியோர் மனத்தின் ஆற்றலை இழந்து விட்டால் ஏதும் செய்ய இயலாத கோழைகளாகின்றனர்.

இந்தக் கணம் ஒன்று எண்ணுவதும் மறுகணம் வேறு எண்ணுவதும் மனத்தின் மாற்ற இயலாப் பழக்கம். இங்கும் அங்குமாகத் தாவித் தாவிப் பல பொருள்களையும் பற்றிவிட்டு விளையாடுவது அதன் இயல்பு. நேற்று எண்ணிய எண்ணம் இன்று இருந்த இடம் தெரியாமல் மறைகின்றது. சரி தவறுகிறது; தவறு பொருத்தமான முடிவாகிறது. நல்லவர் கெட்டவராகின்றார்; கெட்டவரை நல்லவர் என்றெண்ணுகின்றோம். எல்லாம் இந்தப் பொல்லாத மனம் செய்யும் வேலைதான்.

இத்தனைக்கும் இந்த மனம் எங்கே இருக்கிறது என்பது இன்னும் தெரியவில்லை. எங்கே இருக்கிறது? கொஞ்சம் எண்ணிப்பாருங்கள்.

'நெஞ்சாரப் பொய்சொல்ல வேண்டாம்' என்கிறோம். மார்பின்மீது கைவைத்து 'மனம் அறியச் சொல்கிறேன்' என்கிறோம். மேற்கு நாட்டவர் மனம் மூளையில் இருக்கின்றது என்கின்றனர். எகிப்து நாட்டவரோ மனம் மார்பிலும் இல்லை, மண்டைக்குள்ளும் இல்லை — அது வயிற்றில்தான் இருக்கின்றது என்கின்றனர்.

அப்படியானால் எங்கேதான் அது இருக்கிறது? உடலை அறுத்துப்பார்த்த மருத்துவ வல்லுநர்களைக் கேட்டால் சொல்வார்கள் அல்லவா? அவர்களுக்கும் தான் தெரியவில்லை. உயிர் எங்கே இருக்கிறது? உடலில் எங்கும் பரவி இருக்கின்றது என்கின்றோம். அதைப் போலவே மனமும் எங்கும் நிறைந்திருக்கின்றது என்கின்றார்கள். ஆனால் இதைக் கேட்டால் சிரிப்பு வருகின்றது இல்லையா?

அப்படியானால் மனம் எங்கே இருக்கின்றது என்று சொல்வது? மனத்தைப்பற்றி ஆராய்ந்த மேற்கு நாட்டவர் ஒரு விளக்கம் தருகின்றனர். மனம் என்பது மூளையின் முடிவு என்கின்றனர். சிந்திக்கும் செயலைச் செய்வது மூளை. மூளையின் சிந்தனையின் பயனாக வெளிப்படுகின்றதே ஒரு முடிவு, அதுதான் மனம் என்கின்றனர்.

ஒரு மனிதனிடம் உடம்பில் எத்தனை நரம்புகள் இருக்கின்றன என்று நீங்கள் ஒருவனிடம் சொன்னால் நம்பி விடுவான். ஆனால் 'பெயின்ட் உலரவில்லை, இதைத் தொடாதீர்கள்' என்று போட்டிருக்கும் நோட்டீசை அவன் நம்பமாட்டான்; ஆராயத் தொடங்கிவிடுவான்.

எதிரே ஒருவனைக் காணுகின்றோம். அவன்து தோற்றம், பண்புகள் முதலியவற்றை அறிந்து கொள்கிறோம். அதனால் அவன் நல்லவன் என்று சொல்கிறோம். இங்கு எதிரில் நின்றவனைப்பற்றி அறிந்த அறிவு மூளை; நல்லவன் என்று சொன்ன முடிவு மனம். இதனால்தான் மேற்கு நாட்டவர் மனம் மூளையில் இருப்பதாகச் சொல்கின்றனர். ஆனால் நாம் மனம் இருதயத்தில் இருப்பதாக எண்ணுகின்றோமே, அதற்கு என்ன காரணம்?

மூளையின் முடிவோடு மட்டும் நின்று விடாமல் மேலும் எண்ணுகின்றோம். நல்லவன் என்ற முடிவு கிடைத்ததும், அவனை அணுகிச் சென்று அன்பாகப் பேசி நட்பாக இருக்க நினைக்கின்றோமே, அந்த நினைப்பைத்தான் நாம மனமாகக் கொள்கிறோம். உணர்ச்சிகள் கலக்கும்போதுதான் உருவம் கிடைக்கின்றது. உருவம் கிடைத்தால்தான் செயல்பட முடியும்.

ஆனால் 'மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்' என்று பழமொழி இருக்கின்றதே! ஏன்? மனம் என்பது சிந்தனையின் முடிவு என்று அறிந்தோம். அந்தச் சிந்தனை பல நேரங்களில் சீராக இருப்பதில்லை. சித்தம் மாறுபட்டு இப்போது ஒன்று, பின்னால் வேறாக எண்ணுகின்றோம். அதனால்தான் மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம் என்று கடிவாளம் இட்டிருக்கின்றனர்.

அந்தக் கடிவாளத்தை நன்றாகப் பயன்படுத்தத் தெரிந்துகொண்டால் போதும், மனதைக்கொண்டு மாபெருஞ் செயல்களையெல்லாம் செய்துமுடிக்கலாம். உலகில் அரியபெரிய செயல்வீரர்களாக விளங்கியோரெல்லாம், உடல்வலிவால், பொருட் பெருக்கத்தால் செய்துமுடித்த செயல்களைவிட, மனத்தில் ஏற்பட்ட உறுதியால் சாதித்த செயல்களே மிகுதி எனலாம். மனிதனுக்கு ஊற்றுப்போல் வற்றாத ஆற்றலைத்தரும் வல்லமை மனதிற்கு இருக்கின்றது. ஆனால் அந்த ஆற்றலைப் பெறுவது நம் முயற்சியால்தான் முடியும். உடலில் தளர்ச்சியிருந்தால் மருந்துண்கின்றோம்; உடல் உரம்பெறப் பயிற்சி செய்கின்றோம். நாராக இருந்த உடல் எஃகாக மாறுகின்றது. அதைப் போலத்தான் மனந்திருந்த மருந்துண்டு, மனம் வல்லமைபெற வழிகளை நாடினால் உறுதிபிறக்கும்.

உடலுக்கு மருந்து. இது தெரிகின்றது; ஆனால் மனதிற்கு எது மருந்து என்று எப்படித் தெரிந்து கொள்வது? முன்னோர் மொழிந்துவைத்த நல்ல கருத்துரைகள்தான் மனத்திற்கு எற்ற மாமருந்து. அந்த மாமருந்துண்ணும் பழக்கம்தான் மனத்திற்குத் தரும் பயிற்சி. அதனால்தான் திருவள்ளுவர் அறிவுரைகளில் உடலின் தூய்மையைவிட உள்ளத் தூய்மையை நாடிப் போற்றியிருக்கின்றார். 'நோய் நாடி நோய் முதல் நாடி' மருந்திடும் மருத்துவர் போல மனந்தேடி மருந்துண்ணவேண்டும்.

அந்தமனந் தூய்மைக்குத் திருவள்ளுவர் சொல்லும் ஒருவழி வாய்மை மேற்கொள்ளுவது என்பது. வாய்மையைப் போற்றினால் தூய்மை உள்ளத்தில் ஏற்படும் என்கிறார் அவர். நமது காலத்தில் புலவர் பாரதியாரும் உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் என்கிறார்!

மனிதன் உள்ளத்தைத் திருத்தும் பணியில் வெற்றி காண்பதுதான் சிறப்பு. உள்ளம் இருக்கிற இடம் தெரியவில்லை என்றாலும், அந்த இடம் மிக விரைவில் மாசு படிந்துவிடுகின்றது. எத்தனையோ வழிகளில் மாசு மனத்தில் சென்று படிந்து மனிதனை அரிக்கின்றது. அந்த அரிப்பு அழிவில்தான் கொண்டுபோய்விடும்.

பொறாமை — கோபம் — களவு போன்றவற்றை மனத்தினின்றும் அகற்றிவிடச் சமயவாதிகள் என்னென்னவோ வழிகளைக் காட்டினர், ஏதேதோ காரணங்களைக் காட்டினர். எதையெதையோ அறம் என்றனர். ஆனால் வள்ளுவரோ அறம் இது அது என்று தடுமாறவேண்டாண்டா என்று சொல்கிறார். அவர் சொல்கிற அறம்தான என்ன?

மனிதன் "மனத்தின்கண் மாசு இலன் ஆதல்" என்பது ஒன்றுதான அறம், மற்றதெல்லாம் பயனற்றவை என்றார்.

உடலில் ஏற்படும் உருவின் மாற்றங்கள் உலகத்தை ஏமாற்றும். ஆனால் மனத்தில் கள்ளம் இருந்தால் அதை எங்கே கொண்டுபோய் ஒளிப்பது? தன் நெஞ்சம் அறிவது பொய்த்தால் அந்த நெஞ்சமே நம்மைச் சுடும் எனகிறார் வள்ளுவர்.

குரங்குபோல் குதித்து ஓடும் மனதைத் தடுத்து நிறுத்தினால்தான் அதைப் பயிற்றுவிக்க முடியும. எங்கே நிற்கிறது அது? ஓடுகின்றதே. நிலைத்து நின்று நினைக்க இடம் கொடுக்கவில்லையே!

தமிழன் பெருமை

பிரெஞ்சுக்காரரிடம் பெரும் பதவிகள் வகித்த ஆனந்தரங்கம் பிள்ளையைப் பலரும் அறிவர். அவர் எழுதி வைத்துள்ள குறிப்புகள் "ஆனந்தரங்கம் பிள்ளை நாட் குறிப்பு" எனும் பெயரில் வெளிவந்துள்ளன. அதிலே, தமிழ் நாட்டில் நெய்யப்பட்ட பலவகைத் துணிகளைப் பற்றிய குறிப்பும் உள்ளது. "மொக்காமுட்டு" எனும் பெயரில் ஒருவகையான துணி தமிழகத்தில் நெய்யப்பட்டதாம். மொக்கா எனும் இடத்துக்கு அனுப்பப்பட்ட துணிகளே அந்தப் பெயர் பெற்றவை. இதுபோலவே, 'கலிங்கம்' என்பதும் கலிங்கநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட துணிகளுக்குப் பெயராக ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

"உண்பதிலும் உடுப்பதிலும் தமிழன் மிக மிக எளியன்" என்று எண்ணுவார்கள். ஆனால், உணவையும், உடையையும்கூடக் கலையாகக் கொண்டவன் தமிழன். தமிழன்போல உணவுவகைகளைத்தயாரித்துண்பதிலும், ஆடை நெய்து அணிவதிலும் கலையைக் கண்ட இனத்தவர் வேறு எவரும் இல்லை என்றே சொல்லிவிடலாம். தமிழனின், புனற்குழம்பும், மிளகு நீரும், மோர்க்குழம்பும், கூட்டுப் பச்சடியும் பிறர் அறியாதவை! அவற்றை ஒன்றன் பின் ஒன்றாகச் சோற்றுடன் கலந்துண்டு மகிழும் தரம் பலர் அறியாதது! ஆண்டு ஒன்றுக்கு ஆறுபருவங்கள். அந்த ஆறுபருவங்களிலும், தமிழ்ப் பெண்கள், வெவ்வேறு ஆடைகள் அணிந்து மகிழ்ந்தனர். என்னே, தமிழர் தம் வாழ்க்கை! அறிவுத்திறன்!!

நல்வாழ்வு தேவை

"வ. ச."

மனிதன் வாழ்வதற்காகக் கல்லுடைக்கின்ருன், கட்டைவெட்டுகின்ருன, வண்டியிழுக்கின்ருன், கடைவைக்கின்ருன், கட்டுமரமேறுகின்ருன், கடலைக்கடக்கின்ருன், மண் சுமக்கின்ருன எத்தனையெத்தனை தொழில்களோ செய்கின்ருன்; எனினும் வாழ முடியவில்லை; வயிற்றை நிரப்ப முடியவில்லை. விழலுக்கு இறைத்த நீராகப் பயன் கிடைக்காது, பல்லிளித்துத் திரிகின்ருன். படமுடியாத் துயரத்தில்மூழ்கி, பஞ்சடைந்த கண்ணினனய், பசி மிகுந்தபார்வையுடன் உலவி வருகிருன் உழைப்பாளி.

அதே சமயம் அவனைப்போல் உழைக்காத ஒரு சிலரோ, கோமளவல்லிகள் புடைசூழ, கோலாகலத்தில் விளையாடி, அரண்மனை வாழ்வில், அதிகார ஆணவத்தில், மதுதரும் போதையில், மங்கை தரும் இன்பத்தில் மூழ்கி, நெறிமுறை தவறி, நேர்மை குன்றி மான்வேட்டையாடுவதும், 'மாரன்' வேட்டையில் ஈடுபடுவதும், இரத்தின மோதிரங்கள் புனைவதும், வைரமுடியணிவதும், மலர் தூவப்பட்ட மஞ்சத்தில் மயக்கமொழி மங்கையரோடு வாழ்வின் இன்பத்தைச் சுவைப்பதுமாக இருக்கின்றனர்.

இல்லாதவன் தன் உடலில் வலுவிருந்து உழைத்தால்தான் உண்ண முடிகிறது. வலுவிழந்த காலத்தில் மாண்டு மடியவேண்டியதுதான். ஆனல் அவன் வலுவுடன் உழைத்து, தன் உழைபபால் உண்டாக்கப்பட்ட பொருளை அவனல் அனுபவிக்க முடியாது. அவனது உழைப்பிற்கு, சிறிய கூலியை— அரை வயிற்றுக்குப் போதாத நிலையில் கொடுத்து விட்டு, சகல நிகரலாபமும் தனக்கே சொந்தமென உறிஞ்சி வாழும் உரிமையுடன், அபகரிக்கும் முதலாளிகள் நிழலில்தான் இன்றைய அரசியல் நடைபெறுகின்றது.

கைத்திறனும் வாய்த்திறனும் உடையவர்கள் தான் இன்றைய உலகில் வாழ முடிகின்றது. அவ்விரண்டுமற்றவர்கள், உரிமையற்று உடல் உலர உழைத்துச் செத்துக்கொண்டிருப்பவர்கள்தான்.

அசையாதமேனியர்கள், வாடாதவாழ்வினர்கள், உழைக்காது வாழும் உருவங்கள், கள்ள நினைவினர், கொள்ளைக் கூட்டத்தினர், காவியணிந்த காமாந்தகாரர்கள், கமண்டலம் ஏந்திகள், பிற்போக்குக் கும்பல்கள், கொள்ளையடித்த பொருளை வைத்து கும்பாபிஷேகமும் தங்கப் பல்லக்கும் செய்யும் சமயவாதிகள், சூறையாடும் வியாபாரிகள் முதலிய இன்னொரன்னேர்தான் நன்ருக வாழ முடிகிறது.

மக்களின் தேவையை நிறைவேற்றிக்கொள்ளும் அளவிற்கு இந்த ஆட்சியில் சட்டத்தை மாற்றி, விளைவித்த பொருள், உற்பத்தி செய்த பண்டங்கள், இயற்கை கொடுத்த எண்ணற்ற செல்வங்களெல்லாம் சரிநிகர் சமம் என்ற நெறி முறை வகுத்து அமைத்துக்கொள்ளும் ஆற்றலற்று, நம்நாட்டுச் சிக்கல் தீர்க்காமல், சீரமைப்பில் கருத்தைச் செலுத்தாமல், ஒற்றுமை உணர்ச்சிக்கும் உயர்ந்தகோட்பாடுகளுக்கும் வழிகாட்டாமல், அறிஞர்களின் அறிவுரைக்குச் செவி கொடுக்காமல், ஆள் எண்ணிக்கையிலே ஆட்சி செய்யும் அக்கிரமங்கள் அழிந்து ஒழிந்து; நாடு மொழி இனமொத்த அரசியல், பொருளியல் குடியியல் முதலியவைகளை நிலைநிறுத்தி, மக்கள் எல்லாரும் பிறப்பின் பேதமற்று, பிளவு மனப்பான்மையின்றிச் சமத்துவத்துடன், உரிமையுடன்; ஏற்றத்தாழ்வின்றி எல்லோரும் பகுத்துண்டு மக்கள் உயிர் ஓம்பும்போது, நலமுடன் எல்லோரும் இன்புற்றிருக்கும் முறையில் அன்பும் அறிவும் அமைதியும் நிறைந்த நன்னெறியில் வாழ்வதே திராவிடக் கூட்டு அரசியலின் நோக்கமாகும்.

நாடு காடானல் என்ன? நமது மக்கள் நடைப்பிணமானல் எனன? எத்தனை பேர்கள் செத்தால் என்ன? இரத்தம் வடியும் இதயத்தைத் திறந்து காட்டினல் என்ன? தனது சொந்த நாட்டில் வாழ வசதியின்றி நாட்டுக்கு நாடு ஓடி வாடி வதங்கி வாழ்விழந்து தவித்தால் என்ன? என் பதவி நிலைத்தால் போதும் என்று கருதி, தென்னகத்தைத் தேய்க்கிருர்கள்!

இந்நிலை மாறி, ஏக்கத்தை, மறக்கஇல்லாமையைக்கல்லியெறிய, சோகத்தைத்தணிக்க நமது சொந்தத் தாயகம் விடுதலை பெற ஆவன புரிய ஆர்வத்துடன்எழுமின்.

எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ.

"**தோழன்மீர்!** உமக்குத் தங்கிட இடமில்லையா, கவலைவேண்டாம். நகரத்தில் நல்ல பல மாளிகைகளிருக்க, நீங்களேன் வருந்தவேண்டும்? இருக்கின்றவற்றுள் எது உமக்குப் பிடித்ததோ, அதை உமதாக்கிக்கொள்ளுங்கள். அங்குள்ளோர் எக்கேடுகெட்டால் உமக்கென்ன? எதிர்ப்போர் தலை தரையில் உருளட்டும்! இரவு பகல் எந்நேரமும்—வாரத்தில் ஐந்து நாட்கள்—நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் சுற்றிப்பாருங்கள்! கூடிப்பேசுவோர் சிரங்கள் கொய்யப்படட்டும்! சந்தேகத்துக்குரியோர் செத்துமடியட்டும்! ஈவு இரக்கம் காட்டாதீர்! இறப்போர் தொகை பெருகப் பெருக எனுள்ளம் மகிழும்—உமக்கும் பதவி உயர்வு கிடைத்திடும்.

"சிற்சில சமயங்களில் நீங்கள் தவறுகள் செய்திடக்கூடும். குற்றமற்றோரைக் கொன்றிடக்கூடும்! கவலைவேண்டாம். தரையில் உருளும் தலைகளின் தொகை பெருகப்பெருக உம்மைப் பாராட்டுவோம்—அரசினை உமக்குத் துணைநிற்கச் செய்வேன்.

"சிறையிலே சிலர் உண்ணாவிரதம் இருக்கின்றனராம்—சாகட்டும் அவர்கள்! இதுவரை இறந்தோர் சிலர்! சிலர்தான் என்பதற்காகவே நான் வருந்துகின்றேன்.

"நம்மிடமிருந்து தப்பி, எப்படியோ கப்பலேறிவிட்டனர் சிலர். அந்தக் கப்பலையே நடுக்கடலில் கவிழ்த்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன! இந்நேரம் அவர்கள் அலைகடலில் அகபபட்டுச் சுறுமீனுக்ும் திமிங்கலத்துக்கும், முதலைக்கும் மற்றுமபல பிராணிகட்கும் இரையாகியிருப்பர்!

"சிரம் கொய்தல் உமது கடன்—கருணை காட்டுவதன்று! கடமையாற்றிடுக, இரக்கம் காட்டாமல், எம்மனோர் உள்ளம் மகிழத்தகு வகையில்!"

—இப்படியொரு உரை நிகழ்த்தப்பட்டது அங்கே!

யாரந்த வன்கணாளன்,—அவன் கொடுங்கோல் மன்னனா? அல்லது கொள்ளைக்கூட்டததின் தலைவனா? கொடுமையின் எல்லைக்கு அவன் சென்றுவிட்ட காரணம்?—இரத்த வெறியா? அன்றி, எதற்காகவோ பழிவாங்கிடும் நோக்கமா,—எந்த நாட்டில் எந்த நூற்றாண்டில் நடைபெற்றது இந்தக் 'கோரத் தாண்டவம்'—என்று துடிதுடிப்போடு கேட்டிடத் தோன்றும், இந்த உரையினைக் கண்ணுறுகின்ற எவருக்கும்!

ஆனால், இந்த உரையை நிகழ்த்தியவன் கொடுங்கோலனோ, கொள்ளைக் கூட்டத்தின் தலைவனோ அல்ல! மக்களுக்குப் பாதுகாபபு அளிக்கும் பணியில் அமர்த்தப்பட்ட போலீசுக் காவலன்!

உரை நிகழ்த்தப்பட்டது, அயர்லாந்து நாட்டின் தலைநகராம் டப்ளின் நகரத்தில்-1920-ஆம் ஆண்டில்!

அந்த நகரத்து மக்கள் செய்த 'மகத்தான குற்றம்! நாட்டு விடுதலைக்காகப் போராடியது!

* * *

அயர்லாந்து சின்னஞ்சிறிய நாடுதான்--சென்னை மாநிலத்தில் பாதியிருக்கும், பரப்பளவில்.

ஜனத்தொகையும் குறைவுதான்—ஏறக்குறைய 30 இலட்சம்.

ஆனாலும் விடுதலைப்போரில் அந்த நாடு காட்டியிருக்கிற வீரம்—கொட்டியிருக்கும் குருதி—பட்டிருக்கும் அல்லல் — பலிகொடுததிருக்கும உயிர்கள்—இத்தனையையும் எண்ணிப்பார்த்திடுகின்ற எவரும் வாயைப் பிளந்திடுவர், வியப்பால்!

ஒரு பரம்பரை இரண்டு பரம்பரைகளல்ல, ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்றது அதன விடுதலைப் போராட்டம்.

கோழையை வீரனாக்கிடத்தக்க நிகழ்ச்சிகள்—கன்னெஞ்சத்தினனையும் உருக்கி, அவன் கண் வழியே செந்நீர் பெருகிடச்செய்யும் உருக்கமிக்க காட்சிகள்—விடுதலை வேட்கையின உத்வேகத்தை உணர்த்திடவல்ல கட்டங்கள் — எழுச்சிபெற்ற இனத்தை ஒடுக்கிடவல்ல சக்தி உலகில் இல்லையென்று செப்பாமல் செப்பி நிற்கும் செங்குருதிப் 'படையல்'கள் — இத்தனையையும் அது சந்திக்க வேண்டியிருந்தது, அந்த முந்நூறு ஆண்டுகளில்!

கொள்ளையிடுவதற்குச் சிறந்ததோரிடம் அயர்லாந்து, என்று இறுமாப்போடும் ஏளனத்தோடும் கூறினான் ஆங்கிலேய மனனன் வில்லியம் ரூபஸ் எனபான்!

அயர்லாந்து மக்கள் கருணைக்கு உரியவரல்லர்—சித்திரவதைக்கு உள்ளாக்கபபடவேண்டியவர்—என்று எலிசபெத் இராணியாருக்கு ஆலோசனை கூறினான் ஜான் டேவிஸ் எனபான்!

கொடுங்கோல்மன்னர்தம் பிடியிலிருந்து ஆங்கில நாட்டை மீட்டு, அந்த நாட்டு வரலாற்றில் அழியாத ஒரு இடத்தைப் பெற்றிருக்கின்ற ஆலிவர் கிராம்வெல் எனபானும் அயர்லாந்தைப் பொறுததரை கொடுங்கோலனாகவே இருந்தான்—அந்த நாட்டுப் பெண்டிரைப் பல்லாயிரக் கணக்கில் கப்பலேற்றி ஜமைகா என்னும் தீவில் விற்றிட வகைசெய்தான!

இங்ஙனம் ஆங்கிலேயர் கரத்தில் அந்த நாடு சிக்கித் தவித்தது—சின்னாபின்னப்படுத்தப்பட்டது!

நாடு குமுறும் எரிமலையாகியது! அந்த எரிமலை எப்போதும் வெடித்திடலாம், தீக்குழம்பு கக்கப்படலாம் என்ற நிலை!

ஏகாதிபத்திய மமதை இங்கிலாந்தின் கண்களை மறைத்தது. விடுதலை வேட்கை மக்களுள்ளத்தில் ஆழப் பதிந்திருப்பதை அது உணரவில்லை!

எனவே, திடீரென்று ஒரு நாள்—ஏகாதிபத்திய வாதிகள் எதிர்பாராத வகையில் — அயர்லாந்து ஆர்த்தெழுந்தது! 1782-ஆம் ஆண்டில்!

பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் கூடினர் டப்ளின் என்னும் நகரில்! அங்கே விடுதலை முழக்கம் செய்யப்பட்டது!

நாட்டை மீட்டிடும் பணிக்குத் தம்மைத் தத்தம் செய்திடும் திடசித்தத்தோடு இருந்த அந்தத் தொண்டர்களின் தலைவர்கள் இருவர்—வால்டேடோன் என்பாரும், எட்மண்ட் பிட்ஸ்கெரால்டு என்பாரும்!

தொண்டர்கள் படைக்கலன் ஏந்தினர்—ஏகாதிபத்தியத்தைப் பூண்டோடு ஒழித்துவிடுவதென்று உறுதியும் பூண்டனர்.

ஆனாலும் அவர்களது முயற்சி முறியடிக்கப்பட்டது—அனைவருமே தூக்கிலிடப்பட்டனர்.

முயற்சி முறியடிக்கப்பட்டது மட்டுமல்ல—உறங்கிக் கொண்டிருந்த புலியைத் தட்டி எழுப்பிவிட்டதைப் போன்ற நிலை ஏற்பட்டுவிட்டது!

உறங்கிக்கொண்டிருந்த ஆங்கில ஏகாதிபத்தியம் விழித்தெழுந்தது-அயர்லாந்து என்றென்றும் தங்களுக்கு அடிமை நாடாய் இருந்திட என்னென்ன செய்தாகவேண்டும்என்னும் ஆராய்ச்சியிலே ஈடுபட்டது.

1800-ஆண்டு, யூனியன் சட்டம் என்றொரு சட்டம் இயற்றப்பட்டது!

அதன் பலனாக அயர்லாந்துக்கென்று தனியாக இருந்த பாராளுமன்றம் போய், அந்த நாட்டுப் பிரதிநிதிகள் இங்கிலாந்துப் பாராளு மன்றத்தில் இடம் பெறும் இக்கட்டான நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் உறுப்பினர் தொகை 500க்குமேல் — அதில் அயர்லாந்து நாட்டின் உறுப்பினர் தொகை ஏறக்குறைய 100! எனவே இவர்களது குறைகளும் கோரிக்கைகளும் ஏடுபடாத நிலை!

இந்தச் சூதுநிறைந்த சட்டம் நிறைவேற்றப் படுவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் பலருக்கு ஏராளமான இலஞ்சம் வழங்கப்பட்டதாம்!

"இதைவிட மோசமான, அருவருக்கத்தக்க நிகழ்ச்சி மனித வரலாற்றிலேயே நிகழ்ந்ததில்லை"

என்று, ஆங்கில நாட்டின் முதலமைச்சராக இருந்த கிளாட்ஸ்டன் என்பாரே மனமுருகப் பேசியிருக்கிறார்—வேறெங்குமல்ல, இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில்!

இத்தகைய சூதுவாதுகளையும், தில்லுமல்லுகளையும் கண்ட அயர்லாந்து மீண்டும் கொதித்தெழுந்தது. 1803-ம் ஆண்டில் ராபர்ட் எம்மெட் என்பார் தலைமையில்!

பலதொண்டர்கள் சேர்ந்தனர், அவரது ஆணைக்குக் கட்டுப்பட்டு. தலைநகரைத் தாக்குவதெனத் திட்டம் தீட்டப்பட்டது.

ஆனாலும் எப்படியோ திட்டம் வெளியாகி விட்டது!

மீண்டும் இரத்தக்களறி—இந்தச் 'சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டோர் அனைவரும் தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்டனர், ராபர்ட் எம்மெட் உட்பட!

"எனது தாயகம் விடுதலைபெற்று, உலக நாடுகளுக்கிடையே தலைநிமிர்ந்து நிற்கின்ற காலம் வரும் வரை, எனதுகல்லறையில் என்னைப்பற்றி ஒன்றும் எழுதாதீர்கள்!"

என்று அவன் தூக்கு மேடையிலிருந்து தன் நாட்டு மக்களுக்குப் பிறப்பித்த உருக்கமான கட்டளை எண்ணற்றோர் இதயங்களைக் கவர்ந்தது—தட்டி எழுப்பியது!

கன்னியர்—கட்டிளங்காளையர்-வயோதிகர்—சீமான்கள், சோற்றுக்கு வழியற்றோர் — பாட்டாளிகள்—பஞ்சைபராரிகள் —அனைவருள்ளத்திலும் சுதந்திரத் தீ!

அணைத்திட யாரால் இயலும்? ஆங்கில ஏகாதிபத்தியம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல! கட்டவிழ்த்து விடப்பட்ட புதுப்புதுச் சட்டங்கள் — விதிக்கப்பட்ட புதிய புதிய தடைகள் எண்ணிறந்தன?

நாட்டு விடுதலைபற்றிப் பாராளுமன்றத்தில் பேசியதற்காகச் சிறைக்கோட்டத்தில் தள்ளப்பட்டான் ஒருவன்!

விடுதலையின் மேன்மையை, மாண்பை, விளக்கிடு

இன்ற ஏடுகளை வைத்திருந்த 'குற்றத்'திற்காக காராக்கிரகத்தில் அடைபட்டோர் பலர்!

தேசிய கீதம் பாடுவது குற்றம்—தேசியம்பற்றிப் பேசுவதே குற்றம்!

தேசியக் கொடியைப் பறக்கவிடுவது மன்னிக்க முடியாத குற்றம்!

"அயர்லாந்து ஒரு நாடு" என்றெரு திரைப்படமாம் —அதற்குத் தடை!

"ஈஸ்டர் வீக்" என்றெரு அழகிய பாடல்—அதைப் பாடினல் 5-பவுன அபராதம்!

"நான், சின் பீன் இயக்கத்தவன்" என்றெரு பாடல் —அதைப் பாடியோருக்கு 2 பவுன் அபராதம்!

அயர்லாந்து நாட்டின் விடுதலை இயக்கமாம் "சின் பீன்" "நமக்கு நாமே" — இயக்கம் தோற்று விக்கப்பட்டதே அமெரிக்காவில், அயர்லாந்திலல்ல! அந்த அளவுக்குத் தடை உள்நாட்டில்!

பேரறிஞர் பெர்னர்ட்ஷா போன்றவர்களேகூட எதிர்த்தார்கள் அந்த இயக்கத்தை! "சின் பீன் இயக்கத்தவர் முட்டாள்கள்" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னர் அவர்!

ஆனலும் இவைமனைத்தையும் மீறி அந்த இயக்கம் வளர்ந்தது—வலுப்பெற்றது!

அந்த இயக்கத்திற்குத் துணைநின்றது "இளைஞர் முன்னணி" என்றெரு இயக்கமும், "மகளிர் முன்னணி" என்ற இயக்கமும்.

நாடெங்கணும் — மூலைமுடுக்குகளிலெல்லாம்— விடுதலைத்தீ கொழுந்துவிட்டு எரிந்தது, முன்னிலும் ஒளியுடன்!

மாவீரர் பலர் இடைத்தனர்; மக்களை, விடுதலை இயக்கத்தினை, நடத்திச் செல்ல! "அயர்லாந்தின் நெப் போலியன்" என்று அழைக்கப்பட்ட மேக்ஸ்வினி என் பாரும், மிகச் சிறந்ததோர் இராஜதந்திரி என்று பெயர்பெற்ற டிவேலரா என்பாரும் அவர்களிலே முக்கியமானவர்கள்!

புரட்சி செய்திடப் பக்குவமான நேரம் வரட்டும் என்று ஏக்கத்துடன் காத்திருந்தது நாடு!

முதல் உலகப் பெரும்போர் துவங்கியது— இங்கிலாந்து அதில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது!

போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது — 1916ல்—தலைநகர் கைப்பற்றப்பட்டது, புரட்சியாளர் களால்!

அயர்லாந்து சுதந்திரம் பெற்ற நாடு, என்று பிரகடனம் செய்யப்பட்டது!

ஆனல் பிரகடனம் செய்யப்பட்ட சிலமணி நேரத்திற்குள்ளாகப் புரட்சியாளர்கள் கைது செய்யப் பட்டனர், ஆங்கிலப் படையால்!

இம்முறையும் இரத்தக்களறி — சிறைச்சாலை— தூக்குமேடை!

தூக்குமேடைக்கு அனுப்பப்பட்டனர் சில தலை வர்கள்--சிறைக்கோட்டத்தில் தள்ளப்பட்டுச் சித்திர வதைக்கு ஆளானேர் சிலர்.

ஊர்முழுதும் தூய்மைபெற
உழைக்கின்ற தோட்டியெங்கள்
சீர்குலைந்த வாழ்க்கையினைச்
செப்பனிடல் எந்நாளோ?

டிவேலரா கூடத் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டார். ஆனல் கடைசி நிமிஷத்தில் தண்டனை குறைக்கப்பட்டு ஆயுள் தண்டனையாக மாற்றப் பட்டது!

சிறைச்சாலையிலிருந்த டிவேலரா எப்படியோ தப்பிவிட்டார். அவர் தப்பிய செய்தியறிந்ததும் நாடெங்கணும் வலை வீசப்பட்டது அந்த மாவீரனைக் கண்டுபிடிக்க.

ஆனல் எவர் கண்ணிலும் அகப்படாமல், எப்படியோ கப்பலேறி அமெரிக்கா சென்றுவிட்டார் அவர்.

தாயகத்தை மீட்டிடும் பணிக்கு ஆதரவு தேடும் பணியிலும், பொருள் திரட்டுவதிலும் மும்முரமாக இறங்கினர் அவர்.

தாய் நாட்டில் மேக்ஸ்வினி! — கடல் கடந்து டிவேலரா!

விடுதலை வேட்கை தணிந்திடவில்லை — ஆர் வத்தீ அணைந்துவிடவில்லை.

"ஆயுதந்தாங்கி நாம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தது போதும்—அமைதியான முறையிலேயே இனிப் போராடுவோம். உலகத்தின் கண்களை ஈர்த் தோம் இதுவரை, பெருமைப்படுகிறேன். ஆனல் அதுமட்டும் போதாது. உலகத்தின் கருத்தைக் கவர வேண்டும்—உலக மக்களின் கருணையைப் பெற்றாக வேண்டும். பலாத்காரமற்ற போராட்டமே அத்தகு ஆதரவினை நமக்குப் பெற்றுத்தரவல்லது" என்று மேக்ஸ்வினி நாடெங்கும் பிரசாரம் செய்தார்!

பாராளு மன்றத்திலே நுழைவது—அங்குபோய் விடுதலை முழக்கம் செய்வது—என்ற திட்டமும் தீட்டப்பட்டது விடுதலை இயக்கத்தவரால்!

முதலில் அவர்கள்மீது கண்டனக்கணை தொடுக்கப்பட்டது பலரால்! கேலிக்குரியவர் என்று பேசினர் சிலர்! பேசுவதாலே சுதந்திரம் பெற முடியுமாயின், பல்லாயிரக் காணக்கான உயிர்களைப் பலிகொடுத்திருக்க வேண்டியதில்லையே இதுவரை, என்று குதர்க்கம் பேசப்பட்டது, ஆங்காங்கே! இவர்களுக்கு விடுதலை வேட்கைபோய், பதவிவெறி வந்துவிட்டதோ என்று சந்தேகக் கண்களுடன் பார்த்தோர்—கோழைகள் இவர்கள், தம் குறையினை மறைக்க இப்படிக்குயுக்தி செய்திடுகின்றனர், என்று வாதிட்டோர்—இப்படிப் பலவகை!

என்றாலும் விடுதலை இயக்கம் வளர்ந்தது!

இல்லங்கள் தோறும் விடுதலை முழக்கம்! பள்ளிகள் அனைத்தும் விடுதலை இயக்கத்தின் பாசறைகளாயின! மாதாகோவில்களில் மகேசுவரன் தொழுகையைவிட, தாயக விடுதலை பற்றிய தர்க்கங்களே முக்கிய இடம் பெற்றன.

தேர்தல் வந்தது; 1920-ல்—நகராண்மைக் கழகத் தேர்தல்தான், பாராளுமன்றத்திற்கான தேர்தல் கூட அல்ல!

ஆனாலும் அந்தத் தேர்தல் விடுதலை இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு இருக்கிறதா இல்லையா என்பதை நிர்ணயித்திடுகின்ற சாதனம் என்று கருதினர் ஏகாதிபத்திய வாதிகளும், விடுதலை முகாமினரும்!

எனவே, ஏகாதிபத்தியம் அடக்குமுறைகளை அள்ளி வீசியது! கூடிப் பேசிடத் தடை! சந்து பொந்துகளிலும் சந்தைக் கூடங்களிலும் போலீசார் நிறுத்தி வைக்கப்பட்டனர், படை படையாக! விடுதலை இயக்கத் தலைவர்கள், தமது வீடுகளிலேயே சிறை வைக்கப்பட்டனர். தீவிரத் தொண்டர்கள் காராக்கிரகத்தில் தள்ளப்பட்டனர்! பத்திரிகை அலுவலகங்கள் சூறையாடப்பட்டன!

ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை எந்த அளவுக்குக் கட்டுமீறியிருந்தது என்பதைப்பற்றிய அருமையானதோர் படப்பிடிப்பை டெயிலி நியூஸ் என்னும் ஒரு இதழ்—இலண்டனிலிருந்து வெளியிடப்படுகிற ஏடு—கொடுத்திருக்கிறது.

"டப்ளின் நகரில், மக்களெல்லாம் படுத்துறங்கச் சென்ற பிறகு, குதிரைப்படை கட்டவிழ்த்து விடப்படும். லாரிகள், டாங்குகள், ஆயுதங்களை ஏற்றிக்கொண்ட கார்கள், இத்தனையும் புறப்படும். எவரெவரைத் தேடிப் பிடித்திடவேண்டும் என்ற ஒரு பட்டியலுடன்!......நள்ளிரவில் பற்பல மைல் தொலைவில் கேட்கக்கூடிய அளவு டாங்குகள் அலறும்......அந்த அலறலில் சூறையாடப்படும் வீடுகளிலிருந்து கிளம்பும் அபயக்குரல் அமிழ்ந்துவிடும். சூறையாடுகின்ற முறையோ சொல்லுந் தரமன்று. கதவுகளை இடிப்பர். உள்ளே இருப்பவர்—பெண்டிர் உட்பட—உடையினைச் சரிசெய்துகொள்ளக் கூட நேரமிருக்காது! அதற்குள் கதவு உடைக்கப்படும். துப்பாக்கியைக் காட்டியவண்ணம் உள்ளே நுழைவர் சிப்பாய்கள். 'வாரண்ட்' எதுவும் காட்டப்பட மாட்டாது......பெரும்பாலான சமயங்களில் இத்தகைய கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டோர் பெண்கள்—அதிலும் எழிலும் இளமையும் கொண்டோர், அதுபோன்ற சமயங்களில் அந்தப் பெண்டிரிடம், இராணுவ உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் எந்த அளவு 'நாணயத்'தோடு நடந்திருப்பர் என்பதை எண்ணிப் பார்க்கவே மனம் கூசுகிறது!"

ஏகாதிபத்தியத்தின் இந்தக் கோர தாண்டவம் மக்களுள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்தவில்லை—மாறாக அந்த வீரர்கோட்டம் ஆர்த்தெழுந்தது!

பன்னிரண்டு நகராண்மைக் கழகங்களில், பதினொன்று விடுதலை இயக்கத்தினர் வசமாயிற்று!

ஏகாதிபத்தியம் வெகுண்டது, மறுபடியும் அடக்குமுறை ஆர்ப்பாட்டம்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஆற்றப்பட்ட உரைதான் முதலில் எடுத்துக்காட்டப்பட்டிருப்பது—கொடூரத்தின், சிகரமென விளங்கிடுவது—ஏகாதிபத்திய வெறியினை விளக்கிடவல்ல, ஈடு இணையற்றதோர் எடுத்துக்காட்டு!

எனினும் மக்களெழுச்சியின் முன்னால்—அவர்கள் நடத்திய அமைதியான போராட்டத்தின் முன்னால்—ஏகாதிபத்தியம் தவிடு பொடியாயிற்று.

அயர்லாந்து டொமினியன் அந்தஸ்தைப் பெற்றது, 1922-ம் ஆண்டில்!

பிறகோர் பத்து ஆண்டுகள்—போராட்டமனைத்தும் பாராளுமன்றத்திற்குள்!

முடிவில் விடுதலை இயக்கத்தின் தலைவர் டிவேலரா அயர்லாந்தின் ஆட்சிப்பீடத்திலே அமர்த்தப்பட்டார்—அந்த வீரர்கோட்டம் விடுதலை பெற்றது!



"முள்வேலி போடலாமா?"

"சேச்சே! பட்டணத்திலே முள்வேலியா? போட்டால், பத்தடிக்கு ஒரு காங்க்ரீட் தூணை நிறுத்தி, முட் கம்பியை இழுத்துப் பிடித்துக் கட்டினுல், ஒரு பத்து வருஷத்திற்குக் கவலை இல்லை!"

"சரியாய்ப் போச்சு! சென்னை நகரத்திலே முள்வேலி அநாகரிகம். அதற்காக முட்கம்பி போட்டு வேலி கட்டினுல் செலவுதான் மிச்சம்! வேலி போடுவது ஆடு, மாடு வராமல் தடுக்கவா? சென்னையில் அவைகள் ஏது? திருடனைத் தடுக்க இந்தக் கம்பி வேலை எம்மாத்திரம்? வரும்போதே கையில் கொறடு எடுத்துக்கொண்டு வரும் இந்தப் பட்டணத்துத் திருடர்களிடமிருந்து தப்ப, நல்ல இரட்டைக்கல் சுவர் கட்டி, மேலே கண்ணுடித் துண்டுகளை ஒட்ட வைத்தால்தான் செய்கிற செலவுக்குப் பயன் உண்டு!"

"அந்தச் சுவர்கூட 3 அடி நாலடி இருந்து பிரயோசனமில்லை. குறைந்தது ஐந்தடி இருக்க வேண்டும்!"

இப்படி வீடுகட்ட நிலம் வாங்கியவன், சுற்றுச் சுவர் கட்டுவதிலேயே கவனம் செலுத்தி, முடிவில் வீடுகட்டப்பணமில்லாமல் தவித்தது மாத்திரமின்றி, சுற்றுச் சுவர் கட்டியதற்கு ஆன செலவை ஈடு செய்ய, நிலத்தையே விற்க நேர்ந்ததாம்! "அழகான காம்பவுண்ட் சுவர்! அருமையான வேலைப்பாடு கொண்டவாயில்!! ஆணித்திறமான காங்க்ரீட் கேட்"!! இப்படிப்பட்ட சுற்றுச்சுவர் கட்டிவிட்டால், வீட்டைப் பூட்டிப் போட்டுவிட்டு ஆறுமாதம் கூடக் 'காசியாத்திரை' போய்வரலாம் என்று அதன் பாதுகாப்புத் தன்மையை வியந்து பேசியவர்களெல்லாம், மனை ஏலத்திற்கு விடப்பட்ட நேரத்திலே, ஓரத்திலே நின்று, ஒய்வாக "அடபாவி! கையிலே இருந்த காசைப்போட்டு இப்படிச் சுற்றுச் சுவர் கட்டுவானேன்? கடன் வாங்கி வாயில் அமைப்பானேன்? மூளையை அடகுவைத்து விட்டா இந்த வேலையைத் துவக்கினுன்? "கல்யாணம் பண்ணிப்பார்; வீட்டைக் கட்டிப்பார்!" என்பார்களே? அதுபோல் திட்டமிட்டு வீடு கட்டிவிட்டு, மிகுந்த பணத்திற்கல்லவா வேலி போடவேண்டும். இப்படிப் பைத்தியக்காரத்தனமாகச் செய்துவிட்டு, இன்று ரோடிலே நிற்கிருனே—பாவம்—பரிதாபம்!" என்று கூறுவர். மூன்ருவது மனிதராக நாமுமிருந்தால் அவர்கள் கூறுவது சரிதான் என்று தலையை ஆட்டிவிட்டுப் போய்க்கொண்டே இருக்கலாம். ஆனுல் நாமே அந்த முட்டாள்தனத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்களாக இருந்தால்......?

* * *

ஏக இந்தியாவின் எல்லைக்கோட்டைப் பாதுகாக்க இந்தியப் பேரரசு நிர்மாணித்து வரும் படைபலத்தைக் கவனிக்கும்போது வேலிகட்டப்போய் வீட்டை இழந்தவன் கதைதான் நம் நினைவுக்கு வருகிறது.

மக்களுக்கு அமைதியும் இன்பமுமான வாழ்க்கை அளிப்பதுதான் உலகத்தில் உள்ள அத்தனை தலைவர்களின் எண்ணமும் நோக்கமும். அரசாங்கங்களும், தனிப்பட்ட பல்வேறு நிறுவனங்களும் இந்த நோக்கத்திற்காகவே நிறுவப்பட்டவை. சமுதாயத்தில் நேர்மையும் நீதியும் நிலைக்க அரசாங்கங்கள் உருவாக்கப்பட்டன. அரசாங்கங்கள் உள்நாட்டிலே அமைதி நிலவவும், வெளிநாட்டிலிருந்து வெறிகொண்டோர் படையெடுக்காமல் தடுக்கவும் தேவையான அளவு படையை அமைத்துக்கொண்டன. நாளாவட்டத்தில் படைபலம் அதிகமானவன், எளிய நிலையில் இருக்கும் அடுத்த நாட்டை ஆக்ரமிப்பதும், அப்படி அடிமைப்பட்ட நாடு குமுறி எழுந்து போராடுவதும், இப்படி மக்களின் இன்பத்தைப பாதுகாக்க நிறுவப்பட்ட இராணுவம், அதை அழிக்க ஆரம்பித்து, நாடெங்கிலும துன்பத்தைப் பரப்பியது.

படையைப் பலப்படுத்த மக்களின் இன்றியமையாத தேவைகள்கூடப் புறக்கணிக்கப்பட்டது.

சமீபத்தில் ஒரு அமெரிக்க டாக்டர் சுட்டிக் காட்டியது போல், "ஒரு சப்மரீன் கட்ட ஆகும் செலவு,

உலகம் பூராவும் புற்றுநோய் தீரச் செலவிடப்படும் பணத்தை விட அதிகமாகும்!" இந்த உதாரணத்தை வழிகாட்டி யாக வைத்துப்பார்த்தால், உலகம் பூராவும் எத்தனை கோடிக்கணக்கான ரூபாய்கள் படைபலத்திற்காகச் செலவிடப்படுகிறது என்று உணரலாம். மக்களின் வறுமையைப் போக்கவும், பிணியைத் தீர்க்கவும் இன்பத்தை வளர்க்கவும் பயன்படவேண்டிய, கணக்குப போட்டுப் பார்க்கமுடியாத அளவு பணம், இராணுவத்திற்காக ஆண்டுதோறும் செலவிடப் படுகிறது. நாட்கள் ஓட, ஓட, செலவின் அளவும் ஏறிக்கொண்டே இருக்கிறது.

இந்தத் தற்கொலைப்போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டியது, மனிதாபிமானம் கொண்டவர் ஒவ்வொருவரின கடமையாகும். வறுமையில் வதியும் நம் சகோதர மக்களுக்குப் பசிதீர்க்கச் சோறு தேவையா? அல்லது ஒரு புதிய கப்பற்படை நம் நாட்டிற்குத் தேவையா? அறியாமையில் அவதியுறும் நம் தோழர்களுக்கு அறிவொளி வீசும் பள்ளிகள் தேவையா? அல்லது புதியதொரு விமானப்படை தேவையா? நாள்தோறும் அவதியுறும் பிணியாளர்கள் குறை தீர்க்கும் மருத்துவ நிலையமா? அல்லது பட்டாளத்தினர் குவிந்துகிடக்க நிலையங்களா? எது கட்டப்பெற வேண்டும்? இப்படி நாட்டு மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் திட்டங்களைத் தீட்டுவது மேலா? அல்லது நமது படைபலத்தைப் பெருக்குவது மேலா என்பதை நாம் சிந்தித்து முடிவு காண வேண்டும். இல்லையேல், வேலி கட்டப்போய் வீடு இழந்தவனைப்போல, இராணுவம் வளர்ந்து மக்கள் மடிந்துபோன நாடாக, இந்நாடு ஆகிவிடும் நிலை தான் ஏற்படும்!



முடியை அலங்கரித்து
முகந்திருத்தி எழில்தருவோம்;
அடிமை நிலைமாறி
விடுதலையைக் காண்போமோ?

நமது இந்திய துணைக்கண்டத்தின் 1957-58 ஆண்டுச் செலவு ரூ. 668-கோடி ஆகும். அதில் 252-கோடி ரூபாய்களை இராணுவம் விழுங்கி இருக்கிறது! இந்த ஆண்டில் இட்டத்தட்ட முந்நூறு கோடி ரூபாய்களை எட்டும் என்று தெரிகிறது.

அகிம்சைத் தத்துவத்தையும், அதை உலகுக்களித்த காந்தியாரையும் மூச்சுக்கொரு தடவை பேசும், இந்த 'மகாத்மா சீடர்கள்' இராணுவத்திற்கு மக்களின் வரிப்பணத்திலே நூற்றில் நாற்பது பங்கைத் துப்பாக்கியும் வெடிகுண்டும வாங்குவதில் செலவழிப்பதைப் பார்க்கும்போது, மனிதன் மேலேயே நமக்கு நம்பிக்கை குறைகிறது. பட்டி தொட்டிகளிலெல்லாம் சென்று, "பாரீர், எங்கள் மகாத்மாவை! அரை வேட்டியுடுத்தி, சுட்டுவிரலால் மக்களை அடக்கி, மோகனப் புன்னகையின் மூலமே வெள்ளையனை மடக்கிச் சுதந்திரம் பெற்றுவிட்டார்! அகிம்சையை உயிர்க்கொள்கையாகக் கொண்ட ஆத்மார்த்திகத் தலைவன்!" என்றெல்லாம் வானளாவப் பேசிவிட்டு, இன்று முந்நூறு கோடி ரூபாய்களை வெடிகுண்டுகள் வாங்குவதற்குச் செலவு செய்தால் அதற்குக் 'கபடம்' என்றுகூறுவதா? அல்லது எந்த வார்த்தைகொண்டு அவர்கள் செயலை விளக்குவது என்றே தெரியவில்லை.

பதினொரு ஆண்டுகளுக்குமுன் வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட காலததில், அவன் வைத்திருந்த இராணுவததிற்குக் குறிப்பிட்ட ஒரே வேலை தான் இருந்தது. அதாவது இந்திய உபகண்டத்தின்மேல் யாராவது அந்நிய நாட்டார் படையெடுத்தால், அவர்களை எல்லையிலே சில நாட்களுக்கு தடுத்து நிறுத்திவைக்க வேண்டியதாகும். விரைவில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் படைகள் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து, படையெடுத்தவனோடு போர்புரிந்து, எல்லைக்குள் எவனையும் நுழையா வண்ணம் பாதுகாக்கும். இந்த அடிப்படைக்கொள்கையின்பேரில்தான் பிரிட்டிஷ், இந்தியாவின் போர்ப்படைகள் தேவையான அளவு நிறுவப்பட்டு வந்தன. அன்றைக்கு இருந்தளவு, குறைந்தளவு சைன்யம் இன்றுமிருக்கலாம் என்று நாம் கூறவில்லை. ஆனல் இன்றைக்கு ஏராளமான பொருட் செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சைன்யத்தின் அடிப்படை நோக்கம் என்னவென்று நமக்கு இன்னும் தெளிவாக்கப்படவில்லை. சுதந்திரம் கொடுப்பதற்குமுன் இந்தியா, பாகிஸ்தான், இருநாடுகளுக்கும் சேர்த்து இராணுவச் செலவு எழுபது கோடிக்குமேல் போகாது என்று, அன்று டில்லியிலிருந்த அரசாங்கம் அறிவித்தது. அவ்வளவு குறைந்த அளவில் கூறப்பட்ட இராணுவச் செலவு இன்று ஐந்து பங்கு அதிகமாகி இருக்கிறது — அதுவும் பிரிக்கப்பட்ட இந்தியாவிற்கு மாத்திரம்! பாகிஸ்தானமும் இராணுவத்தின்மீது எண்பது கோடி ரூபாய்கள் செலவிடுகிறது. இந்தக் கோர நிலை ஏற்படக் காரணம் என்ன? இராணுவத்தைப் பொறுத்தவரை நமது அடிப்படைச் கொள்கை என்ன?

உலக சமாதானத்தைப் பாதுகாக்க நிறுவப்பட்டிருக்கும் சர்வதேசியச் சபையில். நாமும் ஒரு உறுப்பினர். காந்திய வழியில் நாட்டைச் செலுத்துவதாகவும், உலகத்தில் நமக்கு யாருமே பகைவர்கள் இல்லை என்றும் பெருமையோடு நேரு பண்டிதர்

கூறிக்கொள்கிருர். நாம் எந்த வல்லரசுகளோடும் சேர்ந்து கொண்டு உலக அரங்கில் ஆபத்தான நிலையில் இல்லை. நமக்கே உரித்தான சர்வோதய வழியில் நாட்டை முன்னேற்றி, உலகத்திற்கு நம்மாலான கைங்கர்யத்தைச் செய்து வருவதாக நம்மை ஆளவந்தவர்கள் கூறுகின்றனர். இந்தச்சூழ்நிலையில் யாரை எதிர்க்க இவ்வளவு பெரிய இராணுவத்தை நாம் அமைக்கிருேம?

சென்ற உலகப் போர் முடிந்த பிறகு இரஷ்யாவிற்கும் மேற்கத்திய வல்லரசுகளுக்கும் 'கொள்கை' மேல் பிளவு ஏற்பட்டது. அந்தப் பிளவினுல் ஏற்பட்ட பலன்தான் சென்ற 14- ஆண்டுகளாக நாம் பார்த்துவரும் இராணுவ வளர்ச்சி ஆகும். நல்ல படைபலத்தோடு சமரசம் பேசினுல்தான, இரஷ்யா செவிசாய்க்கும என்ற தத்துவததின் பேரில்தான் அமெரிக்காகோடி கோடியாகப் பணத்தைக் குவித்து மேற்கத்தி நாடுகளின் படைபலத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தது.

"நம்மகையிலே நாலு காசு இருந்தால்தான் நம் வார்த்தைக்கு மதிப்பிருக்கும்!'' என்று நமதுகிராமத்தார்கள் கூறுவது போல, நமது இராணுவ பலத்தைப் பொறுத்தே இரஷ்யா அடங்கும் என்று அமெரிக்கர் நம்பினர். ஆனுல் பரிதாபகரமாக இன்றைக்கு அவர்களைவிடப் பன்மடங்கு ஆயுத பலத்தோடு இரஷ்யா நிற்கின்றது. சமீபததில் விடப்பட்ட செயற்கைச் சந்திரன், அமெரிக்காவின் ஆயுத பலங்களையெல்லாம் பலனற்றதாக்கி விட்டது!

அமெரிக்கா கற்ற பாடத்தை நாமும் அநுபவித்துத்தான் தெரிந்துகொள்ளவேண்டுமா? பாகிஸ்தானத்திடமிருந்து, இந்திய உபகண்டத்தைக் காப்பாற்றவே, இந்திய இராணுவம் பெரிதாக்கப்படுகிறது என்பது நமக்கு நனகு தெரிகிறது. இது சரியா, தேவையா என்பதே இன்றுள்ள பிரச்னை.

நவீன முறைப்படி தயாரிக்கப்பட்ட ஆயுதங்களைப் பாகிஸ்தானத்திற்குக் கொடுக்க, அமெரிக்கா முடிவு செய்தபோது, அதன் மனதில் இந்தியா இல்லை. இரஷ்யாவிற்குத் தெற்கில் இருக்கும் பாகிஸ்தானம் ஒரு இராணுவ தளமாகித் தங்கள் மேற்பார்வையில் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் அமெரிக்கா, பாகிஸ்தானத்திற்கு ஏராளமாக இராணுவ தளவாடங்களையும், வெடிகுண்டுகளையும் கொடுத்திருக்கிறது. ஆனுல் இந்தப்போராயுதங்களை இந்தியாவிற்கெதிராகப் பயனபடுத்த அமெரிக்கா ஒரு நாளும் சம்மதிக்காது என்று நிச்சயமாக நம்பலாம். சர்வதேசிய பிரச்னையில் நடுநிலைமை வகித்துக்கொண்டு, உள்நாட்டில் கம்யூனிசத்தை ஆதரிக்காத அரசாங்கம் டில்லியிலிருக்குமவரை, இந்தோ—பாகிஸ்தான்போர் ஏற்படுவதை அமெரிக்கா விரும்பாது. பாகிஸ்தானத்தைத் தூண்டிவிட்டு இந்தியாவின கோபத்தைப் பெறுவதில் அமெரிக்காவிற்கு எந்த இலாபமும் கிடையாது என்பதோடு, அப்பேற்பட்ட போர் மூண்டால், இந்தியா இயற்கையாகவே மாஸ்கோவின் உதவியை நாடிச் செல்லும் என்ற சாதாரண அரசியல் இலக்கணம் கூடத் தெரியாதவர்கள் வாஷிங்டனில் அரசாளவில்லை. எனவே சர்வதேசிய அரசியலில் ஏற்பட்ட வேறுபாடு காரணமாக, அமெரிக்காவின் ஆயுதங்கள் பாகிஸ்தானத்தில் கொண்டுவந்து குவிக்கப்படுகின்றன என்பதைச்

தோலைப் பதனிட்டுக்
காலணியாத் தந்துவிட்டு
நாளும் நலிகின்றேம்;
நன்மையென்று காண்போமோ?

சாதாரண அரசியல் வாதிகூடத் தெரிந்துகொள்ளலாம். அதைக்கண்டு பயந்து நாம் இராணுவச் செலவை அதிகப்படுத்துவது சரியா? உண்மையில் நாம் போட்டிபோடுவது அமெரிக்காவிடமே ஒழிய, பாகிஸ்தானத்தோடு அல்ல. அப்படியானுல் என்றைக்காவது ஒரு நாள், நாம் அமெரிக்காவோடு ஆயுதப் போட்டியில் வெற்றிகாண முடியுமா? அமெரிக்கரின் இராணுவத்தில் ஒரு பிரிவின் அளவு இராணுவத்தை இந்திய உபகண்டத்தில் உற்பத்தி செய்ய இன்னும் பத்து ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டால் கூட முடியாது!

சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாக வளர்க்கப்பட்ட சைன்யம், அமெரிக்கர்களுடையது. ஆகவேதான் நம்முடைய இராணுவ விஸ்தரிப்புத் திட்டம் நடைமுறைக்கொவ்வாதது என்று நாம் கூறுகிறேம். அதுவும செயற்கைச் சந்திரனும், அணுகுண்டும், நீர்வளிக்குண்டும் நிறைந்திருக்கிற இந்நாளில் நமமுடைய பழங்கால இராணுவ முறைகள் கொஞ்சம் கூடப் பலனளிக்காது. நினைத்த நேரத்திலே விரும்பிய வண்ணம் இராணுவ தளங்களைக் கட்டுவதும், முனபே இருக்கும் ஆவடிபோன்ற தளங்களை இடிப்பதும், புதிய ட்ரக்குகள் வாங்குவதும், பழைய ட்ரக்குகளை ஏலம்போடுவதும், மற்றநாடுகளில் வேண்டாமென்றும், நாள்பட்டது என்றும் தள்ளப்பட்ட போராயுதங்களை வாங்கி வருவதிலும் அடையும் இலாபத்தை மனதில்கொண்டு, இந்த நாட்டிலே உலவிவரும் அரசியல் நேர்மையற்றவர்கள் இராணுவச் செலவு அதிகரிப்பை ஆதரிக்கலாம். நூற்றுக்கு எண்பது பாகம இராணுவததில் இருக்கும் பஞ்சாபிகளும் மற்றும் பல வட இந்தியர்களும் இராணுவப் புனரமைபபில் ஏற்படும் சொந்த இலாபத்தைக் கருதி டில்லியின் திட்டங்களை ஆதரிக்கலாம். பிறந்ததிலிருந்தே முஸ்லீம்களோடு வெறுப்புணர்ச்சி

கொண்ட வட இந்தியர்களும், இரண்டாயிரம் மைலுக்கு அப்பால் இருந்துகொண்டு குமரிமுனை வரை ஆளவேண்டுமென்று திட்டமிடும் 'மாபெரும் தலைவர்களும் இராணுவச் செலவை அதிகப்படுத்திக்கொண்டு செல்லலாம். ஆனால் நேர்மையும், மனிதாபிமானமும் கொண்ட எவரும் இந்தத் தற்கொலைக் கொள்கையை ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

சென்ற பத்து ஆண்டில் இட்டத்தட்ட 2000-கோடி ரூபாய்களை இந்திய இராணுவம் விழுங்கி இருக்கிறது! இதிலே எந்தளவு பணம் ஒழுங்காகச் செலவிடப்பட்டது என்பது ஒரு புறமிருக்கட்டும். இந்தச் செலவில் குறைந்தது பாதி குறைத்திருந்தால் கூட, இன்றைக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றத் தேவைப்படும் எண்ணூறு கோடி ரூபாய்கள் இடைத்திருக்குமே! பணம் தேடிப் பல நாடுகளுக்கு நிதி மந்திரிகள் படையெடுக்கும் படலம் இருந்திருக்காதே! இந்த ஆயிரம் கோடி ரூபாய்கள் இருந்திருந்தால் இன்னும் 10-உருக்கு ஆலைகளை நிறுவி இருக்கலாம்; நூற்றுக்கணக்கான பல்கலைக் கழகங்களை நிறுவி இருக்கலாம்; பல்லாயிரக்கணக்கான கிராமங்களுக்குப் பாதைவசதி செய்து கொடுத்திருக்கலாம். எண்ணற்ற குடும்பங்களிலே மகிழ்ச்சியைத்தரும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கலாம். எல்லாம் பாழாகி, ஏதோ சில ஆயிரம் இராணுவ தளபதிகளின் வாழ்க்கை வளமாவதுதான் மிச்சம்.

உலகம் பூராவும் இராணுவ விஸ்தரிப்பு நடக்கும் போது நாம் மாத்திரம் எப்படிச் சும்மா இருக்க முடியும் என்று தோன்றலாம். ஆனால் மற்ற நாடுகள் தங்கள் அடிப்படைத் தேவைகளை மறந்துவிட்டு, இராணுவ விஸ்தரிப்பில் ஈடுபடவில்லை. பிரிட்டன் தன் செலவில் நூற்றில் இருபத்தேழு பாகம்தான் இராணுவத்திற்குச் செலவிடுகிறது. அப்படியே, நூற்றில் முப்பது பாகத்தைக் கனடாவும், பதினேழு பாகத்தை ஆஸ்திரேலியாவும், பன்னிரண்டு பாகத்தை நியூஜிலந்தும், செலவிடுகின்றன. இதை விடக்குறைந்த அளவில் ஸ்காண்டிநேவிய நாடுகளும் தென் அமெரிக்க நாடுகளும் செலவிடுகின்றன. ஆனால் நாமோ நூற்றில் நாற்பது பாகம் செலவிடுகிறோம். குறைந்தது இதில் பத்துப் பாகத்தைக் குறைத்துக்கொண்டால்கூட, நமது அபிவிருத்தித் திட்டங்களில் துண்டுவிழும் பணத்தைச் சேகரித்துவிடலாம்.

வீடு கட்டுவதை மறந்து வேலிகட்டியது போல், நாட்டு மக்களுக்கு நல்வாழ்வளிக்க மறந்து எல்லைக் கோட்டைக் காப்பதில் பயன் ஏதுமில்லை. முதலில் காப்பதற்கு இலக்கான செல்வத்தை நாடு பெற வேண்டும். அதற்கான திட்டங்களை நிறைவேற்றுவதை மறந்து, தங்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் இராணுவச் செலவை அதிகமாக்கிக்கொண்டு செல்கின்றனர், டில்லியில் வாழும் நம்மை ஆளவந்தவர்கள். இந்த அநீதியை வளரவிடுவது நாட்டுக்கு ஆபத்தானதாகும். இதைத் தடுக்கவேண்டியது நாட்டின் நல்வாழ்வில் அக்கரை கொண்டவர் செய்யவேண்டிய முதல் வேலையாகும்.

கூடை முறங்கட்டிக்
குவிக்கின்றோம்; ஆனாலும்
கும்பி நிறையுமென
நம்புவதற் கில்லைஐயா!



மாடுகன்று மேய்ப்போம்,
மந்தைகளைக் காப்போம்;
வீடுவாசல் இன்றி
வெட்டவெளியில் மாய்வோம்!

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

வருகிறது!
மெஜஸ்டிக் பிக்சர்ஸ்
நாட்டுக்கொரு
நல்லவள்
மெஜஸ்டிக்
பிக்சர்ஸ்
10. ஸ்மித் ரோடு
(மவுண்ட் ரோடு)
~ சென்னை ~
STUDIO

Regd. No. M. 4642. போன் நெ. 15

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

Wrapper Printed by Rangam Bros., Madras-2.